
GOKULAM

கோகுலம்

ஆகஸ்ட் 2002


ரூ.6/-



ரொனால்டோ
போஸ்டர்
பக். 40



இசையில் ஒரு 'பூங்காற்று!'




← அருகில் உள்ள குறிப்புகள் படி வண்ணம் தீட்டுங்கள்.


G - பச்சை

R - சிவப்பு

Br - மரக்கலர்

புள்ளிகளை இணையுங்கள்!





"கண் பார்வை சரியாகத் தெரியலைன்னு சொன்னியே, போய் டாக்டரைப் பார்த்தியா?"

"பார்த்தேனே! அவரும் மங்கலாகத்தான் தெரிஞ்சாரு!"

- சு. ஜெயகவிதா

பனித்துளி

காலைக் கதிரவனைக்
காணத் துடித்திருக்கும்
காலைக் கதிரவனைக்
கண்டால் மறைந்துவிடும்!


தொட்டு எடுத்திடுமுன்
துள்ளி உருண்டோடும்
மொட்டு அதன் அருகில்
முகத்தில் சிரிப்புதிர்க்கும்!

முத்து மணிவடிவில்
முன்னில் அதுநிற்கும்
நித்தம் அதிகாலை
நிழலில் நிறைந்திருக்கும்!

உறங்கும் இலைமீது
உருண்டு அது ஓடும்
உறங்கும் கதிர் எழுந்தால்
ஓடி மறைந்துவிடும்!

அழகனார்





கோகுலம்

மலர் : 20
இதழ் : 7

ஆகஸ்ட் 2002



கதைகள் :


படக்கதைகள் :

அறிவியல் :


வாசகர்களின் படைப்புகள் :

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
- பாரதியார்.





பயன்?



ஒரு பட்டுப் புழு மௌனமாகக் கூடு கட்டிக் கொண்டு இருந்தது. அதன் பக்கத்தில் ஒரு சிலந்தியும் வலை பின்னத் துவங்கியது.

பத்தே நிமிடத்தில் சிலந்தி வலையைப் பின்னி முடித்துவிட்டது. ஆனால் பட்டுப் புழுவோ மெதுவாக அப்போது தான் கூடுகட்ட ஆரம்பித்தது. உடனே சிலந்தி, பட்டுப்புழுவைப் பார்த்து கிண்டலாக ''ஏய், பட்டு! எவ்வளவு நேரமா நீ கூடு கட்டறே? சோம்பேறி! ஆனால் என்னைப் பார் பத்தே நிமிடத்தில் முடிச்சுட்டேன்!'' என்றது. பட்டுப்புழு மெதுவாகச் சிலந்தியைப் பார்த்து ''சிலந்தி! நான் கூடு கட்டறதாலே மத்தவங்களுக்கு நன்மை இருக்குது'' என்று நாசூக்காகச் சொன்னது. அப்போது அங்கு வந்த வேலையாள் சிலந்தி வலையைத் துடைப்பத்தால் அடித்துக் கலைத்தான். சிலந்திக்குப் புரிந்தது. தன்னால் பிறருக்குப் பயனில்லை என்று. பதில் பேசாமல் தப்பி ஓடிப் போனது.

கடுகுக் கதைகள்

எது அழகு?

சாந்தபுரி இளவரசி ஸ்வர்ணரேகா விற்குத் தன் அழகின் மேல் ரொம்பப் பெருமை. கர்வம் அதிகம். மமதையாக நடந்துக் கொள்வாள். ஒவ்வொரு நாளும் கண்ணாடி முன் நின்று தன் அழகைத் தானே ரசித்துக் கொண்டு தன்னைவிட உலகில் வேறு யாராவது அழகாக இருக் கிறார்களா? என்று கேட் பாள். ஒரு நாள் வழக்கம் போல் கண்ணாடி முன் நின்று கொண்டு அப்படி கேட்டபோது திடீரென்று ஒரு அசரீரி கேட்டது. ''உன்னைவிட அழகான வள் ஒருத்தி இருக் கிறாள்'' என்று சொன் னது. ''என்னைவிட அழகா? யார் அவள்?'' என்று கேட்டதும் ''நாளைக் காலை காண்பிக்கிறேன்'' என்று சொன்னது அசரீரி. அதி



காலையில் எழுந்துவிட்டாள் இளவரசி. இரவு பூராவும் தூங்கவே இல்லை. ''அந்தப்புரத்திற்கு வெளியே சென்று பார்'' என்றது அசரீரி. ஒரு சின்னஞ்சிறு சிறுமி செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள். ''இதோ பார்! இந்தச் சிறுமி தன் நோயுற்ற பெற்றோரைக் காப்பாற்ற அதிகாலையிலேயே எழுந்து உழைக்கிறாள். இதுவே அழகு. தன்னலமற்ற உழைப் பும் சேவையும் தான் அழகானது'' என்றது அசரீரி. இளவரசிக்கு 'அழகு' கர்வம் அழிந்தது. அந்தச் சிறுமியை அழைத்து ''தன்னலமற்ற சேவை தான் அழகு என்பதை உணர்த்திய உனக்குப் பரிசுகள் இதோ'' என்று கூறி பொன்னும் பொரு ளும் வழங்கினாள்.

— ஆர்.சாரதா,
சென்னை



பரிசு ரூ.100/-

ரமணி : டேய் மருது, மீன் தொட்டியில தண்ணிய மாத்திட்டியா?

மருது : இல்லண்ணா, போன வாரம் ஊத்தின தண்ணியையே அது இன்னும் குடிச்சு முடிக்கல!

- ந.வினோதினி,
ஒன்பதாம் வகுப்பு,
எம்.பி.என். அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
சென்னை.

சிரிப்போ சிரிப்பு!

பரிசு ரூ.50/-



- கோ. சந்தனக்குமார், தேனி

பரிசு ரூ.25/-

''உங்க வீட்டு வடகத்துல காரம் அதிகம் போட்டிருந்தயா?''

''எதுக்கு அப்படி கேட்கிற?''

''உங்க வீட்டுக்கு வந்துட்டுப் போற காக்கா எல்லாம் காகான்னு கத்தாம ஆ! ஆ!ன்னு கத்துதே!''

- காழி. ஆர்.சீதாராமன்,
சீர்காழி





பரிசு ரூ.15/-

''பரீட்சை சமயத்துல, கெட்டிக்காரப் பசங்க யாரும் நகம் வெட்டமாட்டாங்க.''

''ஏன் அப்படி?''

''கேள்விக்கெல்லாம் விடைகளை விரல் நுனியில வச்சிருப்பாங்களே!''

- சீர்காழி வி. ரேவதி, சிதம்பரம்




பரிசு ரூ.15/-

''என் வகுப்புல நான் ஜோக் சொன்ன உடனே ஒரே சிரிப்பு சத்தம்.''

''பரவாயில்லயே! அதை ஏன் சோகமா சொல்ற?''

''அந்த ஒரு சிரிப்பும் நான் சிரிச்சது.''

- தாரை மா. மகேஷ்ப்ரியன், சேலம்



'கல்' கரையுமா?

எங்கள் அறிவியல் ஆசிரியர் 'கரைசல்' பற்றிய பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது கரையும் பொருள்களுக்கு உதாரணம் சொல்லச் சொன்னார். நாங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் சொன்னோம். கடைசியாக ஒரு மாணவி ''கல்'' என்றாள். ''கல் எப்படி கரையும்?'' என்றார் ஆசிரியர். ''எங்க பாட்டிதான் 'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்' என்று சொன்



னாங்களே'' என்று கூற அனைவரும் சிரித்து மகிழ்ந்தோம்.

- நா. பாண்டியம்மாள்,
ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீசேது மாணிக்கம் உயர்நிலைப்பள்ளி,
மேலச்சீத்தை.

சிக்கல்

பள்ளியில் கடைசித் தேர்வன்று மாணவிகள் அனைவரும் எந்த ஊருக்குச் சென்று




விடுமுறையைக் கழிக்கப் போகிறோம் என்பது குறித்துப் பேசிக்கொண்டிருந்தோம். ஒரு மாணவி ''நான் சென்னைக்குப் போகிறேன்'' என்றாள். ஒருத்தி ''மும்பைக்குப் போகிறேன்'' என்றாள். மற்றொருத்தி ''நான் போறது சிக்கல்தான்!'' என்றாள். உடனே நாங்கள் கவலையுடன் ''என்ன பிரச்னை... போவதில் என்ன தடை?'' என்று கேட்டோம். அவள் சிரித்துவிட்டு, ''நாகை போகும் வழியில் 'சிக்கல்' என்ற ஊரில்தான் என் மாமா இருக்கிறார். அதனால்தான் போறது சிக்கல் என்றேன்'' என்றாள். உடனே ஒரே சிரிப்பலைதான்.

- பிரசன்னா,
சாலியமங்கலம்

ஆங்கிலம் வருமா?

எங்கள் வகுப்பில் ஒரு மாணவன் ஆங்கிலத்தில் ஒரு தேர்வில்கூட பாஸ் ஆனதே கிடையாது. ஆசிரியர் எவ்வளவோ சொல்லியும் அவன்



ஆங்கிலத்தில் மட்டும் ஃபெயில் ஆகிவிடுவான்.

ஒருநாள் டெஸ்ட் பேப்பரை கொடுத்துக்கொண்டிருந்தார் ஆசிரியர். இந்த முறையும் அவன் ஃபெயில் ஆகியிருந்தான். இந்த முறை ஆசிரியர் கோபப்படாமல், "உங்க தாத்தா சுதந்தரப் போராட்டத்தில் பங்கு பெற்று ஆங்கிலேயரை விரட்டினாரா?" என்று கேட்டார். அவன் பதறிப் போய் "இல்லையே சார். ஏன் கேட்டீங்க?" என்றான். அவரோ, "உங்க தாத்தா ஆங்கிலேயரை விரட்டினதால உனக்கு ஆங்கிலம் வரலையோன்னு நினைச்சேன்" என்றார். உடனே அவன் மன்னிப்புக் கேட்டுவிட்டு அடுத்தத் தேர்வில் நல்ல மதிப்பெண் பெறுவதாக உறுதி அளித்தான்.

- எம். வினோத்,
விருத்தாசலம்.

எங்கே?

இங்க்


வகுப்பில் ஆசிரியர் போர்டில் எழுத அதைப் பார்த்து நாங்கள் நோட்டில் எழுதிக் கொண்டிருந்தோம். ஒரு மாணவன் எழுந்து, "சார், பேனாவில் இங்க் தீர்ந்து விட்டது" என்றான். உடனே, அவர், "யாராவது இங்க் கொடுங்கள்" என்றார். ஆனால் யாரும் கொடுக்கவில்லை. அவன் அப்படியே நின்று கொண்டிருந்தான். சிறிது நேரம் கழித்து திரும்பிப் பார்த்த ஆசிரியர், "என்ன ஆச்சு...?" என்று கேட்டார். "ஒருவரிடமும் இங்க் இல்லையாம்" என்றான். உடனே ஆசிரியர், "இங்க், இங்கில்லாமல் எங்கு இருக்கும்? இங்க் இருப்பவர்களில் ஒருவர் தமது பேனாவில் இருக்கும் இங்க்கில் கொஞ்சம் பங்கு கொடுத்தால் அவன் தங்கு தடையின்றி எழுதுவான்" என்று அடுக்கு மொழியில் சொல்லியதைக் கை தட்டி ரசித்தோம்.

- பாளை பசும்பொன், திருநெல்வேலி.



எங்கே?

எங்கள் தமிழாசிரியர் தெய்வ பக்தி மிகுதியாக உடையவர். வகுப்பில் அனைவரும் திருநீறு தரித்தே வர வேண்டும் என்று சொல்லுவார். அவரும் அதைத் தவறாமல் கடைபிடிப்பார். பள்ளியில் முகம் கழுவ நேரிட்டால் கூட உடனே தன் கைப் பையில் வைத்திருக்கும் விபூதி பாக்கெட்டிலிருந்து விபூதியை எடுத்து திருநீறு இட்டுக் கொள்வார். இதனால் அவரிடம்



எப்போதும் விபூதிப் பாக்கெட் இருக்கும். ஒருமுறை மாணவன் ஒருவன் நெற்றியில் திருநீறு அணியாமல் வகுப்புக்கு வந்து விட ஆசிரியர் அவனைப் பார்த்து "எங்கடா விபூதி?" என்று கேட்டார். அதற்கு அவன் திருதிருவென்று விழித்து விட்டு "சத்தியமா நான் அதை எடுக்கலே சார்" என்றான். ஆசிரியர் வைத்திருக்கும் விபூதிப் பாக்கெட்டைப் பற்றித்தான் தன்னிடம் அவர் இப்படி கேட்கிறார் என்று நினைத்து அவன் இப்படி பதில் சொன்னதும் நாங்கள் எல்லாம் சிரித்து விட்டோம்!

- கே.மாரி,
மயிலாடுதுறை.

அழ. வள்ளியப்பா நினைவு சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை

மகேந்திரபுரி மன்னன் மணிவர்மன். அவரது மதியூகி மந்திரி மிகவும் முதுமை அடைந்து ஓய்வு பெற விரும்புவதாகக் கூறினார். அவரிடமே புதிதாக ஒரு மந்திரியை நியமிக்கும்படி மன்னர் கேட்டுக்கொண்டார்.


மந்திரியும் பலவித சோதனைகள் செய்து மாறன், விஜயன், அமுதன் என்று மூன்று இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து மன்னரிடம் அழைத்துச் சென்றார்.

மன்னருக்கும் அவர்களைப் பிடித்து விட்டது. ஆனால் மந்திரி பதவி ஒருவருக்குத் தானே! யாரை நியமிப்பது? என்று மன்னர் குழம்பினார். மந்திரியே அதற்கும் யோசனை சொன்னார். மன்னரும் ஒப்புக்கொண்டார்.

மந்திரி அந்த மூன்று பேரிடமும் ஆளுக்கு ஒரு பெரிய டப்பாவைக் கொடுத்து, அதைப் பக்கத்து நாட்டு மன்னரிடம் கொடுத்து விட்டு வர வேண்டும் என்றார். நடந்துதான் போய் வர வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தார். மூவரும் ஏற்றுக் கொண்டனர்.

மறுநாள் அதிகாலையில் மூவரும் புறப்பட்டனர். பக்கத்து நாட்டுக்கு நடந்து போய்ச் சேர எப்படியும் மூன்று நாட்களாகி விடும் என்பதால் கையில் உணவுப் பொட்டலங்களுடன் கிளம்பினர். மதிய வேளையில் ஒரு மண்டபத்தில் அமர்ந்து உணவு உண்டு விட்டு, உண்ட களைப்பில் சற்றே கண்ணயர்ந்தனர்.

அப்போது முகமூடி அணிந்த இருவர்



குதிரையில் வந்து அவர்களுடைய உணவுப் பொட்டலங்களை எடுத்துக்கொண்டு சென்றனர். மூவரும் விழித்து எழுந்து உணவுப் பொட்டலங்களைக் காணாது திகைத்தனர்.

'நல்லவேளை! மன்னருக்குரிய டப்பாக்களை எவரும் எடுத்துச் செல்லவில்லை' என்று மூவரும் மகிழ்ந்தவாறே நடக்க ஆரம்பித்தனர். இரவு வந்தது. மூவருக்கும் சரியான பசி. காட்டுக்குள் என்ன கிடைக்கும்? மூவரும் சோர்வுடன் ஒரு மரத்தடியில் அமர்ந்தனர்.

மூவரில் மாறன் மிகவும் பசியால் துடித்தான். டப்பா அவனைப் பார்த்துக் கண் சிமிட்டியது. உள்ளே என்ன இருக்கும்? திறந்தான். முறுக்குகள். மாறனுக்கு நாவில் நீர் ஊறியது. கூட இருந்தவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் பத்து முறுக்குகளை எடுத்து 'மட மட'வென்று தின்று முடித்தான். பெரிதாக ஏப்பம் விட்டவாறு படுத்துத் தூங்க ஆரம்பித்தான்.

விஜயனுக்கும் நல்ல பசி. அவனும் டப்பாவைத் திறந்து பார்க்க, அதிலும் முறுக்குகள் இருந்தன. சாப்பிடலாமா என்று எண்ணினான். பிறகு "மன்னருக்குக் கொடுக்க வேண்டியதை நாம் சாப்பிடுவது துரோகமாகும்" என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டு டப்பாவை மூடிவிட்டு, பசி மயக்கத்தில் படுத்துவிட்டான். நடந்து வந்த களைப்பு வேறு. தூக்கம் வந்துவிட்டது.

அமுதனுக்கும் பசியெடுக்கவே டப்பாவைத் திறந்து பார்த்தான். பெரிய பெரிய முறுக்குகள்தான் அதிலும் இருந்தன. அமுதன் யோசனையுடன் நீண்ட நேரம் முறுக்குகளையே பார்த்துக்கொண்டிருந்தான். அவன் உதடுகளில் புன்னகை மலர்ந்தது. சற்று நேரம் கழித்து அவனும் உறங்கி விட்டான்.

மந்திரி மதியும் முறுக்குச் சோதனையும்



பொழுது புலர, மூவரும் மீண்டும் வழிப் பயணத்தைத் துவங்கினர். விஜயன் மட்டும் மிகவும் சோர்வாக நடந்தான். அன்றைக்கும் மாறன் பசியெடுத்ததும், பத்து முறுக்குகளை எடுத்து சாப்பிட்டு விட்டு, நண்பர்களையும் சாப்பிடும்படி தூண்டினான்.

"இது குற்றமல்லவா?" என்றான் விஜயன்.

"அடப் போடா! மன்னர் என்ன எண்ணிப் பார்க்கவா போகிறார்? டப்பாக்களை அப்படியே வாங்கி வைப்பார். நாம் திரும்ப வேண்டியதுதான்!" என்றான் மாறன் சர்வ சாதாரணமாக.

அமுதன் எதுவுமே பேசாமல் நடப்பதைக் கண்டு, "என்ன அமுதா! உனக்குப் பசியில்

அஜய்ராஜா

அழ. வள்ளியப்பா நினைவு சிறுகதைப் போட்டி முடிவு

2002 ஆம் ஆண்டுக்கான சிறுகதைப் போட்டியில் ஆர்வத்துடன் நூற்றுக்கணக்கான வாசகர்கள் பங்கேற்றனர். கோகுலம் ஆசிரியரும் எழுத்தாளர் சுப்ர. பாலன் அவர்களும் சேர்ந்து பரிசுக் கதைகளைத் தேர்ந்தெடுத்தனர்.



முதல் பரிசு :

மந்திரி பதவியும் முறுக்குச் சோதனையும்

- வி. அஜய்ராஜா, இராமநாதபுரம்.

இரண்டாம் பரிசு:

விட்டுக் கொடுப்பதில் இன்பம்

-பா. கவிதா, புது டெல்லி.

மூன்றாம் பரிசு:

ஓடிப்போன அஹமது

- சி. வினோத்குமார், மயிலாடுதுறை

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

லையா?" என்று இருவரும் கேட்க,

"பசிதான்!" என்றான் அமுதன்.

"அப்ப பேசாமல் சாப்பிடுங்க" என்றான் மாறன்.

விஜயன் மறுக்க, அமுதன் பேசாமல் நடந்தான். இரவு வந்தது. அன்றும் உண்ட களைப்பில் மாறன் உடனே தூங்கி விட்டான். பசி மயக்கத்தில் விஜயன் சுருண்டு கிடந்தான். அமுதனும் சற்று நேரம் கழித்து படுத்துக்கொண்டான்.

பொழுது புலர்ந்தது. மதியத்துக்கு முன்பாகவே பக்கத்து நாட்டை அடைந்து விட்டனர். மன்னரைக் கண்டபோது, அங்கு மதியூகி மந்திரியும் அமர்ந்து இருந்தார்.

மாறன் மன்னர், மந்திரியை வணங்கி விட்டு, டப்பாவைக் கொடுத்து விட்டுச் சற்றே பயத்துடன் நின்றான்.

விஜயனோ மன்னனிடம் டப்பாவைக் கொடுத்தபோது மயங்கி விழுந்துவிட்டான்.

அமுதன் மன்னரை வணங்கி டப்பாவைக் கொடுத்து விட்டு ஒதுங்கி நின்றான்.

மதியூகி மந்திரி, பணியாட்களை அழைத்து ஒவ்வொரு டப்பாவிலுள்ள முறுக்குகளையும் எண்ணிப் பார்க்கும்படி சொன்னதும், மாறனுக்குப் பாதி உயிர் போய்விட்டது. அவன் இப்படி ஆகும் என்று எதிர்பார்க்கவே இல்லை.

விஜயனோ மயங்கிக்கிடந்தான்.

அமுதன் பேசாமல் நின்றான்.

பணியாட்கள் மாறன் கொண்டு வந்த டப்பாவில் எண்பது முறுக்குகளும், விஜயன் டப்பாவில் நூறு முறுக்குகளும், அமுதன் டப்பாவில் நூறு முறுக்குகளும் இருப்பதாகக் கூறினர்.

மந்திரி விசாரித்ததில், உணவு காணாமல் போய்விட்டதால், பசி தாங்க முடியாமல் இருபது முறுக்குகளைச் சாப்பிட்டு விட்டதாகக் கூறி மாறன், தலை குனிந்து நின்றான். விஜயன் முறுக்குச் சாப்பிடாததால் மயங்கிக் கிடந்தது புரிய, அமுதனை விசாரித்தார்.

அமுதனும் பணிவுடன், "ஐயா! எனக்கும் பசிதான். நானும் முறுக்குதான் தின்று பசியாறினேன்!" என்றான்.

"அதெப்படி? உன் டப்பாவிலும் நூறு முறுக்குகள் இருந்தனவே" மந்திரி வினவ,

"ஆம், ஐயா நீங்களோ மதியூக மந்திரி நிச்சயம் எங்களைச் சோதனை செய்யும் பொருட்டுதான் கைச்சுற்று முறுக்குகளை வைத்திருப்பீர்கள் என்று யோசித்தேன். ஒவ்வொரு முறுக்கிலும் ஒரு சுற்றை மட்டும் பிரித்துச் சாப்பிட்டேன். எனக்கும் பசி தீர்ந்தது. மன்னருக்கும் நூறு முருக்குகள் சேர்ந்தன" என்றான் அமுதன்.

"ஆஹா! அமுதனே சிறந்த மதியூக மந்திரியாகும் தகுதி பெறுகிறான். மாறன் அவசரக்காரன், மதியூகம் இல்லாதவன். விஜயன் கடமை உணர்வு மிக்கவன். ஆனால் விவேகம் குறைவு. மாறன், விஜயனைவிட அமுதனே மிகச் சிறந்த அறிவாளி" என்று மந்திரி அறிவித்ததும்

'மந்திரி அமுதன் வாழ்க' என்ற கோஷம் ஒலித்தது.

பெற்றோர்களே...
கோகுலம் சந்தா செலுத்தினால் அமரர் கல்கியின் புத்தகங்கள் பரிசு!

உங்கள் குழந்தைகளின் மனம் கவர்ந்த கோகுலத்துக்குச் சந்தா செலுத்தினால் உங்களுக்கு அற்புதமான கல்கி புத்தகங்கள் பரிசு!

- 2 ஆண்டு சந்தா ரூ.144/- கட்டினால் **ரூ.85/-** மதிப்புள்ள **'பார்த்திபன் கனவு'** பரிசு!
- 4 ஆண்டு சந்தா ரூ.288/- கட்டினால் **ரூ.250/-** மதிப்புள்ள **'சிவகாமியின் சபதம்'** பரிசு!
- 8 ஆண்டு சந்தா ரூ.576/- கட்டினால் **ரூ.525/-** மதிப்புள்ள **'பொன்னியின் செல்வன்'** (5 பாகங்கள்) பரிசு!

ஏற்கெனவே சந்தாதாரர்களாக இருப்பவர்களும் உடனடியாக தொகை அனுப்பி இத்திட்டத்தில் சேர்ந்தால் அவர்களின் சந்தா காலம் முடிவடையும் இதழிலிருந்து இத்திட்டம் செயல்படும்.

இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி சந்தா செலுத்துங்கள். ஒப்பற்ற பரிசைப் பெறுங்கள்.

ஆகஸ்ட் 31 வரை மட்டுமே இந்த விசேஷ திட்டம் செயல்படும்.

பெயர் : ______________________

முகவரி : ______________________

____

____

☐ **2 ஆண்டு சந்தா ரூ.144/-** ☐ **4 ஆண்டு சந்தா ரூ.288/-**

☐ **8 ஆண்டு சந்தா ரூ.576/-**

பணத்தை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் (Cheques) ஏற்கப்படமாட்டாது.


டி.டி. அல்லது எம்.ஓ.வை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97.

நரிகள் சொன்ன நன்றி!

கதை : எஸ்.துர்கா காத்யாயனி,
பதினோராம் வகுப்பு,
புனித அலாய்சியஸ் ம.மே.நி.பள்ளி,
தூத்துக்குடி

படம் : மகேஸ்












சிறிது நேரத்தில் -
அமைச்சரே, ஏன் நரிகள் இப்படி ஊளை யிட்டுக் கொண்டிருக் கின்றன?
ம்... அவற்றிற்கு மிகவும் குளிர் கிறதாம்.போர்வை கேட்டு ஊளை யிடுகின்றன.
அப்படியா! என் எல்லைக்கு உட்பட்ட காட்டில் உள்ள பிராணிகள் குளிரால் நடுங்குவதா?
அதற்கு என்ன செய்வது அரசே?
கருவூலத்திலிருந்து தேவையான பணத்தை எடுத்து அனைத்துப் பிராணிகளுக்கும் போர்வை வழங்கி விடுங்கள்.
உத்தரவு அரசே!
மறுநாள் அரண்மனையில் -
வீரா, இந்தப் பணத்தைக் கொடுத்து பக்கத்து நாட்டில் உணவுப் பொருட்கள் வாங்கு. அதை உடனே மக்களுக்கு விநியோகம் செய்து விடு.
உடனே கிளம்பறேன்.
மக்களின் துயர் தீர்ந்தது. ஒரு மாதம் கழித்து மீண்டும் வேட்டைக்குச் சென்றான் அரசன்.
பிராணிகளுக்குப் போர்வை வழங்கவில்லையா? மீண்டும் நரிகள் ஊளையிடுகின்றனவே?
அரசே, அவையெல்லாம் போர்வை வழங்கிய தங்களுக்கு நன்றி சொல்கின்றன.
அப்படியா! காட்டு விலங்குகளைக் காப்பாற்றிய உங்களுக்கு நன்றி அமைச்சரே!
தாங்கள் கருவூலத்தைத் திறந்து விடாவிட்டால் நான் இதைச் செய்து இருக்க முடியாது அரசே!

அந்தக் காலத்தில்...

* ஆங்கிலேயர்கள் நம்மை ஆண்ட போது, தமிழ்ப் பாடப் புத்தகங்களில் மன்னருக்கு 'மன்னி' என்னும் பெண்பால் சொல்லே வழங்கப்பட்டு வந்தது. நீண்ட காலத்திற்குப் பிறகே, மன்னி என்ற சொல் பாடப் புத்தகங்களிலிருந்து விடு பட்டது.



* இப்போதுபோல கேமராவில் ஃபிலிம் சுருளை மாட்டி, படமெடுத்த பிறகு ஃபிலிம் சுருளை மட்டும் வெளியே எடுத்து கழுவுவதற்கோ பிரிண்ட் போடுவதற்கோ முன்பு கொடுக்க முடியாது. ஜார்ஜ ஈஸ்ட்மேன் கண்டுபிடித்த முதல் கோடக் கேமராக்களில் படம் எடுப் பவர்கள் கேமராவோடு கொடுக்க வேண்டும். புது ஃபிலிமைப் போட்டு கேமராவைத் திருப்பிக் கொடுப்பார்கள்.

* 'தட்டுங்கள் திறக்கப் படும்' என்பார்கள். ஆனால் கதவைத் தட்டுவது நாகரிகமற்ற செயல் என்று நினைத்த காலம் உண்டு. லூயி 14வது மன்னன் ஃபிரான்ஸ் நாட்டை ஆண்ட போது கதவைத் தட்டுவதற்குப் பதிலாக இடது கையின் சிறிய விரல் நகத்தால் கதவில் சுரண்டி சத்தம் உண்டாக்கி வீட்டுக்காரர்களை அழைத்து வந்தனர். இதற்காகச் சிறிய விரல் நகத்தை நீளமாக வளர்த்து வந்தனர்.


* கடிதங்களை உறைகளில் போடும் பழக்கம் 1839ஆம் ஆண்டுதான் ஆரம் பித்தது. அதற்கு முன் - கடிதங்களை எழுதி மடித்து, இருபுறமும் மெழுகால் ஒட்டி, முகவரியை மேலே எழுதி விடு வார்கள்.

* பழக்கமில்லாத ஒருவர் மற்றொரு வருடைய வீட்டில் நுழைந்துவிட்டால், வீட்டுக்காரர் வந்தவரைக் குளிக்கச் சொல்லி, மாற்று உடை கொடுத்து, அறுசுவை உணவு கொடுத்து உபசரித்த



பிறகுதான் "நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்பார். இது எங்கே? கிரீஸ் நாட்டில். அதுவும் பண்டைக் காலத்தில்.

* முன்பெல்லாம் ஸ்விட்ஸர்லாந்து நாட்டில் இருந்து வரும் தபால் உறைகளின்மீது அந்த நாட்டுத் தபால் அதிகாரிகள் ஒரு சிறிய துண்டு அறிக்கையை ஒட்டி வந்தார்கள். இந்தத் துண்டு அறிக்கையில், 'உங்கள் கடிதங்கள் எங்களது ஸ்டாம்ப் முத்திரைகளால் பாதிக்கப்பட்டிருந்தால் அதற்காக உங்கள் மன்னிப்பை வேண்டுகிறோம்' என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.





* பாக்கெட் கடிகாரங்கள் முதலில் செய்யப்பட்டபோது அவை மிகப் பெரியனவாகவும், கனமானவையாகவும் இருந்தன. அதன் சொந்தக்காரர்கள் தாம் செல்லும் இடங்களுக்குத் தூக்கிக் கொண்டு வருவதற்குக் கூலிக்கு ஆட்களை நியமிக்க வேண்டியிருந்தது. பெயர் என்னவோ பாக்கெட் கடிகாரம்.


* பண்டைய ரோமில் நிறுவப்பட்ட சிலைகளில் ஒரு விசேஷ சௌகரியம் உண்டு. அந்தச் சிலைகளின் தலைகளைத் தனியாகக் கழற்றி எடுத்துவிடலாம். அந்தத் தலைக்கு உரியவர், மக்களிடையே செல்வாக்கை இழந்துவிட்டார் என்றால், அதே சிலையில் தற்போது செல்வாக்கு படைத்தவராக உள்ள வேறு ஒருவரின் தலையைப் பொருத்திவிடலாம்.

* 1857ஆம் ஆண்டில், இங்கிலாந்தில் விக்டோரியா ராணி ஆண்டபோது, அரண்மனை எலி பிடிப்போனுடைய சம்பளம், அரசவைக் கவிஞராயிருந்த ஆல்ஃபிரட் லார்ட் டென்னிஸனின் சம்பளத்தைவிட மிக அதிகமாக இருந்ததாம்.


* பதினான்காம் நூற்றாண்டில், மூன்றாம் எட்வர்ட் இங்கிலாந்தை ஆண்ட போது, ஒரு நாளைக்கு இரண்டு வேளைக்கு மேல் உணவு கொள்வது குற்றம் என்று சட்டம் இயற்றப்பட்டு இருந்தது.

* வீட்டு வரி கேள்விப்பட்டிருக்கிறோம். ஜன்னல் வரி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பென்சில்வேனியாவில் ஒவ்வொரு வீட்டிலுள்ள ஜன்னல்களுக்கும் அவற்றின் அளவுக்கு ஏற்ப வரி போட்டு வசூல் செய்திருக்கிறார்கள். இப்போதல்ல, 1789-ல்!

- ஏ.கே.நாசர்



செய்து பாருங்கள்



தூண்டில் மீன்

உங்கள் வீட்டில் இருக்கும் பழைய நோட்டு அட்டையை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் சிறுசிறு மீன்களாக வரைந்து வெட்டிக் கொள்ளுங்கள். இன்னொரு அட்டையை எடுத்து மூடி இல்லா பெட்டி போல் செய்து கொள்ளுங்கள். பெட்டியின் உட்புறம் நீல நிறத்தைப் பூசுங்கள். மீன்களின் வாய்ப்பகுதியில் ஒவ்வொரு ஜெம் கிளிப்பை சொருகி விடுங்கள். பிறகு ஒரு குச்சியில் தடிமனான நூலைக் கட்டி அதன் நுனியில் ஒரு காந்தத் துண்டையும் கட்டுங்கள்.

இப்போது பெட்டிக்குள் மீன்களைத் தூக்கிப் போடுங்கள். தூண்டிலை மீன்களின் வாயில் இருக்கும் ஜெம் கிளிப்களின் மேல் வையுங்கள். மீன்கள் காந்தத்தில் ஒட்டிக் கொண்டு விடும். தூண்டிலில் மீன் பிடிப்பது போலவே இருக்கும்.


விரல் நுனியில் நிற்கும் பறவை!

ஒரு தடிமனான அட்டையில் கீழே குறிப்பிட்டுள்ளது போன்று பறவையின் படத்தை வரையுங்கள். அதைச் சரியாக வெட்டியெடுத்துக் கொள்ளுங்கள். பறவையின் பின் புறத்தில் இரண்டு இறக்கைகளிலும் 5 ரூபாய் நாணயம் ஒவ்வொன்றை ஒட்டுங்கள்.


ஆள் காட்டி விரலின் மேல் பறவையை நிறுத்துங்கள். பறவை இப் படி அப்படி அசைந்தாலும் கீழே விழாது. காரணம் என்னவென்றால் இரண்டு பக்கமும் எடை சமமாக இருக்கிறது.







குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. அற்புத விளக்கிற்குச் சொந்தக்காரன் (5)
5. வெயில் காலத்தில் தூரத்தில் தெரியும் நீர் (3)
6. பாடகர்களுக்கு இது நன்றாக இருப்பது அவசியம் (3)
7. நீரில் நீந்தும்; நிலத்தில் நடக்கும். அன்னத்துக்கு உறவு (3)

வலமிருந்து இடம்

2. பயிர் விளையும் இடம் (3)
4. அத்தியாவசியமானவற்றிற்குக் கூட செலவு செய்யாதவன் (3)
10. ஆசை, கோபம்... முதலியவற்றைத் துறந்தவர் (3)
11. நவரத்தினங்களுள் ஒன்று (5)

மேலிருந்து கீழ்

1. சத்தம் என்பதை இப்படியும் அழைக்கலாம் (4)
2. வாரி, வாரி வழங்குபவர் (4)
3. நெல்லாக இருக்கும்போது அரிசிக்கு மேல் இது இருக்கும் (2)
7. குரங்கு (4)

கீழிருந்து மேல்

4. கிருஷ்ணரின் தாய்மாமன் (4)
5. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு காஷ்மீரில் உள்ள இந்தப் பகுதியில் நடந்த சண்டையில் பாகிஸ்தானை இந்தியா வென்றது (4)
8. அந்தக் காலத்தில் புறா, அன்னம் ஆகியவற்றை ______ அனுப்புவார்கள் (2)
9. இருளில் வீட்டுக்கு வீடு வெளிச்சம் தருவது (4)
10. ஜலதோஷத்தின் அறிகுறி (4)
11. கண்ணகியின் கணவன் (4)

- எஸ். அபர்ணா, ஆறாம் வகுப்பு,
ஸ்ரீ வெங்கடேஸ்வரா
மெட்ரிகுலேஷன்
மேல்நிலைப்பள்ளி, தஞ்சாவூர்

விடை 21 ஆம் பக்கம்



"அம்மா, நாளைக்குக் காலையில் பூரி கிழங்கு, மதியத்துக்குப் புளி சாதம், வடை எல்லாம் செய்து, வாழை இலையில் கட்டிக் கொடுத்துடுங்கம்மா" என்றான் ராமு.

ராமுவின் அம்மா, "சரி ராமு, அதோட ஒரு உருளைக் கிழங்கு சிப்ஸ் பாக்கெட்டும் வைக்கிறேன். பிஸ்கெட், முறுக்கு, சீடை ஏதாவது வாங்கிட்டு வரேன். உனக்கு என்ன வேணும்? சொல்லு ராமு" கேட்டார் அம்மா.

"அம்மா எங்க வகுப்பில் படிக்கிற 45 மாணவர்கள், இன்னும் 3 ஆசிரியர்கள், வண்டி ஓட்டுநர், உதவியாளர்னு 50 பேர் வருவாங்க. எல்லோருக்கும் கொடுத்து சாப்பிடறதுனா அண்டாவிலேயும் குண்டாவிலேயும் கொண்டு போகணும். தீனி எல்லாம் கிலோ கணக்கிலே வாங்கணும். சுற்றுலாவுக்கு வர்ற எல்லாரும் சாப்பாடு கொண்டு வருவாங்கம்மா. எனக்கு வேண்டியதை மட்டும் நான் கொண்டு போனால் போதும்மா" என்றான் ராமு.

அம்மா, "ராமு உன்னைத் திருத்தவே முடியாது. எத்தனை புத்தகங்களில் படிச்சிருக்க. பெரியவங்க நாங்களெல்லாம் எத்தனை முறை சொல்லி

சுற்றுலா தந்த பாடம்!

என்றார்.

ராமு, "அதெல்லாம் எதுவும் வேண்டாம்மா. வீட்டில் இருக்கிற பிஸ்கெட்டில் நாலு பிஸ்கெட்டை ஒரு சின்ன டப்பால போட்டு வச்சிடுங்கம்மா" என்றான். "என்ன ராமு, நண்பர்களோட சுற்றுலா போகும் போது நாலு பிஸ்கெட் கொண்டு போனால் போதுமா?" என்றார் அம்மா.

அதுவரை அமைதியாக இருந்த ராமுவின் அக்கா விஜி, "ஏம்மா ராமுவோட குணம் உங்களுக்குத் தெரியாதா? வீட்டுக்கு நண்பர்கள் வந்தாக்கூட சாப்பிட எதுவும் கொடுக்க மாட்டான். நீங்க ஏதாவது சாப்பிடக் கொடுக்கச் சொன்னாலும், அதைப் பத்திரமா எடுத்து வைங்கம்மா, அடுத்த வேளைக்குச் சாப்பிடறேன்னு சொல்லுவான். அவனுக்கு நாலு பிஸ்கெட்டே போதும்மா" என்றாள்.

"வீட்டிலாவது நண்பர்கள் போன பிறகு சாப்பிடுவான். சுற்றலா போகும்போது நண்பர்கள் கூடவே இருப்பாங்க. அவங்களைப் பார்க்க வச்சுக்கிட்டு சாப்பிடலாமா? அதனாலதான் சொல்லறேன். சாப்பிட எது கொண்டு போனாலும் கொஞ்சம் அதிகமாகவே கொண்டு போகணும்னு. என்ன சொல்ற ராமு?" என்று



இருக்கோம். சாப்பிடறது எதுவாயிருந்தாலும் பகிர்ந்து கொடுத்து சாப்பிடணும்னு. உனக்கு எப்பத்தான் அது பழக்கத்துக்கு வருமோ தெரியலை'' என்றார் வருத்தமாக.

ராமு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சுற்றுலா தொடங்கியது காலை 7 மணிக்கு. ராமு படிக்கும் பள்ளியிலிருந்து 50 பேருடன் பேருந்து புறப்பட்டது. பேருந்தில் மாணவர்கள் பாட்டுப் பாடிக் கொண்டும், நகைச் சுவையாகப் பேசிக் கொண்டும் மகிழ்ச்சியாகச் சென்றனர். மணி 10 ஆகும்போது மகாபலிபுரத்தை அடைந்தனர். ''காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு சுற்றிப் பார்க்கலாம்'' என்றார் ஆசிரியர்.

மாணவர்கள் தங்கள் பலகாரப் பொட்டலங்களை எடுத்துக் கொண்டு பேருந்தில் இருந்து இறங்கினர். நண்பர்கள் கூட்டம் வட்டம், வட்டமாக அமர்ந்து சாப்பிடத் தொடங்கியது. இட்லி, தோசை, பூரி, சப்பாத்தி, பொங்கல், உப்புமா, அடை என ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான பலகாரத்துடன் வந்திருந்தனர். தாங்கள் கொண்டு வந்ததைப் பிறருக்குக் கொடுத்துப் பிறருடையதைத் தாங்கள் பெற்று, மகிழ்ச்சியோடு பேசிக் கொண்டே சாப்பிட்டனர். ராமு கொண்டு



மான்கள்



இந்தியாவில் 14 வகை மான்கள் காணப்படுகின்றன. அவை புள்ளிமான், கடமான், சருகுமான், வராக மான், வெளி மான், காட்டாறுமான், மணிப்பூர் மான், நீலமான், கஸ்தூரிமான், நான்கு கொம்பு மான், சதுப்பு நில மான், சிங்காரா, இந்திய கேசல், காஷ்மீர் கலைமான்.

புள்ளிமான்களைவிட கடமான் பெரிய தாகவும் கம்பீரமாகவும் சாம்பல் நிறத்திலும் இருக்கும். கஸ்தூரிமான்கள் சிறியவை. கொம்பில்லாத இவை வாசனை திரவத்தைச் சுரக்கும்.

- நா. பாண்டியம்மாள்,
பத்தாம் வகுப்பு,
ஸ்ரீசேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை,
இராமநாதபுரம்

வந்த பூரியை யாருக்கும் கொடுக்க வில்லை. பிறர் கொடுத்ததையும் வேண்டாம் என்று மறுத்துவிட்டான். நண்பர்களுக்கும் அவனைப் பற்றித் தெரியும் என்பதால் யாரும் வற்புறுத்த வில்லை.

மாணவர்கள் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு சுற்றிப் பார்க்கத் தொடங் கினர். முதலில் அவர்கள் பார்த்தது அர்ச்சுனன் தவம். பெரிய மலையின் ஒரு பகுதியில் அர்ச்சுனன் தவம் செய்யும் காட்சியும், அருகே இரண்டு பெரிய யானை கள், நிறைய குட்டி யானைகள் இன்னும் பல சிற்பங்கள் மிக அழகாகச் செதுக்கப் பட்டிருந்தன.

அடுத்து, அதற்குப் பக்கத்திலுள்ள கோவர்த்தன மலையைக் கிருஷ்ணர் தூக்கிப் பிடித்திருக்கும் காட்சியைப் பார்த்தனர். ஆசிரியர் ''மழைக்குக் குடை யாக, கிருஷ்ணர் கோவர்த்தன மலையைப் பிடித்துள்ளார். கீழே ஊர் மக்களும், ஆடு களும், மாடுகளும் நிற்பதைப் பாருங்கள்'' என்றார்.

''மதிய உணவுக்குப் பிறகு சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டு கடற்கரைக் கோயில், 5 ரதங்கள், யானை, சிங்கம் ஆகியவற்றைப் பார்க்கலாம்'' என்று ஆசிரியர் சொன்னார். எனவே பேருந்து, மக்கள் நடமாட்டம் குறைந்த மரநிழல் மிகுந்த ஒதுக்குப் புறமான பகுதியில் நிறுத்தப்பட்டது.

மாணவர்கள் காலையில் அமர்ந்தது போலவே அமர்ந்து சாப்பிடத் தொடங் கினர். ராமு வழக்கம்போல தன்னுடைய புளி சாதம், வடை ஆகியவற்றைச் சாப் பிட்டான். நண்பர்கள் கொடுத்த எலு மிச்சை சாதம், தக்காளி, தேங்காய், தயிர் சாதங்களை வாங்க மறுத்துவிட்டான். நண்பர்கள் கேலி செய்ததையும் அவன் பொருட்படுத்தவில்லை.

அம்மா கொடுத்த உருளைக் கிழங்கு சிப்ஸ் பாக்கெட்டைக் கைக்குட்டையால் மறைத்தபடி எடுத்துக் கொண்டு சிறிது தூரம் நடந்தான். அங்கு இருந்த ஒரு சிறிய பாறையில் அமர்ந்தான். அதற்கு அருகில், நிறையக் குடிசைகள் இருந்தன. ராமு சிப்ஸ் பாக்கெட்டைப் பிரித்துச் சாப்பிட்டான். அப்போது எங்கேயோ இருந்து ஒரு சிறுமி வேகவேகமாக ஓடி வந்தாள். அவள் அங்கிருந்த ஒரு குடிசையின் கதவைத் தட்டி, ''செல்வி, செல்வி'' என்று கூப் பிட்டாள். கதவைத் திறந்து கொண்டு வெளி வந்த பெண். ''என்ன ராணி, இங்க வந்திருக்க?'' என்று கேட்டாள்.

''செல்வி உனக்கு உடம்பு இப்ப எப்படி இருக்கு? காய்ச்சல் இருக்கா?'' என்று கேட்டபடி ராணி செல்வியின் கழுத்திலும், நெற்றியிலும் வலது கையை வைத்துப் பார்த்தாள். அதற்குள் செல்வி, ''இப்பப்

பரவாயில்லை ராணி'' என்றாள்.

ராணி தன் இடது கையிலிருந்த பொட்டலத்தைப் பிரித்தாள். அதில் 2 ரொட்டித் துண்டுகள் இருந்தன. ''இந்தா செல்வி, இதைச் சாப்பிடு'' என்றாள் ராணி.

''ராணி நீ சாப்பிடலையா?'' என்று கேட்டாள் செல்வி. ''நீ ரெண்டு நாளா காய்ச்சல்ல எதுவுமே சாப்பிடலையே. இந்த ரொட்டித் துண்டைச் சாப்பிடு செல்வி'' என்று சொன்ன ராணி, ரொட்டியைப் பிய்த்து செல்விக்கு ஊட்டினாள்.

கண் கலங்கிய செல்வி, ''ராணி உன்னைப் போல ஒரு தோழி பக்கத்துக் குடிசையில இருக்கிறது நான் செய்த புண்ணியம். நம்மைப் போல ஏழைங்க மாங்காய், வெள்ளரிக்காய், கடலைனு வியாபாரம் செய்து கஷ்டப்படும்போது இந்தக் காய்ச்சல் வேற வந்து சிரமப் படுத்துது. சரி ராணி, இந்த ரொட்டி வாங்க உனக்கேது காசு?'' என்று கேட்டாள்.

ராணி, ''இது காசு கொடுத்து வாங்கினதில்ல செல்வி. கடற்கரையில் ஒரு அக்கா ரொட்டி சாப்பிட்டுக்கிட்டு இருந்தாங்க. என்னைப் பார்த்ததும், ரெண்டு ரொட்டித் துண்டு கொடுத்தாங்க. செல்வி, வெள்ளரிக்கா வித்த காசு 2 ரூபாய் இருந்துச்சு. இந்த 2 ரூபாய்ல உனக்கு ஒரு டீயும் வாங்கித் தரணும்னுதான் கொண்டு வந்தேன். ரொட்டிய சாப்பிடு, நான் டீ வாங்கிட்டு வரேன்'' என்றாள்.

செல்வி அழுதே விட்டாள். ''ராணி உனக்குக் கிடைச்சதை நீ சாப்பிடாம, எனக்குக் கொண்டு வந்தியே, உனக்கு ரொம்பப் பெரிய மனசு'' என்றாள்.

ராணி ''என்ன செல்வி இதைப் போய் பெரிசா சொல்ற? நம்ம தெரு பாட்டி, ராத்திரில சொன்ன கதையெல்லாம் நீ மறந்துட்டியா? நட்புக்காக ஒவ்வொருத்தரும் என்னவெல்லாம் செய்திருக்காங்க. நீ இதைப் பெரிசு படுத்தறியே'' என்றாள்.


செல்வி, ''எனக்கு இப்போ ஔவையார். அதியமான் கதைதான் ஞாபகத்துக்கு வருது. நோய் நொடி இல்லாம நீண்ட நாள் வாழ வைக்கும் நெல்லிக்கனியை அதியமான் சாப்பிடாமல் ஔவையாருக்குக் கொடுத்த மாதிரி, நீ எனக்குப் பசி தீர்க்கும் ரொட்டியக் கொடுத்திருக்க'' என்றாள்.

செல்வி, ராணி இருவரும் பேசுவதைக் கேட்டுக் கொண்டே ராமு சிப்ஸ் சாப்பிட மறந்துவிட்டான். 'நான் இந்த ஔவையார் - அதியமான் கதையை எத்தனை தடவை படிச்சிருப்பேன்! இது மட்டுமா? இப்படிப்பட்ட கதைகள் எவ்வளவோ கேட்டிருக்கேன். ஆனால் அவையெல்லாம் எனக்கு வழி காட்டின்னு நான் ஏன் நினைக்கலை' என்று யோசித்துப் பார்த்தான் ராமு.

'இந்தச் சிறுமிகளையே நான் வழி காட்டியாக ஏற்றுக் கொள்ளப் போகிறேன்' என்று ராமு மனதில் உறுதி எடுத்துக் கொண்டான்.

ராமு பேருந்து நின்ற இடத்திற்குச் சென்றான். அங்கு பேசிக் கொண்டிருந்த நண்பர்களிடம் சிப்ஸ் பாக்கெட்டை நீட்டினான். நடந்தது எதுவும் நண்பர்களுக்குத் தெரியாவிட்டாலும், ராமு மாறிவிட்டான் என்பது புரிந்தது.

குறுக்கெழுத்துப் புதிர் விடை



சுதந்திரம் என்றால் என்ன?



• விவேகானந்தர்



• தேசிக விநாயகம் பிள்ளை

முதல் தடவையல்ல...

விவேகானந்தர் தென்னிந்தியாவில் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அதே பெட்டியில் இருந்த வெள்ளைக்காரப் போர் வீரர்கள் சந்நியாசிகளைப் பற்றிக் கேவலமாகப் பேசிக் கொண்டிருந்தனர். விவேகானந்தர் மறுத்து ஏதும் பேசவில்லை. சேலம் ஸ்டேஷனில் அவர் அதிகாரியுடன் ஆங்கிலத்தில் பேசுவதைக் கண்டு போர் வீரர்களுக்கு வியப்பாக இருந்தது. ரயில் புறப்பட்டதும், "உங்களுக்கு நன்றாக ஆங்கிலம் தெரிகிறதே. நாங்கள் கூறிய கருத்துகள் குறித்து ஏன் எதுவும் மறுத்துப் பேசவில்லை?" என்று கேட்டனர். "முட்டாள்களை நான் சந்திப்பது இது முதல் தடவையல்ல" என்று அவர் கூறியதைக் கேட்டு வாயடைத்துப் போனார்கள்.

- அ. பேச்சியப்பன்,
ராஜபாளையம்.

மன வலிமை

அந்த அறிஞர் திருவனந்தபுரம் கல்லூரியில் விரிவுரையாளராக இருந்தார். ஒரு நாள் அவருடைய அண்டை வீட்டுக்காரர் வந்தார். "ஐயா! என் வீட்டில் ஒரு திருமணம் நடக்கப் போகிறது. அதற்கு அதிக இடம் தேவைப்படுகிறது. உங்கள் வீட்டையும், என் வீட்டையும் இணைத்துப் பந்தல் போட்டு, கல்யாணம் நடத்தி விடலாம் என்று நினைக்கிறேன். உங்களுக்குச் சம்மதமா?" என்று கேட்டார். சம்மதித்தார் அந்த விரிவுரையாளர். கல்யாண ஏற்பாடுகள் ஜாம் ஜாமென்று நடந்தன. விரிவுரையாளரே முன்னின்று பல வேலைகளைச் செய்தார். அந்த நேரம் அவருக்கு ஒரு தந்தி வந்தது. அதில் என்ன செய்தி வந்திருக்குமென்பதை ஊகித்த விரிவுரையாளர் தந்தியைப் பிரிக்காமலேயே வைத்து விட்டார். முன்னிலும் முனைப்பாகக் கல்யாண வேலைகளைச் சலனமில்லா மனத்தோடு கவனித்தார். விரிவுரையாளரின் குடும்பத்தினரும் 'எதற்காகத் தந்தி வந்திருக்கும்' என்று தெரிந்தும் மனம் கலங்காமல் திருமண வேலைகளைக் கவனித்தனர். சுப நிகழ்ச்சி முடிந்தது. வந்த விருந்தினர்கள் ஒவ்வொருவராக விடைபெற்றனர். அனைவரும் போன பிறகே தந்தியைப் பிரித்து, துக்கச் செய்தியைத் தெரிந்து கொண்டு கண்ணீர் பெருக்கினார் அந்த விரிவுரையாளர். மனதிற்குத் தேவை வலிமை. அந்த மன வலிமை அவரிடம் அதிகமாகவே இருந்தது. அந்த விரிவுரையாளர் வேறுயாருமில்லை கவிமணி தேசிக விநாயகம் பிள்ளைதான்.

— எம். வினோத்.
விருத்தாசலம்.

நகைகள் எதற்கு?

காந்திஜி ஒருமுறை சுதந்திரப் போராட்டத்திற்காகப் பெண்களிடம் நகைகளை வாங்கிச் சேகரித்துக் கொண்டிருந்தார். இதைத் தன் அம்மாவுடன் வந்த ஒரு சிறுமி பார்த்து காந்தியிடம் கோபமாகக் கேட்டாள்: "ஏன் இப்படி எல்லாருடைய நகைகளையும் வாங்குகிறீர்கள்?" என்று. அதற்கு காந்திஜி "நம் நாடு சுதந்திரம் அடைவதற்காக" என்றார். அது புரியாத சிறுமி

"சுதந்திரமா? அப்படின்னா என்ன?" என்று கேட்டாள். அந்தச் சிறுமிக்குக் காந்தி "இப்ப உங்க வீட்டிற்கு ஒரு விருந்தினர் வந்து தங்குகிறார். அவரை நன்றாக உபசரித்து வைத்திருக்கும் போது – அவர் வீட்டை விட்டுச் செல்லாமல் இது என் வீடு நீங்கள் எனக்கு அடிமை. உங்கள் வீட்டுப் பொருள் எல்லாம் என்னுடையது என்றால் நீ என்ன செய்வாய்? அவரை எப்படியாவது வெளியேற்ற நினைப்பாய் தானே? அதுபோல நம் நாட்டில் தங்கி நம்மையே அடிமையாக்கிய வெள்ளைக்காரர்களை விரட்டி அடிக்க நிறையப் பணம் தேவை. அதற்காகத் தான் நான் நகைகளை வாங்கிக் கொண்டிருக்கிறேன்" என்றார். உடனே சிறுமி தன் கைகளில் கிடந்த தங்க வளையல்களைக் கழட்டி காந்திஜியிடம் கொடுத்து விட்டாள்! ஒரு சிறுமிக்குப் புரியும் அளவிற்குச் 'சுதந்திரம்' பற்றி எப்படி அருமையான விளக்கம் கொடுத்துள்ளார் காந்திஜி!

- பா. காளிதாசன்
நீர்விளங்குளம்,
புதுக்கோட்டை.

• காந்தி



சொல்லின் செல்வர்

ஒருமுறை திருமுருக கிருபானந்த வாரியார் சொற்பொழிவு நடத்திக் கொண்டிருந்தார். அப்போது கூட்டத்தில் பலர் எழுந்து செல்லத் தொடங்கினர். உடனே வாரியார் "அடியேனைதான் மக்கள் 'சொல்லின் செல்வர்' என்று கூறுவார்கள். இங்கு பலர் சொல்லின் செல்வராக உள்ளார்கள்" என்றார். கூட்டத்திலிருந்த மக்களுக்கு ஒன்றும் புரியவில்லை. "நான் நல்ல விஷயங்களைச் சொல்லியும் எழுந்து சென்றால் அவர்கள் 'சொல்லின் செல்வர்' தானே" என்றார். அதன் பிறகு எவரும் எழுந்து செல்லவில்லை.


– பெ. நடராசன்,
பத்தாம் வகுப்பு, ஸ்ரீ சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை, இராமநாதபுரம் மாவட்டம்.

இசை

ஒருமுறை ஜார்ஜ் பெர்னாட்ஷாவை அவருக்குத் தெரிந்த பெண்மணி ஒருவர் தன் பிறந்த நாள் விழாவிற்கு அழைத்திருந்தார். ஷாவுக்கு ஆடம்பரங்கள் பிடிக்காது. இருந்தாலும் மிகவும் வேண்டிய பெண்மணி என்பதால் பார்ட்டிக்கு வர ஒப்புக் கொண்டார். விருந்தில் அந்த நாட்டிலேயே இசையில் புகழ் பெற்றவரின் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. ஆனால் அந்த இசையில் 'ஷா'வுக்குச் சிறிதும் நாட்டமில்லை. ஷாவிடம் அந்தப் பெண்மணி வந்து, "அந்த இசைஞரின் இசை எப்படி?" என்றார். "இவரது இசையைக் கேட்டால் எனக்கு மிஸ்டர். போட் விட்டா நினைவுக்கு வருகிறார்" என்றார் ஷா. அந்தப் பெண்மணி பதறிப்போய் "அவர் ஒரு இசைக் கலைஞர் இல்லையே" என்றார். "இவர் மட்டும் என்னவாம்?" என்று ஒரு போடு போட்டாரே பார்க்கலாம்!

– சிறார் சிநேகிதன்,
மயிலாடுதுறை.


• படேல்



பிடித்த கல்சர்

இரும்பு மனிதர் என்று பெயர் பெற்ற சர்தார் வல்லபாய் படேலுக்கு நகைச்சுவை உணர்வும் நிறையவே உண்டு. ஒரு சமயம் பத்திரிகை நிருபர் ஒருவர் அவரிடம் வந்தார். "உங்களுக்குப் பிடித்த கல்சர் எது?" என்று ஒரு கேள்வி கேட்டார். அதற்குப் படேல் சொன்ன பதில், "எனக்குப் பிடித்த கல்சர், அக்ரிகல்சர்!"

– ஆர். ராஜலட்சுமி, கரூர்.



மிதிக்காமல் விட்டால் விழ வைக்கும் வேடிக்கைக்காரன் - அவன் யார்?

- எஸ்.கவிதா, திருநெல்வேலி

III. 1. குளத்துத் தண்ணீரைக் குடிக்க முடியும், குளிக்க முடியாது - அது என்ன?

2. உயரத்தில் இருக்கும் கனி, உண்ணவும் முடியாது, பறிக்கவும் முடியாது - அது என்ன?

3. சிறைக்குள்ளேதான் இருப்பார் இந்தப் 'பண'க்காரர் - அவர் யார்?

4. இருட்டில் என்னுடன் இது இருக்காது; வெளிச்சத்தில் இருக்கும் - அது எது?

5. பக்கத்திலுள்ள பட்டணம், பார்க்க முடியாத பட்டணம் - அது என்ன?

6. படாரென்று வெடிக்கும், பட்டாசு அல்ல; பறந்துபோகும், விமானம் அல்ல - அது என்ன?

- பி. சுசீலா, உடுமலை.

குளத்துத் தண்ணீரைக் குடிக்க முடியும்; குளிக்க முடியாது - அது என்ன?

I. 1. அவள் ஒரு சிறந்த பாடகி; ஆனால் மனிதப் பிறவி அல்ல - அவள் யார்?

2. நாள் முழுவதும் கொட்டும்; ஆனால் சத்தம் கேட்காது - அது என்ன?

3. வீட்டில் இருக்கிற அண்டாவுக்கு மூடியில்லை - அது என்ன?

4. காட்டிலே பிறந்தவர்கள்; கன்னியர் கையிலே குத்துப்படுவார்கள் - அவர்கள் யார்?

5. உள்ளே இருந்து உத்தரவு கொடுப்பான் - அவன் யார்?

- ஆர். அம்பிகா, மதுரை

II. 1. ஒருவன் ஊஞ்சலாட, மூன்று பேர் ஓடிப் பிடித்து விளையாடுகிறார்கள் - அவர்கள் யார்?

2. மைதானத்தின் நடுவே மந்தையாகக் கூடுகிறார்கள். கலைத்து விரட்டினால் குழியில் விழ ஓடுறார்கள் - அவர்கள் யார்?

3. சட்டையைக் கழற்றிவிட்டால் சமையலுக்கு வருவான்; கழற்றி விடுவோருக்குக் கண்ணீரைத் தருவான் - அவன் யார்?

4. மிதித்தால் சுமக்கும் வேலைக்காரன்;

விடைகள் :

I. 1.குயில் 2. கண்ணிமை 3. கிணறு 4. பேன் 5. நாக்கு

II. 1.கடிகார பெண்டுலம், முட்கள் 2. கோம்போர்டு காய்கள் 3. வெங்காயம் 4. சைக்கிள்

III. 1.இளநீர் 2. பால்கனி 3. வங்கி கேஷியர் 4. என் நிழல் 5. முதுகு 6. பலூன்

யாருடைய கல்?

அந்த மடத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட சாமியார்கள் வசித்து வந்தனர். அதில் ஒரு சாமியார் மிகவும் பொல்லாதவர். எல்லோருடனும் சண்டை போட்டுக் கொண்டிருப்பார். பொழுது விடிந்தாலே சண்டைக்கார சாமியார் யாரிடம் சண்டை போடப் போகிறாரோ என்று மற்ற சாமியார்கள் பயந்தபடியே கண் விழிப்பார்கள்.

ஒரு நாள் அந்த மடத்துக்குப் புதிதாக ஒரு சாமியார் வந்து சேர்ந்தார். அவர் சாமியார் என்பதற்கு ஏற்றபடி சாந்தமாகவும் சமாதானமாகவும் வலம் வந்தார். எல்லோருடனும் சண்டை போட்டு அலுத்துப் போன சண்டைக்காரச் சாமியார், புது சாமியாரிடம் எப்படியாவது சண்டை போட வேண்டும் என்று எண்ணினார். அவருக்கு எவ்வளவோ தொல்லை கொடுத்தும் சமாதானச் சாமியார் சண்டைக்கே வரவில்லை.

சண்டைக்கார சாமியார் சமாதானச் சாமியாரிடம் சென்று ''என்னிடம் சண்டைக்கு வாருங்கள்'' என்றார். ''கோபம், ஆசை எல்லாவற்றையும் துறந்துதான் சாமியார் ஆனேன். எனக்கு சண்டை போடத் தெரியாது'' என்றார் சமாதானச் சாமியார்.



''சாமி, இந்தக் கல்லை நீங்கள் உங்களுடையது என்று சொல்லுங்கள். நான் என்னுடையது என்கிறேன். சண்டை தானாகவே வந்து விடும்'' என்றார் சண்டைக்கார சாமியார். சமாதானச் சாமியாரும் அதற்குச் சம்மதித்தார். ''சாமி, இது என்னுடைய கல்'' என்றார் கோபமாக சண்டைக்கார சாமியார். ''ஆமாம்! இது உன்னுடைய கல்தான். நீயே வைத்துக் கொள்'' என்றார் சமாதானச் சாமியார்.

கடுப்பாகிப்போன சண்டைக்கார சாமியார் அன்றிலிருந்து யாருடனும் சண்டைக்குச் செல்வதில்லை.

- பெ. நடராசன்,
ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீசேதுமாணிக்கம்
உயர்நிலைப் பள்ளி,
மேலச்சீத்தை,
இராமநாதபுரம்

எங்கள் ஊரில் நடந்தது

பல்லியின் வால் எங்கே?



மறுபடியும் முளைக்குமே!

படத் தொகுப்பில் ஒட்டுவதற்கு ஊர்வன, பறப்பன, விலங்குகள் படங்களை வெட்டிக் கொண்டிருந்தான் தம்பி. பல்லியின் வால் பகுதியைத் தெரியாமல் வெட்டி விட்டான். பக்கத்தில் அமர்ந்திருந்த பாட்டி "வாலை வெட்டிட்டியே... அந்தப் படத்தை ஒட்டாதே" என்றார். உடனே தம்பி "பரவாயில்லை பாட்டி! பல்லிக்கு வாலை வெட்டினாலும் திரும்ப வளர்ந்திடும்னு எங்க டீச்சர் சொன்னாங்க" என்றானே பார்க்கலாம்! அவனது புத்திசாலித்தனமான பதிலை ரசித்தார் பாட்டி!

- ப. காளிதாசன், புதுக்கோட்டை

புதுத்தெரு

எங்கள் மாமா மதுரையில் வக்கீல் புதுத் தெருவில் வசித்து வருகிறார். அவர் வீட்டிற்கு நாங்கள் சென்றபோது, என் தம்பி "மாமா, பத்து வருசத்துக்கு முன்னால இந்தத் தெருவின் பெயர் என்ன?" என்றான். அவரோ "வக்கீல் புதுத் தெருதான்" என்றார். அதற்குத் தம்பி "அப்படின்னா இது பழைய தெருன்னு சொல்லுங்க" என்றான். அதைக் கேட்ட மாமாவிற்குச் சிரிப்பை அடக்க வெகு நேரமாயிற்று.



- பெ.நடராசன்,
சேதுமாணிக்கம் உயர்நிலைப்பள்ளி,
மேலச்சீத்தை, இராமநாதபுரம்

பல்லைக் காட்டினால்...

பல்வலி காரணமாகப் பக்கத்து வீட்டு ஐந்து வயது பையனைப் பல் மருத்துவரிடம் அழைத்துச் சென்றேன். மருத்துவர் அவனுடைய பல்லைப் பரிசோதிக்க, "எங்கே பல்லைக் காட்டு" என்றார் அவ



னிடம். அதற்கு அப்பையன் "பல்லைக் காட்டினால் ஃபீஸ் வாங்க மாட்டீங்களே டாக்டர்" என்றான் பொருள் பொதிந்தபடி. உடனே நானும் டாக்டரும் சிரித்துவிட்டோம். பிறகு டாக்டரே அவனிடம் "ஏன் அப்படி சொன்னாய்?" என்று கேட்டார். "ஒரு நாள் வீட்டுக் கணக்குப் போடாமல் போயிட்டேன்னு சார் என்னை அடிக்க வரும்போது நான் சிரிச்சேன். அதற்கு அவர், பல்லைக் காட்டியே அடி வாங்காமல் தப்பிச்சுடு என்று சொன்னார்... அதான்" என்று பையன் இழுத்தான். டாக்டர் மேலும் சிரித்துக் கொண்டே, "அது வேற இது வேற தம்பி.. நான் 'ஃபீஸ்' வாங்காமப் பார்த்தேன்னா என் 'கையைக் கடிச்சுடும்'

தம்பி'' என்றார். நானும் அந்தப் பையனும் சிரித்து விட்டோம்!

- ராம்லக்ஷ்மண், காயக்காடு

வெயிட் எங்கே?

அம்மா குக்கரில் அரிசி, பருப்பு, காய் எல்லாம் வைத்துவிட்டு ''ஆவி வந்தால் 'வெயிட்' வைத்துவிடு'' என்று என்னிடம் சொல்லிவிட்டு, வேறு வேலை பார்க்கப் போய்விட்டார். சற்றுநேரத்தில் 'ஆவி' வந்தது. எப்போதும் வெயிட் வைக்கும் கேஸ் அடுப்புக்கு அருகில் அதைக் காண




வில்லை. ''அம்மா! வெயிட் எங்கேம்மா வெச்சிருக்கே?'' என்று கேட்டேன். அம்மா பதில் சொல்வதற்குள் எங்கள் வீட்டு வாண்டு ப்ரணவ், மேஜை மேலிருந்த பேப்பர் வெயிட்டைக் கொண்டு வந்து ''அந்த வெயிட் இல்லைன்னா இந்த வெயிட்டை வையேன்'' என்று என்னிடம் கொடுத்தான். நான் சிரித்த சிரிப்புச் சத்தம் கேட்டு அம்மாவே வந்துவிட்டார். விஷயம் சொன்னதும் அவரும் சிரிப்பில் கலந்து கொண்டார்.

- ஆர். ராஜலட்சுமி, கரூர்

காபி பாலாகுமா?

ஒரு நாள் மாலையில் வழக்கம்போல் அம்மா காபி போட்டுக் கொடுத்தார். தம்பியிடம் காபி கொடுத்தபோது அதை வாங்கிக் கொண்டு ''காபி, பாலாகுமா?'' என்று அம்மாவிடம் கேட்டான். ''அது எப்படி காபி, பாலாகும்?'' என்று அம்மா கேட்க, ''ஆகுமே. இந்தக் காபியைக் குடிக்காமல் அப்படியே வைத்துவிட்டால் நாளை



இது பாழாகுமே'' என்றானே பார்க்கலாம்! அனைவரும் அவனது பேச்சை ரசித்துச் சிரித்தோம்.

- அ. பேச்சியப்பன், ராஜபாளையம்

ஸ்டாம்ப்

எனக்கு வெளியூரில் நண்பன் ஒருவன் இருக்கிறான். அடிக்கடி கடிதம் போடுவான். சில காலம் முன் அஞ்சல் துறையின் தபால் கட்டணங்கள் உயர்த்தப்பட்டன. இதனால் முன்பு மூன்று ரூபாய் ஸ்டாம்ப் ஒட்ட வேண்டிய தபால்களுக்கு இப்போது நான்கு ரூபாய் ஸ்டாம்ப் ஒட்ட வேண்டியதாகிவிட்டது. ஆனால் எனது நண்பனோ இது தெரியாமல் பழைய ஸ்டாம்ப் கட்டணத்தையே ஒட்டி அனுப்பிக் கொண்டிருந்தான். இதனால் நான் ஒவ்வொரு முறை தபாலைப் பெறும்போதும் இரண்டு ரூபாய் டியூ கட்டி வாங்க வேண்டியிருந்தது. இதனை எப்படி நாசூக்காக அவனுக்குத்தெரிவிப்பது என்று நினைத்தேன் அடுத்த கடிதத்தில் இப்படி எழுதினேன் 'நண்பனே, உன் கடிதத்தை நான் விலை மதிக்க முடியாததாகக் கருதுகிறேன். ஆனால் நீ ஏன் அதை ஒவ்வொரு முறையும் தபால்காரரிடமிருந்து மிகவும் குறைவான இரண்டு ரூபாயைச் செலுத்திப் பெற்றுக் கொள்ள வைக்கிறாய்?' என்ன ஆச்சரியம்! அடுத்த கடிதம் சரியான ஸ்டாம்ப் ஒட்டி வந்தது.

- சிறார் சிநேகிதன், மயிலாடுதுறை



சிட்டழகு எங்கே?

கார் சட்டென பிரேக் அடித்து கிரீச்சிட்டு நின்றது. பண்ணையார் அதிலிருந்து இறங்கினார்.

எதிரே நின்றிருந்த ஆட்களைப் பார்த்து "என்னங்கடா இவ்வளவு நேரம்? வேலை முடிந்ததும் சட்டுபுட்டுன்னு கிளம்பாமல் என்ன பண்ணுனீங்க?" என்றார் அதட்டலாக.

"ஐயா வந்து...." என்று இழுத்தான் முரடனாய் இருந்தவன். மூட்டையை அவர் முன் இறக்கினான்.

கையில் இருந்த டார்ச் லைட்டை அதன் மீது அடித்த பண்ணையார் "என்னடா இது மூட்டை?" என்றார்.

சின்னமனூர் சின்னப் பட்டாளம்



''மூட்டைக்குள்ள ஒரு சின்னப் பொண்ணு இருக்கு ஐயா'' என்றான்.

''ஏய், என்னடா சொல்ற நீ?'' பண்ணை யார் அதிர்ச்சியாகக் கேட்டார்.

''ஆமாங்கய்யா'' என்று ஆரம்பித்து விவரமாக நடந்தது எல்லாவற்றையும் அவரிடம் விவரித்தான்.

''நிஜமாவா?'' படபடப்போடு கேட்டார் பண்ணையார்.

''உண்மைதானுங்கய்யா'' என்றனர் ஆட்கள்.

''எங்கடா அந்தப் பசங்க?''

''இங்கேதான் ஐயா போயிட்டு இருப் பாங்க.''

''வீட்டுட்டீங்களேடா, பிடிச்சிக்கிட்டு வர்றதுதானே அவனுங்களையும்.''

ரா.சுந்தரமூர்த்தி





''அவனுங்க எதுக்குங்க?'' - முரடன்.

''முட்டாள்களா, அவனுங்க ஊருக்குள் போய் எதையாவது உளறி வைப்பாங்க. முதல்ல இந்த மூட்டையைத் தூக்கி 'டிக்கி'யில் போடுங்க. ஒடுங்கடா, அந்தப் பசங்களை எங்கிருந்தாலும் பிடிச்சிக்கிட்டு நம்ம தோட்டத்து பங்களாவுக்கு வந் திடுங்க. அவனுங்களை விட்டு விட்டு வந்தீங்க தொலைச்சிப்புட்டேன் உங்களை. எங்கேயோ ஏதோ தப்பு நடக்குது, கண்டு புடிக்கிறேன்'' என்று கோபத்தில் கத்தினார் பண்ணையார்.

தூரத்தில் மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த நால்வரும் திடுக்கிட்டனர். பயத்தில் உதறல் எடுத்தது.

காரின் 'டிக்கி'யில் மூட்டையைத் தூக் கிப் போட்டதும், பண்ணையார் டிக்கி கத வைப் 'படார்' என்று அறைந்து மூடினார். அதிலிருந்தே அவரது ஆத்திரத்தின் உச்சநிலை புரிவது மாதிரி இருந்தது.

அவரின் முன் நிற்கவே பயந்தவர்கள் போல வந்த வழியே திரும்பி ஒடத் தொடங்கிய ஆட்கள் ''எப்படியும் புடிச்சிட ணும்டா. இல்லைன்னா செத்தோம்'' என்று பேசியபடியே போனார்கள்.

''அவர்கள் கையில் சிக்கினால் தொலைந்தோம்'' என்றான் கிட்டான். அப்படியே எல்லோரையும் புதருக்குள் வைத்து அமுக்கினான்.

மூக்கிற்குள் தூசி புகுந்து விடவே, வந்த தும்மலை அடக்க முடியாமல் திணறினான் உதாரணம். ''ஏய் மூச்சுக் காட்டக் கூடாது'' என்று அவனை எச்சரித்தான் செந்தில்.

ஆட்கள் புதரைக் கடந்து சாலையில் நெடுந்தூரம் நடந் தனர். அந்தப் பக்கம் பண்ணை யாரின் கார் 'சரேல்' எனப் பாய்ந்து வந்த வழியே திரும்பி விரைந்தது. 'ஹச்...ஹச்' அடுத்தடுத்து தும்மல் போட்டதும்தான் உதாரணத்திற்கு உயிர் வந்தது. மறைவில் வைத்திருந்த சைக் கிள்களை எடுத்துக் கொண்டு குறுக் குச்சாலைகளில் புகுந்து பறந்தனர்.

எல்லா சைக்கிள்களும் சிட்டழகு வீட்டு வாசலில் போய் நின்றன. மூச்சிரைக்க இறங்கியவர்கள் சிட்டழகுவின் ஓலை வீட்டுக் கதவைப் படபடவென்று தட்டினர்.

பதறியடித்துக் கொண்டு கதவைத் திறந்தாள் சிட்டழகுவின் தாய் வேலாயி. அவள் கையில் அரிக்கேன் விளக்கு இருந்தது. அதன் சுடரைத் தூக்கி விட்டு அவர்களைப் பார்த்தாள். ''அட நீங்கதானா? நான் யாரோன்னு நினைச்சேன்... ஏண்டா கதவை உடைக்கற மாதிரி தட்டுனீங்க?'' என்றாள் ஆசுவாசப்படுத்திக் கொண்டு.

எப்படி சொல்வது என்று புரியாமல் நால்வரும் தவித்தனர். அதற்குள் சிட்டழகு வின் அப்பா பக்கிரிசாமி வந்தார்.

வந்தவுடனே ''எங்கே நீங்க மட்டும் நிக்கறீங்க? சிட்டழகைக் காணோம்'' என்றார்.

''அதானே, எங்கே சிட்டழகு?'' என்றாள் வேலாயியும் சுதாரித்துக் கொண்டவளாக.

''அவளை...'' தயங்கினான் செந்தில்.

''அவளை....'' பதட்டமாகக் கேட்டாள் வேலாயி.

''அவளை ஒரு கும்பல் தூக்கிக்கிட்டுப் போயிடுச்சி'' என்றான் கிட்டான்.

''ஐயோ... என் மகளைத் தூக்கிக்கிட்டுப் போயிட்டாங்களா?'' அலறினாள் வேலாயி.

''யார் அது? ஏண்டா தூக்கிட்டுப் போனாங்க? இப்ப எம்மக எங்கடா?'' பக்கிரிசாமியும் பதட்டமானார்.

''ஐயோ, என் மகளுக்கு என்ன ஆச்சோ ஏது ஆச்சோ தெரியலையே...'' தரையில் உட்கார்ந்து சத்தமாக ஒவென அழத் தொடங்கினாள் வேலாயி.



அவளது சத்தம் கேட்டு அக்கம் பக்கத்து வீட்டு ஆட்கள் எழுந்து வந்தனர். கிட்டானின் அப்பாவும் வந்தார். ''என்னடா பிரச்னை?'' என்றார் கிட்டானைப் பார்த்து.

கிட்டான் நடந்ததைச் சொன்னான்.

பக்கிரிசாமி அருகில் சென்ற கிட்டானின் அப்பா, அவரைச் சமாதானப்படுத்தினார்.

''நம்ம வீட்டுக் குழந்தையைத் தூக்கிட்டுப் போகக் காரணம் ஏதுமில்லை பக்கிரி. நிதானமா யோசிச்சு முடிவு எடுக்கலாம். புள்ளையை எப்படியும் கண்டு பிடிச்சிடுவோம். கவலைப்படாதீங்க'' என்றார். ஆளாளுக்கு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தனர்.

கிட்டான் குறுக்கிட்டுச் சொன்னான் : ''சிட்டழகைப் பண்ணையார் தோட்டத்துப் பக்கம்தான் தூக்கிக்கிட்டுப் போனாங்க.''

''என்னடா சொல்ற?''

''ஆமாங்க. அந்தப் பக்கமாத்தான் போனாங்க'' என்றான் கிட்டான். சில விஷயங்களை மறைத்துவிட்டு.

''அப்ப வாங்க, எல்லோருமா அந்தப் பக்கம் போய் தேடிப் பார்க்கலாம்'' என்றபடி பக்கிரிசாமியுடன் ஏழெட்டுப் பேர் புறப்பட்டனர்.

அதற்குள் பண்ணையாரின் ஆட்கள் தோட்டத்து வீட்டுக்குத் திரும்பி இருந்தனர்.

அவர்கள் பண்ணையார் முன் பணிவாகத் தரையைப் பார்த்தபடி நின்றிருந்தனர்.

பண்ணையார் அவர்களை எரித்து விடுவது போல் பார்த்தார். ''மடையன்களா இப்படி வெறுங்கையுடன் வந்து நிக்கறீங்களே?. பசங்க ஊருக்குள் போய் என்ன சொல்லி வைக்கப் போறாங்களோ தெரியலை. நாளைக்குப் புள்ளையைக் காணோம்னு பெத்தவங்க போலீசுக்குப் போய், போலீஸ் ஊருக்குள் வந்தால் நிலைமை என்ன ஆகிறது? உங்களால ஒரு வேலையை ஒழுங்கா செய்ய முடியுதா? தண்டச் சோறுகளா! போங்கடா என் மூஞ்சியில் முழிக்காதீங்க'' என்று இரைந்து கொண்டிருந்தார்.

அடுத்து என்ன நடக்குமோ என்கிற அச்சத்தில் அந்த ஆட்களுக்கு நாக்கு வறண்டது.

''போங்கடா. போய் சவுக்குத் தோப்பு வீட்டுல தலைமறைவா இருங்க. நான் சொல்லி அனுப்பும்போது வந்தால் போதும். அதுவரைக்கும் வெளியே தலையைக் காட்டக் கூடாது'' என்று சொல்லி விரட்டினார்.

அவர்கள் அவசரமாகத் தோட்டத்தின் புற வாசல் வழியே வெளியேறினர்.

சிட்டழகைத் தேடிக் கொண்டு வந்தவர்கள் பண்ணையார் தோட்டத்து வீட்டை நெருங்கினர்.

ஆள் அரவம் கேட்கவே பண்ணையாரே வெளியே வந்தார். ''என்ன விஷயம் இந்த நேரத்தில் இவ்வளவு பேர் கிளம்பி வந்திருக்கீங்க?'' என்றார் ஒன்றும் தெரியாத அப்பாவி மாதிரி.

வேலாயி அவரைக் கண்டதும் மீண்டும் 'ஒவென' அழத் தொடங்கினாள்.

"அழாதீங்க அம்மா. என்ன நடந்தது சொல்லுங்க?" என்றார் பண்ணையார்.

பக்கிரிசாமிதான் சொன்னார்: "எவனோ பாவி என் மகளைத் தூக்கிக்கிட்டு வந்ததா தகவல். அதான் தேடிக்கிட்டு வந்தோம்"

"உன் மகளைத் தூக்கிக்கிட்டுப் போயிட்டாங்களா? என்னப்பா சொல்ற? நம்ம ஊரில் இது மாதிரி அநியாயம் நடந்ததே இல்லையே" என்றார் பண்ணையார் பரிதாபப்படுபவர் மாதிரி.

"அடப்பாவி என்னமா நடிக்கிறான்" என்றான் கூட்டத்தோடு நின்ற உதாரணம் முணுமுணுப்பாக. உடனிருந்த செந்தில் "சும்மா இருடா... சிக்கல் பண்ணிடாதே" என்றான்.

"அநியாயம்தான் ஐயா நடந்து விட்டது. எதுக்கும் உங்க தோட்டத்தில் தேடிப் பார்த்திடலாம். ஒளிஞ்சு இருக்கானுங்களான்னு" என்றார் கிட்டானின் அப்பா.

"நம்ம தோட்டத்தில்தானே? பார்த்திடலாம். நீங்க எதுக்குச் சிரமப்படணும்? என் ஆட்களை விட்டே தேடச் சொல்றேன். புள்ளையை எங்கிருந்தாலும் கண்டுபிடிச்சிடலாம். எல்லோரும் உள்ளே வந்து திண்ணையில் உட்காருங்க" என்றார்.

எல்லோரும் உள்ளே சென்று பண்ணையார் வீட்டு நீண்ட திண்ணையில் உட்கார்ந்தனர்.

பண்ணையார் அருகில் நின்ற ஒரு ஆளைக் கூப்பிட்டு, "ஏய், பின் கட்டில் தூங்கற நம்ம ஆட்களை எழுப்பி கூட்டிட்டு வா" என்றார்.

அவன் ஓட்டமும் நடையுமாக உள்ளே போனான். திரும்பும் போது அவனுடன் பத்துப் புதிய ஆட்கள் வந்தனர்.

அவர்களைப் பார்த்து "டேய் எல்லோருமாக நமது தோட்டம் முழுவதும் வலை போட்டு அலசுங்கடா... யாராவது புது ஆள் புள்ளை பிடிக்கிறவன் ஒளிஞ்சிருந்தால் புடிச்சிக்கிட்டு வாங்க இங்கே" என்று உத்தரவு போட்டார்.

"ஐயா, நம்ம தோட்டத்துல யார் நுழைய முடியும்?" என்றான் ஒருவன்.

"சொன்னதைச் செய்யுங்கடா... கேள்வி கேட்டுக்கிட்டு... எவனாவது வெளியூர்காரன் நுழைஞ்சிருந்தாலும் இருக்கலாமில்ல. எதுக்கும் போய் நல்லா தேடிப் பாருங்க, போங்க வேகமா" என்று சிடுசிடுத்தார் பண்ணையார்.

"சரிங்கய்யா" என்றபடி அவர்கள் திசைக்குச் சிலராய் பிரிந்து தோட்டத்தின் இருளில் புகுந்து மறைந்தார்கள்.

திண்ணையில் இருந்தவர்களிடம் பேசிய பண்ணையார், "எதுக்கு எல்லோரும் கவலைப்பட்டுக்கிட்டு உட்கார்ந்திருக்கீங்க? புள்ளையை எப்படியும் நம்ம ஆட்கள் கண்டுபிடிச்சிடுவாங்க. அவங்க வந்தவுடனே நான் பத்திரமாக வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன். நீங்கள் கவலைப் படாமல் வீட்டுக்குப் போங்க" என்றார் பவ்யமாக.

"அதானே பொறுப்பை ஐயா எடுத்துக்கிட்ட பின்னாடி ஏன் எல்லோரும் வீணா உட்கார்ந்துக்கிட்டு, வீட்டுக்குப் போகலாம்" என்று சிலர் எழுந்தனர்.

சிட்டழகுவின் அப்பா மட்டும் சற்றுத் தயங்கினார்.

"என்னப்பா நான் சொல்வதில் நம்பிக்கை இல்லையா? நம்ம தோட்டத்துல மட்டுமில்ல. ஊர் முழுக்க என் ஆட்களை அனுப்பி, தேடச் சொல்றேன். எப்படியும் உன் பெண்ணைக் கண்டுபிடிச்சிடலாம். தைரியமாக வீட்டுக்குப் போ" என்றார் பண்ணையார்.

"சரி,வாங்க போகலாம். ஐயா இவ்வளவு

எவரெஸ்ட் பெயர் காரணம்?




உலகிலேயே உயரமான சிகரமான எவரெஸ்ட் சிகரத்திற்கு அப்பெயர் வரக்காரணம் சர். ஜார்ஜ் எவரெஸ்ட். 1830லிருந்து 1843 வரையில் மத்திய இந்தியாவில் சர்வேயராக இருந்தவர். இமயமலையின் உயர்ந்த சிகரத்தைக் கண்டுபிடிக்க இவர் பெரும் முயற்சி எடுத்து வெற்றி பெற்றதால் அவர் பெயரே எவரெஸ்ட் சிகரத்திற்கு வைக்கப்பட்டது.

- ஆர்.ஆர்.பூபதி, திண்டுக்கல்.

ராடார் கண்டுபிடிக்க உதவிய பிராணி!

வெளவால் பறக்கும்போது மனிதர்களுக்குக் கேட்காத தனக்கு மட்டுமே கேட்கக் கூடிய ஒலியை எழுப்பிக் கொண்டே பறக்கிறது. அந்த ஒலி, அது பறக்கும்போது எதிர்ப்படும் பொருட்களில் மோதி எதிரொலிக்கிறது. அந்த எதிரொலியும் வெளவாலுக்கு மட்டுமே கேட்கிறது. அதனால்தான் இருட்டில் கூட எதன்மீதும் மோதிக் கொள்ளாமல் அதனால் பறக்க முடிகிறது.



ராடார் கண்டுபிடிக்கப் படுவதற்கு இந்த வெளவால் தான் முன்னோடி. இதன் தனித் தன்மையைப் போலவே வெகு தொலைவில் வரும் எதிரிகளின் விமானத்தை எதிர் ஒலியின் மூலம் கிரகித்துக் கொள்ளும் திறமை ராடார் கருவிகளுக்கு உண்டு.

- ஜி.கே.எஸ்.மூர்த்தி,
கோபி செட்டிப்பாளையம்

தூரம் சொல்லும்போது யோசிக்க ஒண்ணுமில்லை'' என்றார் ஒருவர்.

எல்லோரும் வீடு நோக்கித் திரும்பினர்.

வழியில் முத்துகுமார் கேட்டான் : ''என்னடா கிட்டான் எல்லாம் ஒரே நாடகமா இருக்கே?''

''ஆமாம். பண்ணையார் சிட்டழகை வீட்டுக்குள்ளேயே வச்சிக்கிட்டு நாடகம் தான் ஆடறார். இந்த உண்மையை நாம சொன்னால் எடுபடாது. அதுமட்டுமில்லை வேறு பல பிரச்னைகளும் வந்து சேரும். அவர் நினைச்சால் என்ன வேணுமின்னாலும் செய்யலாம். அவரைப் பற்றிய உண்மைகள் வெளியில் தெரியாத வரைக்கும் யாரும் அவரை எதிர்த்து ஒரு வார்த்தை பேச மாட்டாங்க'' என்றான் கிட்டான்.

''இப்ப என்னடா பண்றது?'' என்றான் செந்தில்.

''காலையில வரைக்கும் பார்ப்போம். சிட்டழகு கிடைச்சிட்டான்னு பண்ணையார், வீட்டுல கொண்டு வந்து விட்டுட்டால் பிரச்னையில்லை. இல்லைன்னா அடுத்த வழியை யோசிக்க வேண்டியது தான்'' என்றான் கிட்டான்.

''அதெப்படிடா கொண்டு வந்து விடுவார்? விட்டுட்டா தன்னைக் கடத்தினது பண்ணையார் ஆட்கள் என்பதைச் சிட்டழகு வெளியில் சொல்லிடுவான்னு பயப்பட மாட்டாரா?'' என்றான் உதாரணம்.

''இப்போ அதுதான் சிக்கல். சிட்டழகு அப்பாக்கிட்ட தான் கண்டுபிடிச்சி அழைச்சிட்டு வர்றதா சொல்லி இருக்கார். அதே சமயம் அவளை விட்டாலும் பிரச்னைன்னு யோசிப்பார். இப்போ அவர் என்ன பண்ணப் போறாருங்கிறதை வச்சுதான் நாம அடுத்த முடிவு எடுக்க முடியும். எதுக்கும் காலைல வரை பொறுமையா இருக்கலாம்'' என்றான் கிட்டான்.

வேலாயி தொடர்ந்து அழுது புலம்பியபடியே வந்தாள். எல்லோரின் முகத்திலும் சோகம் அப்பிக் கிடந்தது. சிட்டழகு வீட்டு முற்றத்தில் மேலும் சிலர் கூடி இருந்தனர்.

இவர்களை எதிர்கொண்ட அவர்கள் ''என்ன கிடைச்சிட்டாளா?'' என்றனர் எதிர்பார்ப்புடன்.

பக்கிரிசாமி உதட்டைப் பிதுக்கினார். கிட்டானின் அப்பா, பண்ணையார் ஆட்கள் தேடிக் கொண்டிருப்பதாகச் சொன்னார்.

யாரும் கலைந்து போகவில்லை. எந்த நேரத்திலும் பண்ணையார் ஆட்கள் சிட்டழகைக் கண்டுபிடித்து அழைத்து வரலாம் என்ற நம்பிக்கையோடு அவள் வீட்டின் முற்றத்திலேயே விடிய விடிய காத்திருந்தனர்.

பொழுது விடிகிற நேரம். கிழக்கு மங்கலாக வெளுத்துக் கொண்டு வந்தது. தூக்கக் கலக்கத்தில் இருந்தவர்களைத் திடுக்கிட்டு, விழிக்கச் செய்தது ஒரு கார் வரும் சத்தம்.

(தொடரும்)



எஸ்.ஜே.ஜனனிக்கு வயது 10. நூற்றுக்கும் மேற்பட்ட கச்சேரிகளைச் செய்திருக்கிறார். அவரே பாடி 2 ஆல்பங்களை வெளியிட்டிருக்கிறார். அண்மையில் குடியரசுத் துணைத் தலைவரிடமிருந்து சிறந்த குழந்தை சாதனையாளர் என்ற விருதைப் பெற்றிருக்கிறார்.

தூய மேரி மெட்ரிகுலேஷன் பள்ளியில் ஆறாம் வகுப்பு படிக்கும் ஜனனி வசிப்பது கடலூரில். "நான் இரண்டு வயதிலேயே பாட்டுப் பாட ஆரம்பிச்சுட்டேனாம். எனக்குப் பாட்டு மேல உள்ள ஆர்வத்தைப் பார்த்து 4 வயதில் முறையாகக் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தார்கள். எங்கள் குடும்பத்தில் பாடகர்களோ, இசைக் கலைஞர்களோ கிடையாது. அம்மா, அப்பாவுக்கு இசையை ரசிக்கத் தெரியும். எனக்கு யாரிடமிருந்து இந்த ஆர்வம் வந்ததுன்னு தெரியலை " என்கிறார்.

தினமும் 4.30 மணிக்கே எழுந்து சாதகம் செய்துவிட்டு, வீட்டுப் பாடம் முடித்துவிட்டுப் பள்ளிக்குச் செல்வது கஷ்டமாக இல்லையா? "எனக்கு விவரம் தெரிந்த நாளிலிருந்து தினமும் 4.30 மணிக்கே எழுந்து விடுகிறேன். அதனால் காலையில் லேட்டாக எழக் கூடிய சுகம் எல்லாம் எனக்குத் தெரியாது. பள்ளி நாட்கள், விடுமுறை நாட்கள் என்ற பாகுபாடெல்லாம் எனக்குக் கிடையாது."

அடிக்கடி கச்சேரி, விழாக்கள் என்று ஊர் ஊராகப் பறந்து கொண்டிருக்கும் போது படிப்பில் எப்படி கவனம் செலுத்த முடிகிறது?



• சாதனையாளர் விருது பெறும்போது


"இசை மேல் எனக்கு எவ்வளவு ஆர்வம் இருக்கிறதோ, அதேபோல் படிப்பு, விளையாட்டுகளில் ஆர்வம் இருக்கிறது. படிப்பில் நான் முதல் தரமான மாணவிதான். அடிக்கடி வெளியூர் செல்லும்போது என்னுடைய ஆசிரியர்கள் ஸ்பெஷலாக எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து விடுகிறார்கள். எனவே படிப்பில் பிரச்னை வருவதில்லை."

படிப்பு, இசையைத் தவிர ஜனனிக்கு விளையாட்டிலும் ஆர்வம் இருக்கிறது. "கிரிக்கெட் பார்க்கவும் விளையாடவும் பிடிக்கும். சைக்ளிங் பண்ணுவேன். இது தவிர கீ போர்டு வாசித்து, நானே பாடலை கம்போஸ் செய்வேன். கதைப் புத்தகங்கள் படிக்கவும் ரொம்பப் பிடிக்கும்."

இசையில் ஒரு பூங்காற்று

இவ்வளவும் செய்ய நேரமிருக்கிறதா? என்றால் "நிச்சயமாக நேரம் இருக்கு. நேரத்தைத் திட்டமிட்டுச் செய்தால் இன்னும் கூட நிறையக் கற்றுக்கலாம். டைம் இல்லை, போர் அடிக்கிறது என்ற வார்த்தைகளே என்னிடமிருந்து வராது. 250 கீர்த்தனைகள் தெரியும். 11 இந்திய மொழிகளில் பாடி இருக்கிறேன்."

"என்னுடைய முதல் ஆல்பம் 'நாத ஒலி' 1999ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அப்போது எனக்கு வயது 7. இதில் ஒன்பது பாடல்களைப் பாடி இருக்கிறேன். இந்த ஆண்டு ஜனவரியில் 'பூங்காற்று' என்று ஒரு



• பாடல் ரிகார்டிங்போது...


• பாப் ஆல்பம் வெளியிடப்பட்டது. இந்த ஆல்பத்தில் என்னுடன் சேர்ந்து பாடியிருப்பவர் எஸ்.பி. பாலசுப்ரமணியம் அங்கிள். பெரிய பாடகருடன் பாடியது வித்தியாசமான அனுபவம். நிறைய விஷயங்களைச் சொல்லிக் கொடுத்தார். பாடலை எழுதியவர் வைரமுத்து அங்கிள். என் பாடலை டி.வி.யில் பார்த்த பின்பு, தமிழை நன்றாக உச்சரிப்பதால் அவரே அனைத்துப் பாடல்களையும் எழுதித் தந்தார்."


தான் உண்டு; தன் வேலை உண்டு என்று அமைதியாக இருக்கும் ஜனனியின் இலட்சியம் "எம்.எஸ். பாட்டி போல் பெரிய பாடகியாக வேண்டும்; இசை அமைப்பாளராகவும் வர வேண்டும்; சிறந்த டாக்டராகவும் ஆக வேண்டும்" என்று அடுக்குகிறார்.


ஜனனியின் குரல் குழந்தைத்தனமாக இல்லாமல் மிகவும் பக்குவப்பட்டு இருக்கிறது. எனவே சினிமாவில் பாட ஆரம்பித்திருக்கிறார் ஜனனி.


2000 - 2001 ஆம் ஆண்டுக்கான சிறந்த குழந்தை சாதனையாளர் விருதுக்குத் தமிழ் நாட்டிலிருந்து 150 பேர் போட்டியிட்டார்கள். அதில் ஜனனி ஒருவர் மட்டும் தேர்வு செய்யப்பட்டு துணை ஜனாதிபதி கிருஷ்ணகாந்த் அவர்களிடம் விருதை வாங்கி இருக்கிறார். இது தவிர நிறைய நிறுவனங்கள், அமைப்புகள் பல்வேறு விருதுகளை ஜனனிக்கு வழங்கியுள்ளன.

அட்டையில் : ஜனனி
வண்ணப்படம் : ஸ்ரீஹரி




ஒளிரும் அற்புதக் கல்
ஒரு நாள் அரண்மனைக் குளத்தைக் காவல் காத்துக் கொண்டிருந்தான் ஒரு காவலாளி.
ஆ! தண்ணீருக்குள் ஏதோ மின்னுகிறதே! உடனே இதை அரசரிடம் தெரிவிக்கணும்.
அங்கு வந்த அரசர்-
இது ஏதோ உயர் வகை அரிய கல் போல் தெரிகிறது. குளத்தில் இருக்கும் தண்ணீரை வெளியேற்றுங்கள்.
உத்தரவு அரசே!
அரசே! தண்ணீர் முழுவதையும் வெளியேற்றிவிட்டோம். ஆனால் அந்தக் கல்லைக் காணோம்.
ம்... சகதிக்குள் புதைந்து போயிருக்கலாம். மண்ணை வெளியில் கொட்டி, தேடிப் பாருங்கள்.
© 2002 MALAY FEATURES WORLD RIGHTS RESERVED


ஆனால் -
அரசே! குளம் முழுவதும் தேடிப் பார்த்துவிட்டோம். ஒன்றும் கிடைக்கவில்லை.
எங்கே போயிருக்கும்?
மீண்டும் குளத்தில் தண்ணீர் விடப்பட்டது.
ஆ... மறுபடியும் அந்தக் கல் தெரிகிறதே! இது என்ன அதிசயம்!
அரசருக்குத் தெரிவிக்கப்பட்டது.
இது ஏதோ அற்புதமாகத் தெரிகிறது. போதிசத்துவரை அழைத்து பிரச்னையைச் சொல்வோம்.
போதிசத்துவர் குளத்தைச் சுற்றிப் பார்வையிட்டார்.
ஆஹா! கண்டு பிடிச்சிட்டேன்.


போதிசத்துவர் இரண்டு கைகளிலும் தண்ணீரை அள்ளினார்.
அரசே, என் கைகளிலுள்ள தண்ணீரைப் பாருங்கள்.
அருகில் வந்து பார்த்த அரசர் -
ஆ! இது என்ன அதிசயம்! அந்தக் கல் எப்படி உங்கள் கையில்?
இந்தக் கல் குளத்தில் இல்லை. இந்தப் பனைமரத்தில் உள்ள காக்கைக் கூட்டில்தான் இருக்கிறது. கூட்டில் உள்ள கல்லின் ஒளி குளத்தில் பிரதிபலித்திருக்கிறது.
போதிசத்துவரே நன்றி! காவலர்களே, காக்கைக் கூட்டிலிருந்து மெதுவாக அந்தக் கல்லை எடுங்கள்.
© 2002 MALAY FEATURES WORLD RIGHTS RESERVED



பாட்டில் மரம்!

நாம் பல வகையான மரங்களைப் பார்த்திருப்போம். ஆனால் வினோதமான உருவம் கொண்ட புட்டிமரம் அல்லது பாட்டில் மரத்தை ஆஸ்திரேலியாவில் பிறந்திருந்தால் மட்டுமே பார்த்திருக்க முடியும். ஏனெனில் இவை மேற்கு ஆஸ்திரேலியாவிலும், வடமேற்குக் கடற்கரை பகுதிகளிலும் வளர்கின்றன. வினோத விலங்குகளுக்கு மட்டுமல்ல, வினோத மரங்கள், வினோத உயிரினங்களுக்கும் பெயர் பெற்றது ஆஸ்திரேலியா.

இம்மரத்திற்கு 'பாவோ:பாப்' அல்லது புட்டிமரம் என்று இரு பெயர் உண்டு. மரத்தின் கீழ்ப்பகுதி வீங்கிய தோற்றத்துடன் காணப்படும். இந்த வீக்கம் உள்ள அடிமரம் 20 மீட்டர் சுற்றளவு கொண்டது. இதன் மேற்பகுதி குறுகி ஒரு புட்டி அல்லது பாட்டிலைப் போன்ற உருவத்துடன் இருக்கும். எதற்காக இந்த வீக்கம்? இப்புட்டி மரம் கீழே வீங்கிக் காணப்படும் பகுதியில் நீரைச் சேமித்து வைக்கிறது. அடிமரம் உண்மையிலேயே மிகப் பெரிய தண்ணீர் புட்டிதான். இது வெப்பமான சூழ்நிலையில் தன்னைப் பாதுகாக்கவே, இப்படி வீங்கி நீரைச் சேமிக்கிறது. இது தனக்கு மட்டுமல்ல, அங்கு வாழும் பழங்குடியினர், விவசாயிகள், ஆய்வுக் குழுவினர் போன்றவர்களின் அவசரத் தேவைக்கும் அடிமரத்தின் நீரைத் தந்து உதவுகிறது. அவர்கள் அடிமரம் அல்லது வேரைக் கீறி அதில் சேமிக்கப்பட்டுள்ள நீரை அருந்தி உயிர் பிழைத்துக் கொள்கின்றனர்.

சில 'பாவோபாப்' மரங்கள் 150 ஆண்டுகள் வரையிலும்கூட வாழ்கின்றன. பெரும்பாலும் ஒன்றிரண்டு பெரிய மரங்கள் நடுவிலும் அவற்றைச் சுற்றி இளமரங்களும் சேர்ந்து கூட்டமாகவே எப்போதும் வளர்கின்றன. இம்மரத்தின் விதை நீண்ட தொலைவிற்குப் பரவாமல் இருப்பதற்கு இதுவே காரணம் என்று சொல்லப்படுகிறது.

புட்டி மரத்தின் மரப்பட்டை சாம்பல் பூத்த இளஞ்சிவப்பும், இலைகள் மங்கிய பச்சை நிறமும் கொண்டவை. இதன் பூக்கள் வெண்மை நிறம் உடையவை. இதன் விதைகள் கறுப்பு நிறத்தில் காட்சி அளிக்கும். இவ்விதையின் சிறப்பம்சம் என்னவெனில் விதைகள் மாவுக்கூழ் போன்ற சதைப் பற்றுக்குள் இருக்கும். இதனை ஊற வைத்து, அக்கூழை நன்கு கொதிக்க வைத்து, சர்க்கரை சேர்த்து அருந்தினால் வயிற்றுக் கடுப்பு நிற்கும் என அப்பகுதி பழங்குடி மக்கள் நம்புகின்றனர். ஆஸ்திரேலிய பழங்குடியினர் இவற்றின் கொட்டைகளை நன்கு செதுக்கி வண்ணம் தீட்டி கைவண்ணப் பொருட்களாக விற்பதும் உண்டு. மரத்தை அறுத்து தட்டு, தாம்பாளம் போன்றவற்றையும் செய்கின்றனர். பிரஷ் தயாரிக்கவும் இம்மரத்தின் தண்டுகள் உதவுகின்றன.

- பா. கார்த்திகேயன்,
பதினோராம் வகுப்பு,
பழநி.


கோகுலம்
போஸ்டர்


கால்பந்து ஹீரோ
ரொனால்டோ

கேட்கட்டுமா டாக்டர்?



● டி.எம்.முருகானந்தம், திருவைகாவூர்

? கீரைகளைப் பச்சையாகச் சாப்பிட்டால் அதிக சத்துகள் உடலுக்குக் கிடைக்கும் என்று கூறுகிறார்களே... இது உண்மையா டாக்டர்?

! உண்மையில்லை முருகானந்தம். சமைக்கும்போது கீரைகளில் உள்ள சத்துகள் அழிந்துவிடும் என்னும் தவறான கருத்தில் சிலர் இவ்வாறு கூறுகிறார்கள். ஆனால் இதில் துளியும் உண்மையில்லை. மிகச் சரியான வெப்ப நிலையில் கீரைகளைச் சமைத்தால் சத்துகள் அழிவதற்கு வாய்ப்பில்லை. இன்னும் கூறப்போனால், சமைக்கும்போதுதான் அதில் உள்ள சத்துகள் நம் உடலின் தேவைக்கு ஏற்றபடி உருமாறுகின்றன. கீரை 'அணு'க்களில் (Cell) உள்ள 'செல்லுலோஸ்' (Cellulose) எனும் பொருள் சமைக்கும்போது சிதைவடையும். இதன் பலனாக, கீரை அணுக்களில் அடங்கியிருக்கும் அனைத்து சத்துகளும் நம் குடலில் எளிதில் செரிமானமடைந்து, ரத்தத்தில் உடனடியாகக் கலந்து நல்ல பலனைத் தருகின்றன. மேலும், கீரைகளை அப்படியே சாப்பிடும்போது நோய்த்தொற்று பரவ வழி உண்டு. கீரைகள் விளையும் இடமும், விற்கப்படும் இடமும் சுத்தமாக இருக்கும் என்று உறுதி கூற இயலாதல்லவா? அந்தச் சுகாதாரக் குறைவினால் நோய்க் கிருமிகள் கீரைகள் வழியாக நம் உடலுக்குள் நுழைந்து விடலாமே! இன்னொன்று - கீரைகள் நன்கு வளருவதற்கும், அவற்றில் கிருமித் தாக்குதல் ஏற்படாமல் தடுப்பதற்கும் விவசாயிகள் பூச்சிக் கொல்லி மருந்துகளைத் தெளிப்பார்கள். அப்படிப் பட்ட சமயங்களில் அந்தக் கீரைகளைப் பச்சையாகச் சாப்பிட்டோமானால், அந்த மருந்துகளின் நச்சு விளைவால் நமக்கு அதிக ஆபத்து வரவும் வாய்ப்புண்டு. அதே நேரத்தில் கீரைகளை நன்கு கழுவி, சுத்தம் செய்து, பக்குவப் படுத்தி, சமைத்துச் சாப்பிட்டால் கிருமிகளும் அழிந்து விடும். நச்சுப் பொருள்களும் வீரியம் இழந்து விடும். இதன் பலனாக மேற்சொன்ன ஆபத்துகள் நமக்கு வருவது தடுக்கப்படும். ஆகவே, கீரைகளை எப்போதும் சமைத்துச் சாப்பிடுவதே நல்லது.

● க. துளசிராமன், கடம்பரவாழ்க்கை

? நாம் அதிகமாகக் கோபப்படும்போது, நம் கண்கள் சிவந்து போவது எதனால் டாக்டர்?

! நம் கண்களில் உள்ள ரத்த நாளங்கள் மிக மிகச் சிறியவை, மெல்லியவை. விழி வெண்படலத்தில் ஒரு வலைப்பின்னலைப்

எட்டுக்கால் பூச்சி கடித்தால் விஷமா?

போல இவை அமர்ந்துள்ளன. நாம் அதிகமாகக் கோபப்படும்போது இந்த ரத்த நாளங்கள் இயல்புக்கு மீறி விரிகின்றன. இப்போது அதிக அளவில் ரத்தம் இந்த நாளங்களுக்குப் பாய்கிறது. விழி வெண்படலம் ஒரு கண்ணாடியைப் போல இருப்பதால் அதிலிருக்கும் ரத்த நாளங்கள் நமக்குத் தெளிவாகத் தெரிகின்றன. நாளங்களில் பாயும் ரத்தமும் நமக்குத்



தெளிவாகத் தெரிகிறது. இதுதான் கண்கள் சிவந்து காணப்படுவதற்குக் காரணம்.

● க. பரணீதரன், சென்னை - 17

? சளியில் ரத்தம் வருவதற்கு என்ன காரணம் டாக்டர்?

! பல காரணங்கள் உள்ளன. அவற்றில் முக்கியமானது காசநோய். இந்த நோய்க் கிருமிகள் சுவாசப்பைத் திசுக்களை அரித்துப் புண்ணாக்கும் போது சளியுடன் ரத்தமும் வெளியேறும். அடுத்து, 'நிமோனியா' (Pneumonia) என்று அழைக்கப்படும் 'சுவாசப்பை அழற்சி நோய்' காரணமாகவும் சளியில் ரத்தம் வரலாம். இன்னொரு முக்கிய காரணம், சுவாசப்பை புற்று நோய். புற்று நோய் பாதிப்பின் முதல் அறிகுறி சளியில் ரத்தம் வருவதுதான். இவை தவிர, தொண்டைப்புண், மூச்சுக் குழல் அழற்சி, ரத்தப் புற்றுநோய், இரத்த உறைவுக் குறைபாடு, இதயவால்வு கோளாறு ஆகியவற்றாலும் இந்த நிலைமை ஏற்படலாம். காரணம் எதுவெனக் கண்டறிய ரத்தப் பரிசோதனைகள், மார்பு எக்ஸ்ரே, மார்பு ஸ்கேன் போன்ற சில பரிசோதனைகள் உதவும். சிகிச்சைகளை முறைப்படி செய்து வந்தால், நோய் குணமாகும். சளியில் ரத்தம் வருவதும் நின்றுவிடும்.

டாக்டர் கு.கணேசன்

● ம. மாதவன், அந்தியூர்

? எட்டுக்கால் பூச்சி கடித்தால் அதிக விஷமாமே... உண்மையா டாக்டர்?

! எட்டுக்கால் பூச்சியின் வகையைப் பொறுத்தும் விஷத்தின் அளவைப் பொறுத்தும், அது கடிக்கும் நபரின் உடல் எதிர்ப்பு சக்தியைப் பொறுத்தும்தான் விஷம் அதிக ஆபத்தைத் தருமா, குறைந்த ஆபத்தைத் தருமா என்று சொல்ல முடியும். எட்டுக் கால் பூச்சி கடித்தால் சிலருக்கு உடலில் அரிப்பு மட்டும் ஏற்படும். வேறு சிலருக்கு அரிப்புடன் உடல் சிவந்து போவது, தடிப்புகள் தோன்றுவது, தொண்டையை இறுக்குவது போன்ற நிலைமை உண்டாவது, மூச்சுத் திணறல்




ஏற்படுவது என்று வேறு பல அறிகுறிகளும் தோன்றலாம். எட்டுக்கால் பூச்சி கடித்து இறந்தவர்களும் உண்டு. ஆக மொத்தத்தில் எட்டுக் கால் பூச்சியின் விஷம் ஒவ்வாமை (Allergy) குணங்களை ஏற்படுத்தக் கூடியது என்பது உண்மை. ஒவ்வாமை மிகவும் ஆபத்தானது. அதை அலட்சியம் செய்யலாகாது. உடனடியாக அதற்குச் சிகிச்சை பெற்றுவிட வேண்டும். அப்போதுதான் உயிருக்கு வருகின்ற ஆபத்தைத் தடுக்க இயலும்.

2 மாலா தேடிய மாயப்பெண்

கதை : விஜி **படம் : சேகர்**




இங்கு யாராவது வசிக்கிறீர்களா?
என்ன வேண்டும் மாலா? நான் இங்கே இருக்கிறேன்.
தங்களிடம் இருக்கும் பந்தைக் கொடுத்தால் நான் மிகவும் நன்றியுள்ளவளாக இருப்பேன்.
பந்தைக் கொடுக்க வேண்டும் என்றால் நீ ஒரு உதவி செய்ய வேண்டும்.
நானா? என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்.
சௌந்திரபுரியின் மன்னன் நான். பெயர் தீரசேனன்.
தங்களைப்பற்றி நிறையக் கேள்விப் பட்டிருக் கிறேன். எப்படி சிறிய உருவ மாக மாறினீர்கள்?
எனக்குத் திலகன் என்ற மகனும் பொன்னி என்ற மகளும் உண்டு.
அவர்கள் எல்லாம் எங்கே?
சொல்கிறேன். ஒரு நாள்...
அரண்மனையில் -
அரசே! தங்களைக் காண மரகத மலையிலிருந்து ஒரு பெண் வந்திருக்கிறாள்.
யாரது? வரச் சொல்.


அரசே! வணக்கம். என் பெயர் மந்திர கலா. என்னுடைய விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள் என்று நம்புகிறேன்.
உன்னைப் பார்த்தால் சாதாரணமானவள் போல் தெரியவில்லை. சரி, சொல்.
தங்கள் மகனை நான் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன்.
என்ன தைரியம் உனக்கு?
நான் தங்களைவிட எதிலும் குறைந்தவள் அல்ல.
அப்பா, இவளைப் பார்த்தால் மாயப் பெண் போல் தெரிகிறது. இவளை மணக்க மாட்டேன்.
அண்ணா சொல்றது தான் சரி. இப்பொழுதே இவளை இங்கிருந்து அனுப்பிவிடுங்கள்.


நான் மாயப் பெண்தான். நான் சொல்வதைக் கேட்டால் எல்லோருக்கும் நல்லது.
அப்பா, இவள் இப்படி மிரட்டுகிறாளே?
அவளால் என்ன செய்ய முடியும்?
நீங்கள் ஒத்துக் கொள்ளவில்லையென் றால் உருவம் மாற்றி என் காட்டுக்குள் விட்டுவிடுவேன்.
நீ என்ன செய்தாலும் நான் உன்னைத் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்.
என்னை அவமானப்படுத்திய நீ நாயாவாய். உன் தங்கை கிளியாகவும் உன் தந்தை சிறிய உருவமாகவும் மாறி விடுவீர்கள்.
தொடரும்

ஒளிரும்

மாதவனும் சத்யாவும் படித்துக் கொண்டிருந்தபோது கரண்ட் கட் ஆனது. இருவரும் தட்டுத்தடுமாறி வாசலுக்கு வந்தனர்.

''நீங்களே இப்பத்தான் படிக்கப் போனீங்க. அது இந்த கரண்ட்டுக்குக் கூடப் பொறுக்கலை'' என்றார் அம்மா.

மாதவன், சத்யா இருவரும் அம்மாவைச் செல்லமாகக் கோபித்துக் கொண்டார்கள்.

''அப்பா, அங்கே பாருங்க. தீப்பொறி பறந்து வருது'' என்று கைகாட்டினாள் சத்யா.

''அது தீப்பொறி இல்லை சத்யா. நீ அடிக்கடி பாடுவியே, 'எதனாலே... எதனாலே...

எதனால், எதனால், எதனாலே?

மின்மினிப் பூச்சியின் பின்னால்

அடிக்கடி விளக்கொண்ணு

மின்னுது எதனாலே?'ன்னு. அதுதான் இது'' என்றான் மாதவன்.

''இருட்டுல ஜோரா ஒளி வீசிக்கிட்டு வருது. அப்பா, அதைப் பிடிச்சுத் தாங்களேன்'' என்றாள் சத்யா.

''பூச்சியையெல்லாம் பிடிக்கக் கூடாது சத்யா. இங்கிருந்து பார்த்தாலே அழகா மின்னுறது தெரியுது. அப்புறம் என்ன?'' - அப்பா.



● எஸ்.சுஜாதா ●

''போன மாதம் அப்பாவும் நானும் சென்னையிலிருந்து ரயில்ல வரும்போது ஆயிரக்கணக்கான மின்மினிகளைப் பார்த்தோம். அந்தக் காட்சி அப்படியே நினைவில் இருக்கு'' என்றான் மாதவன்.



''நீ பார்த்தது பகலிலேயா, இரவிலேயா?'' - சத்யா.

''பகலில் மின்மினிப் பூச்சிகள் வெளியிலேயே வருவது கிடையாது. அப்படியே வந்தாலும் அவற்றை நாம் கண்டுபிடிக்க முடியாது. இவை இரவு நேர உயிரினம். பகலில் அடர்ந்த புற்களுக்கு அடியில் மறைந்து ஓய்வு எடுக்கின்றன. இரவில்தான் உணவு தேடி வெளியே வருகின்றன'' என்று சொல்லி நிறுத்தினார் அம்மா.

''ஆண், பெண் இரண்டு பூச்சிகளுமே ஒளிருமா அப்பா?'' - மாதவன்.

''ரெண்டு பூச்சிகளுக்குமே ஒளிரக் கூடிய தன்மை உண்டு. ஆனால் ஆண் பூச்சியை விட பெண் பூச்சிகள் அதிகம் ஒளிரக் கூடிய தன்மையுடையவை. ஆண் மட்டும் பூச்சி வடிவில் இருக்கும். பெண் புழு வடிவிலேயே காணப்படும்.





பூச்சிகள்

இவற்றை Glow Worms என்று ஆங்கிலத்தில் அழைக்கிறார்கள்.''

''மின்மினி எப்படி ஒளிருதுன்னு சொல்லுங்களேன் அம்மா'' என்றாள் சத்யா.

''மின்மினியோட உடல் தலை, மார்பு, வயிறு என்று மூன்று பகுதிகளாக இருக்கும். உடல் பகுதியில் எட்டுக் கண்டங்கள் உள்ளன. வால் பகுதியிலிருக்கும் கடைசி கண்டமே ஒளிரும் உறுப்பு. சில இனங்களில் மார்பின் அருகிலிருந்து ஒளி வரும். ஒளி விடும் அணுக்கள், இவை சுவாசிக்கும்போது ஆக்ஸிஜனோடு சேர்ந்து ஆக்ஸிகரணம் அடைகின்றன. அப்போது உண்டாகும் சக்தி ஒளியாக வெளிப்படுகிறது. சரி, இன்னிக்கு கரண்ட் வர்ற மாதிரி தெரியலை. படிப்பு அவ்வளவுதானா?'' என்றார் அம்மா.

''இதுவும்கூட ஒரு வகையில படிப்புதாம்மா. பூச்சியைப் பிடிக்கும்போது கையைச் சுட்டு விடாதா?'' என்று கேட்டான் மாதவன்.

சிரித்த அப்பா ''இல்லடா. பூச்சியில் இருந்து வெளி வருகிற வெப்பம் மிகவும் குறைவானதுதான். அதனால் நம் கையைச் சுட்டுவிடாது. இவற்றின் ஒளி சிவப்பு, பச்சை கலந்த நீல நிறமாகக் காணப்படும்'' என்றார்.

''மெழுகுவர்த்தி வெளிச்சத்துல சாப்பிடலாம் வாங்க'' என்று கூப்பிட்டார் அம்மா.

''இன்னும் கொஞ்ச நேரம் கழிச்சு சாப்பிடலாம்மா. எனக்கு ஒரு சந்தேகம். அது

எதுக்காக ஒளி விடறது? இருட்டுல கண் சரியாகத் தெரியாதா?'' - சத்யா.

''கண் எல்லாம் நல்லா தெரியும். இவை ஒளி விடுவதே ஒன்றை ஒன்று அறிந்து கொள்ளத்தான்! மின்மினிகளில் பல வகைகள் உண்டு. ஒவ்வொரு வகையும் ஒரு குறிப்பிட்ட அளவு இடைவெளி கொடுத்து ஒளிரும். இதன் மூலம் சரியாகத் தங்கள் இனத்தைக் கண்டு கொள்கின்றன'' என்ற அப்பா சாப்பிட எழுந்தார்.

''அப்பா, மின்மினிப் பூச்சி என்ன சாப்பிடும்னு சொல்லுங்க?'' என்று அப்பாவை நிறுத்தினாள் சத்யா.

''மின்மினிக்கு முக்கிய உணவு மகரந்தம். சில நேரங்களில் சிறு புழுக்களையும் பூச்சிகளையும் உணவாக்கிக் கொள்கின்றன'' - அப்பா.

''மின்மினி முட்டை, புழு, கூட்டுப் புழு ஆகிய பருவங்களைக் கடந்து பூச்சியாகிறது. சில இனங்களில் முட்டை, புழு, கூட்டுப்புழு ஆகிய நிலைகளில்கூட ஒளிருகின்றன. இந்தியாவில் வாழும் மின்மினிகளைவிட அமெரிக்க மின்மினிகள் உருவத்தில் பெரியவை. ஆண் பூச்சிக்குச் சிறகுகள் உண்டு. பெண்ணுக்குக் கிடையாது. சில சமயங்களில் எதிரிகளை விரட்டவும் மின்மினி தனது ஒளியைப் பயன்படுத்திக் கொள்ளும்'' என்று சொல்லி முடித்தார் அம்மா.

''அப்பா, நிறையப் பூச்சிகளைப் பிடித்து, பாட்டிலில் போட்டால் நமக்கு நிறைய வெளிச்சம் கிடைக்குமா?'' என்று கேட்டான் மாதவன்.

''வெளிச்சம் கிடைக்கும். ஆப்பிரிக்க பழங்குடி மக்கள் இன்றும் இரவில் வெளிச்சத்திற்கு மின்மினிகளைத்தான் பயன்படுத்துகிறார்கள். பாட்டிலில் பிடிக்கிற வேலையெல்லாம் வேண்டாம். இதோ கரண்ட் வந்தாச்சு. சாப்பிட்டதும் தூங்கப் போகாமல் படிக்கணும்'' என்றபடி உள்ளே சென்றார் அப்பா.

சத்யாவும் மாதவனும் அப்பா பின்னால் உள்ளே நுழைந்தனர்.

தீவுகளைக் கண்டுபிடியுங்கள்!
கோடை விடுமுறைப் போட்டி - II முடிவு

ஜூன் இதழில் அறிவித்த கோடை விடுமுறைப் போட்டியில் ஆர்வத்துடன் நிறையப் பேர் பங்கேற்றனர். சரியான விடைகளை அளித்தவர்களிலிருந்து பத்துப் பேர் பரிசுக்குரியவர்களாகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ரூபாய் இருபது பரிசு பெறுவோர் :

1. எஸ்.ராஜன், திருவல்லிகேணி, சென்னை.
2. ஆர்.நவீன் பிரசாத், பள்ளிக் கொல்லை, வேலூர் மாவட்டம்.
3. சி. கீர்த்தனா, ஈரோடு.
4. என்.காஸ்ட்ரோ, விநாயகம்பட்டி, சேலம் மாவட்டம்.
5. பி.லாவண்யா, மான்படா, மகாராஷ்ட்ரா மாநிலம்.
6. இரா.சாருமதி, புதுப்பாளையம், கடலூர் மாவட்டம்.
7. கு. கார்த்திகேயன், பு.புளியம்பட்டி.
8. ஆர்.மெய்யம்மை, மதுரை.
9. பி.என்.நாகராஜன், நாகமங்கலம், தர்மபுரி மாவட்டம்.
10. கா.மினுமிதா, எமரால்டு அஞ்சல், நீலகிரி மாவட்டம்.



சரியான விடை
1. அந்தமான்
2. இலங்கை
3. ஆஸ்திரேலியா
4. கிரீன்லாந்து
5. மடகாஸ்கர்
6. நியூசிலாந்து

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

ஒவ்வொரு
மாதமும் இந்தப் போட்டி
நடத்தப்படும். இந்தப் போட்டியில் பள்ளி
மாணவ, மாணவியர் மட்டுமே கலந்து
கொள்ள முடியும். நீங்கள் பள்ளி மாணவர்
என்பதற்கு அத்தாட்சியாக உங்கள் பெற்றோரின்
கையொப்பம் இருக்க வேண்டும். பெற்றோர்
கையொப்பம், முகவரி கூப்பன் இல்லாத படிவங்களை
ஏற்றுக் கொள்ள இயலாது. மொத்தப் பரிசு ரூ. **1000/-.**
சரியான விடை அளித்தவர்களில் 5 பேர்
பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர்.
ஒவ்வொருவருக்கும் ரூ. **200/-** பரிசாக வழங்கப்படும்.
உங்கள் படிப்புக்குத் தேவையான புத்தகங்கள், சீருடை,
பை போன்ற பயனுள்ள பொருட்களை வாங்கிக்
கொள்ளுங்கள். உங்கள் பள்ளி, வீட்டு,
முகவரிகளை மறவாமல் குறிப்பிடவும்.
ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசி தேதி
20.8.2002.

1000/- ரூபாய் பரிசுப் போட்டி!

இந்த மாதப் போட்டி

பொருத்துக:

1. அக்பர் - கால்பந்து வீரர் ______________

2. ஜோர்டான் - ஜகார்தா ______________

3. கங்காரு - தினார் ______________


4. எல்லை காந்தி - தீன் இலாஹி ______________

5. ரிவால்டோ - மார்சுபியல் ______________

6. இந்தோனேஷியா - கான்அப்துல் கஃபார்கான் ______________

7. அறைகள் அறுநூறு: அத்தனையும் ஓர் அளவு — அது என்ன? ______________

8. இந்தப் படத்தில் உள்ளது என்ன? ______________



கோகுலம்
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை 97





கைக்கு எட்டியது வாய்க்கு எட்டியதா?

அரேபியாவில் பெய்கு எனும் சிற்றூரில் ஷேய் என்றொரு சோம்பேறி இருந்தான். அவனைப்போல் சோம்பேறியை உலகில் வேறெங்கும் காண முடியாது. உண்பதும் உறங்குவதுமே அவனது வேலைகள். ஷேய்க்குத் திருமணமும் நடந்து பிள்ளைகளும் பிறந்தனர். எனினும் அவனது நிலையில் மாறுதல் இல்லை.

அவன் மனைவி சிறுசிறு வீட்டு வேலைகளைச் செய்து அதன்மூலம் கிடைக்கும் பணத்தில் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தாள். ஷேயின் மனைவி தினமும் அவனை வேலைக்குப் போகச் சொல்லி நச்சரிப்பாள். "காலம் வரும். நம் கஷ்டங்கள் தீரும். பொறுத்திரு" என்பான் அவன். அவள் சொல்வதை அவன் காதில் வாங்கிக் கொள்வதே இல்லை. கடன்காரர்கள் வந்து கேட்டாலும் அவன் கவலைப்படுவதில்லை.

ஒரு நாள் சர்வ வல்லமை பெற்ற முனிவர் ஒருவர் அந்த நாட்டின் காட்டுப் பகுதியில் வாழ்வதாகவும் அவர் பல அற்புதங்கள் செய்வதாகவும் ஷேயின் மனைவி கேள்விப்பட்டாள். எனவே தன் கணவனை நச்சரித்து அந்த முனிவரைப் பார்த்து வரும்படி கூறினாள்.

வேலை ஏதும் செய்யாமல் விரைவில் பணக்காரனாகி விட வேண்டும் என்று நினைத்த ஷேய், மனைவி சொல்வதும் சரிதான் என நினைத்து அந்த முனிவரைப் பார்க்கக் கிளம்பினான். இரண்டு பகல், இரண்டு இரவுகள் நடந்தபின் ஓநாய் ஒன்றை வழியில் கண்டான். அந்த ஓநாய் "நண்பனே எங்கு செல்கிறாய்?" எனக் கேட்டது. "அடர்ந்த காட்டுப் பகுதியில் ஒரு முனிவர் வாழ்கிறார். அவரிடம் சென்றால் எப்படியும் என்னைப் பணக்காரனாக்கி விடுவார். அந்த நம்பிக்கையில்தான்



பணக்காரனாக வேண்டும். அதற்கான யோசனையை அவரிடம் கேட்டுத் தெரிந்துவரப் போகிறேன்.''

''எனக்கும் ஒரு பிரச்னை இருக்கிறது. அதை எப்படி நிவர்த்தி செய்வது எனக்



அவரைத் தேடிச் செல்கிறேன்'' என்றான் ஷேய்.

''நல்லது நண்பா! நீ எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும்.''

''என்ன உதவி?''

''பல ஆண்டு காலமாக வயிற்று வலியால் துடித்துக் கொண்டிருக்கிறேன். அம் மகானிடம் பேசும்போது என் வயிற்று வலி தீர மருந்து கேட்டு வா.''

''சரி கேட்டு வருகிறேன்.''

''மறந்து விடாதே!'' - ஓநாய்

ஓநாயைச் சந்தித்த பின் ஷேய் மேலும் இரண்டு பகல் இரண்டு இரவு நடந்தான். வழியில் ஓர் ஆப்பிள் மரம் குறுக்கிட்டது. அதில் காய்களோ பழங்களோ இல்லை. அது ஷேயைப் பார்த்து அழைத்தது.

''நண்பனே எங்கு செல்கிறாய்?'' எனக் கேட்டது.

''எல்லாம் தெரிந்த முனிவர் ஒருவரைப் பார்க்கச் செல்கிறேன்.''

''என்ன காரணம்?''

''நான் உழைக்காமலே விரைவில்

கேட்டு வா.''

''சரி.. உன் பிரச்னையைச் சொல்.''

''நான் பூக்கத் துவங்கியதும் அரும்புகள் கொட்டி விடுகின்றன. அப்படியே மிஞ்சும் அரும்புகள்கூட காயாகிப் பழமாவதில்லை. இதற்குக் காரணம் என்ன என்று கேட்டு வா''

''சரி... கேட்டு வருகிறேன்.''

ஆப்பிள் மரத்தைக் கடந்து மேலும் இரு பகலும் இரு இரவும் நடந்து ஒரு நீரோடையை அடைந்தான் ஷேய்.

''நண்பனே, நண்பனே, என்னைப் பார்!'' என்றொரு குரல் கேட்டது.

ஷேய் சுற்றும் முற்றும் பார்த்தான். ஒருவரும் தென்படவில்லை. ''நான்தான் அழைத்தேன்'' என்றவாறு ஒரு பெரிய மீன் துள்ளி வெளியே வந்தது.

''என்னை ஏன் கூப்பிட்டாய்?'' ஷேய் கேட்டான்.

''நீ எங்கே செல்கிறாய்?''

''எல்லாம் தெரிந்த மகானைக் காணச் செல்கிறேன்.''

"அவர் என்ன அவ்வளவு பெரிய மகானா?"

"அப்படித்தான் சொல்கிறார்கள்."

"எனக்கும் ஒரு பிரச்னை இருக்கிறது. அதைக் கேட்டு வருவாயா?"

"கண்டிப்பாகக் கேட்டு வருகிறேன். உன் பிரச்னை என்ன?"

"என் தொண்டையில் ஏதோ ஒன்று அடைத்துள்ளது. அது என்ன? அதை எப்படி எடுப்பது எனக் கேட்டு வா?"

"சரி, நீ எங்கேயும் போய்விடாமல் இங்கேயே இரு. கேட்டு வருகிறேன்" என்று புறப்பட்ட ஷேய் மேலும் இரு பகல், இரண்டு இரவு நடந்து அடர்ந்த காட்டை அடைந்தான்.

காட்டில் பல இடங்களில் தேடியும் முனிவர் சிக்கவில்லை. பின்னர் "ஷேய்... ஷேய் இங்கே வா" என்று ஒரு குரல் கேட்டது. குரல் கேட்ட பக்கம் திரும்பிப் பார்த்தான். அங்கே நீண்ட வெண் தாடியுடன் ஒரு முனிவர் இருந்தார். தான் தேடி வந்தது இவரைத்தான் என நினைத்து அவரை வணங்கினான்.

"ஷேய் என்ன விஷயமாய் என்னைப் பார்க்க வந்தாய்?"

"நீங்கள்தான் முக்காலமும் உணர்ந்தவராயிற்றே. தங்களுக்குத் தெரியாததா?"

"வரம் வேண்டுபவன், தன் வாயால் சொல்ல வேண்டாமா?"

"நான் பெருஞ் செல்வனாக வேண்டும்."

"ஊருக்குத் திரும்பிச் செல்லும் வழியில் உனக்குப் பெரும் செல்வங்கள் காத்திருக்கின்றன" - முனிவர்.

"மிகவும் நன்றி சுவாமி! வழியில் ஒரு மீன், ஓர் ஆப்பிள் மரம், ஓர் ஓநாய் ஆகியவற்றைச் சந்தித்தேன். அவை தங்கள் துன்பங்களைச் சொல்லி உங்களிடம் நிவாரணம் கேட்டு வரும்படி கூறின."

"சரி... சொல்."

"மீனின் தொண்டையில் ஏதோ சிக்கியுள்ளதாம். அதனால் எதையும் சாப்பிட முடியாமல் சிரமப்படுகிறதாம்."

"அப்படியா? அதன் தொண்டையில் ஒரு நவரத்தினக்கல் மாட்டியுள்ளது. அந்தக் கல்லை எடுத்துவிட்டால் அது முன் போல் நலமாக இருக்கும். அடுத்து ஆப்பிள் மரத்துக்கு என்ன பிரச்னை?"

"அதன் மொட்டுகள் உதிர்ந்து விடுகின்றனவாம்."

"ஆப்பிள் மரத்தின் அடியில் ஒரு பெட்டி இருக்கிறது. பெட்டி நிறைய வெள்ளிக் காசுகள் உள்ளன. அப்பெட்டியைத் தோண்டி எடுத்துவிட்டால் ஆப்பிள் மரம் முன்போல் காய்க்கும். சரி.. ஓநாயின் பிரச்னை கூறு?"

"ஓநாய்க்குப் பல ஆண்டுகளாகத் தீராத வயிற்று வலியாம்."

"ஓநாயின் வயிற்று வலி தீர வேண்டும் என்றால் அது முழுச் சோம்பேறி ஒருவனை அடித்துச் சாப்பிட வேண்டும்."


"சரிங்க ஐயா! நான் சென்று வருகிறேன். மேலும் நீர் கூறியவற்றை அவற்றிடம் சொல்லி விடுகிறேன்."

"நல்லது மகனே! சென்று வா" என்றார் முனிவர்.

ஷேய் நெடுந்தூரம் நடந்து நீரோடையிலிருக்கும் மீனைக் கண்டான்.

நச்சுத் தவளை

தென் அமெரிக்கக் காடுகளில் கொடிய நச்சுக் கொண்ட தவளை இனமுள்ளது. இந்தத் தவளையின் தோல் முழுக்க முழுக்க நச்சுத் தன்மை கொண்டதாகும். அந்த நச்சு 'அல்காலாட்ஸ்' என்று அழைக்கப்படுகிறது. இந்தத் தவளையின் நச்சை அங்கு உள்ள காட்டுவாசிகள் தங்கள் அம்புகளில் பயன்படுத்தி பறவைகளை வேட்டையாடுகின்றனர். இந்த வித்தியாசமான தவளை சிவப்பு, நீலம், மஞ்சள், கறுப்பு ஆகிய நிறங்களில் இருக்கும்.



- சு. இலக்குமணசுவாமி, மதுரை

"நண்பனே, உன் தொண்டையில் ஒரு நவரத்தினக்கல் மாட்டியுள்ளதாம். அதை வெளியே எடுத்துவிட்டால் நீ குணம் பெறுவாயாம்."

"ஷேய்! நீயே அதை எடுத்துக்கொள். எனக்கும் தொல்லை நீங்கும். அதை விற்றால் உனக்கும் பெரும்பணம் கிடைக்கும்."

"ஐயோ! எனக்கு உன் தொண்டையில் விரலை விடும் கஷ்டமும் வேண்டாம். அதன்மூலம் வரும் பணமும் வேண்டாம்." என்று கூறிய ஷேய் மீண்டும் நடந்து சென்று ஆப்பிள் மரத்தை அடைந்தான்.

"உனக்கடியில் ஒரு பெட்டி நிறைய வெள்ளிக் காசுகள் இருக்கிறதாம். அதை எடுத்துவிட்டால் நீ முன் போல காய்ப்பாயாம்."

"ஷேய்! நீயே அப்பெட்டியை எடுத்துக் கொள்ளேன்."

"அப்பெட்டியும் எனக்கு வேண்டாம். அதைத் தோண்டி எடுக்கும் சிரமமும் எனக்கு வேண்டாம்" என்று கூறிய ஷேய் மீண்டும் நடந்து ஓநாயை அடைந்தான்.

"ஷேய்! என் வயிற்று வலிக்கான காரணம் கேட்டாயா? அந்த மகான் என்ன கூறினார்?"

"உன் வயிற்றுவலி குணமாக வேண்டுமெனில் நீ முழுச் சோம்பேறி ஒருவனை அடித்துச் சாப்பிட வேண்டுமாம்."

சிறிது நேரம் யோசித்த ஓநாய், "நண்பரே! என்னை மன்னியுங்கள். உம்மைப் போன்ற சோம்பேறி உலகில் யாரும் இருக்கமாட்டார்கள். மேலும் உம்மால் யாருக்கும் எப்பயனும் இல்லை. எனவே நான் உம்மை அடித்துச் சாப்பிடப் போகிறேன்" என்று கூறி ஷேயின் மீது பாய முற்பட்டது.

ஷேய் உயிரைப் பிடித்துக் கொண்டு ஊருக்கு வந்து சேர்ந்தான். தான் சோம்பல் படாமல் இருந்திருந்தால் முனிவர் கூறியதுபோல் திரும்பிவரும் வழியிலேயே பணக்காரனாகியிருக்க முடியும் என்பதைப் பிறகுதான் புரிந்து கொண்டான். தன் சோம்பல் காரணமாக நவரத்தினக் கல்லையும் வெள்ளிக் காசுகளையும் தான் இழந்துவிட்டதை உணர்ந்து, அன்றுமுதல் சுறுசுறுப்பாக உழைத்துப் பாடுபட ஆரம்பித்தான்.

- உ. சங்கரலிங்கம், ஒன்பதாம் வகுப்பு,
புனித சூசையப்பர் மேல்நிலைப்பள்ளி,
செங்கல்பட்டு.

பல வண்ண உருளைக் கிழங்குகள்!


அம்மா உங்களுக்காக ஆசையாய் பண்ணும் மண் நிறத்தோலுடைய வெள்ளை உருளைக் கிழங்கு கறி பிடிக்கவில்லையா? இனிக் கவலையே வேண்டாம். அமெரிக்க விவசாயத் துறையைச் சேர்ந்த விஞ்ஞானியான ஆர். பிரௌவுன்



என்பவர் ஐரிஷ் நாட்டு வெள்ளை உருளைக் கிழங்கையும், அமெரிக்க ஆண்டிஸ் மலைச் சரிவுகளில் காணப்பட்ட சிவப்பு, கருஞ்சிவப்பு கிழங்குகளையும் இணைத்து, புதிய கலப்பின வகை உருளைக் கிழங்குகளை உருவாக்கியுள்ளார். இவற்றில் மேலே குறிப்பிட்ட வண்ணம் தவிர ஆரஞ்சு நிற உருளைக் கிழங்குகளும் விளைகின்றன. விவசாயம் செய்வோரும், பொது மக்களும் ஆரஞ்சு நிற உருளைகளை விரும்பி வாங்குகின்றனர். இக் கிழங்குகள் நம் கண்களைக் கவர்வதோடு, உடலுக்குப் பலமும், நோய் எதிர்ப்பும் தர வல்லவை. இவற்றிலுள்ள எதிர் ஆக்ஸிகரணிகள் சில வகை புற்று நோய்கள், சில வகை குருடுகள் போன்றவற்றைத் தடுப்பதுடன், இதயத்தின் இரத்தக் குழாய்கள் பலத்துடனும், நலத்துடனும் செயல்பட உதவுகிறன்றன. வெள்ளை உருளைக் கிழங்கைவிட, நான்கு மடங்கு அதிகமான ஜியாஸாந்தின் மற்றும் லூட்டின் என்ற வேதிப் பொருள்கள் இவற்றில் உள்ளன.

- ஸ்வாதி

உங்கள் நூலகம்



கதை சொல்வது போல் இருக்கிறது!

நீண்ட நாட்களுக்குப் பிறகு வருண் சத்யா வீட்டுக்குச் சென்றான்.

''என்ன வருண், ரொம்ப நாளா ஆளே பார்க்க முடியலை'' என்று கேட்டபடி வந்தாள் சத்யா.

''லீவுக்குப் பாட்டி வீட்டுக்குப் போயிருந்தேன். பஞ்ச தந்திரக் கதைகள், முல்லா கதைகள், விக்கிரமாதித்தன் கதைகள் என்று நிறைய புத்தகங்களை வாங்கிக் கொடுத்தார் மாமா. பொழுது நல்லா போச்சு. உனக்கும் இந்த மாதிரி கதைகள் என்றால் ரொம்பப் பிடிக்குமேன்னுதான் கொண்டு வந்தேன்'' என்றபடி புத்தகங்களை நீட்டினான் வருண்.

''மூன்று புத்தகங்களையும் எழுதியவர் பேராசிரியர் சோதியா?'' என்றபடி வாங்கிப் பார்த்தாள் சத்யா.

''ஆமாம். கர்ண பரம்பரைக் கதையான பஞ்சதந்திரக் கதைகளில் சிறுவர் படிக்க ஏற்ற 40 கதைகளைத் தமக்கே உரிய நடையில் தந்துள்ளார் ஆசிரியர். முல்லா கதைகளில் 31 கதைகளும் அருமை. விக்கிரமாதித்தன் கதைகளைப் படிக்கும்போது படிப்பது போலவே தோன்றவில்லை. ஆசிரியரே எதிரே இருந்து கதை சொல்வது போல் இருந்தது. பெரிய எழுத்துகளும், படங்களும் நூலுக்குச் சிறப்பைக் கூட்டு கின்றன'' - வருண்.

''என்னப்பா வருண் வந்தவுடன் இப்படி கடகடன்னு ஒப்பிக்கிறே! இந்த காபியைச் சாப்பிடு'' என்று சிரித்தார் சத்யாவின் அம்மா.

''வருண், நானும் ஒரே ஆசிரியரோட இரண்டு புத்தகங்களை வாங்கி வச்சிருக்கேன். முதலாவது 'நம் உடம்பைத் தெரிந்து கொள்வோம்', இரண்டாவது 'யானைகளைத் தெரிந்து கொள்வோம்...'''

''ஆசிரியர் யாருன்னு கண்டு பிடிச்சிட்டேன். ஆழி.வே. ராமசாமி தானே?'' - வருண்.

''ஆமாம் வருண். அறிவியல் சித்திரமடல்களாக நம்ம கோகுலத்தில் சில வெளி வந்திருக்கின்றன. அருமையான விளக்கத்துடனும் அழகான படங்களுடனும் படிப்பவர்களுக்கு ஆர்வத்தைத் தூண்டுகின்றன இந்தப் புத்தகங்கள். ரெஃபரன்ஸ் புத்தகமாக இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். வருண், எனக்கு வீட்டுப் பாடம் நிறைய இருக்கு. படிக்கப் போறேன்'' என்றபடி எழுந்தாள் சத்யா.

''எனக்கும்தான்; வரேன்'' என்று கிளம்பினான் வருண்.


- ரே

பஞ்சதந்திரக் கதைகள், முல்லா கதைகள், விக்கிரமாதித்தன் கதைகள், பக். 128, ரூ.35/- நன்மொழிப் பதிப்பகம், 41 கங்கை வீதி, வசந்த் நகர், புதுச்சேரி - 3.

நம் உடம்பைத் தெரிந்து கொள்வோம், பக். 152, ரூ.40/-, யானைகளைத் தெரிந்து கொள்வோம், பக். 100, ரூ.25/-, குமரிப்பதிப்பகம், 8. நீலா தெற்கு வீதி, ராஜா, ராணி காம்ப்ளெக்ஸ், நாகப்பட்டினம் 611001.


மயிலே..மயிலே..


ஆழி—



கருடன், கொக்கு, நீலநாரை, அன்னம், மயில் ஆகிய 5 பறவைகள், இந்தியாவின் தேசியப் பறவைக்கான தேர்வில் இருந்தன. ஆனால், 1963-ஆம் ஆண்டு ஆண் மயில் தேசியப் பறவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது!


மயிலின் இரை:
தானியங்கள், புழு
பூச்சிகள், பல்லிகள்,
பாம்புகள்.





பெண் மயில் புதர்கள் அடர்ந்த நிலத்தின்மீது சிறு கூடுகட்டும். 6 முதல் 8 வரை அழுக்கு நிறமான முட்டைகள் இடும். 28 நாட்களுக்குப் பிறகு குஞ்சுகள் வெளிவருகின்றன.


காட்டில் மயில்கள் தனித்தனியாக அடை காப்பது இல்லை. பல பெண் மயில்கள் ஒன்று சேர்ந்து ஒரே இடத்தில் முட்டைகள் இட்டு, அவற்றைத் தங்களுக்குள் மாற்றி மாற்றி அடைகாத்துக் குஞ்சு பொரிக்கின்றன!



முட்டையிலிருந்து வெளிவந்த மயில் குஞ்சு ஆணா, பெண்ணா என்பது இரண்டு ஆண்டுகள் வரை தெரியாது! மூன்றாவது ஆண்டில் தான் ஆண் மயிலுக்கு அழகான தோகை வளர ஆரம்பிக்கும். நன்கு வளர்ந்த ஆண் மயில் அதன் தோகையையும் சேர்த்து சுமார் 2.25 மீட்டர் நீளம் இருக்கும். பெண் மயிலுக்குத் தோகை கிடையாது. நன்கு வளர்ந்த பெண் மயில் சுமார் 1 மீட்டர் நீளம் இருக்கும்!




மயில்களுக்குக் கொண்டை முளைப்பது என்பது மிகவும் துன்பமான நிகழ்ச்சி. கொண்டை முளைக்கும் போது வலி கடுமையாக இருக்கும். வலி தாங்க முடியாமல் சில சமயம் மயில்கள் இறந்துவிடுவதும் உண்டு!



புலி போன்ற வேட்டை விலங்குகளைக் காணும் போது, மயில்கள் உரத்த குரல் எழுப்பி, மான்கள் போன்ற மற்ற விலங்குகளை எச்சரிக்கின்றன!

மயில்கள் சுமார் 35 ஆண்டுகள் உயிர்வாழும்.




ஆண் மயில் மே மாதக் கடைசியில் இறகுகளை உதிர்க்கும். டிசம்பர் மாதத்திற்குள் இறகுகள் மறுபடியும் வளர்ந்துவிடும். பழுதாகிப்போன, கிழிந்துபோன இறகுகளைப் புதுப்பிக்கவே இப்படி உதிர்க்கின்றன.




புலிகள் என்றால் மயில்களுக்குப் பயம். புலிகளைக் கண்ட மயில்கள், செய்வது அறியாமல் அப்படியே திகைத்து நின்று விடுகின்றன. புலிகளிடம் சிக்கி விடுகின்றன! மயில்களைப் பிடிக்க விரும்பும் காட்டுவாசிகள், புலிகள் மாதிரி வேடமிட்டுக்கொண்டு மயில்களை நெருங்கிப் போய் பிடித்து விடுவார்கள்!




கிரீஸ் மன்னன் அலெக்ஸாந்தர் கி.மு. 327-இல், இந்தியாவின் மீது படையெடுத்து வந்தபோது மயிலைப் பார்த்தான். அதன் அழகைக் கண்டு மகிழ்ந்து, கி.மு. 325-இல், தான் திரும்பிப் போகும்போது, மயில்களையும் கொண்டு போனான். அவனால்தான் ஐரோப்பிய நாடுகளில் மயில்கள் பரவின.



மயில்களில் வெள்ளை மயிலும் உண்டு! இதன் உடலில் வெள்ளை நிறத்தைத் தவிர, நீலம், பச்சை, மஞ்சள், சிவப்பு, கருப்பு என எந்த நிறமும் கிடையாது. இந்த வகை வெள்ளை மயில்கள் பர்மாவில் அதிகம்.



'காங்கோ மயில்' என்று ஒரு மயில் இனமும் இருக்கிறது. 'டாக்டர் ஜேம்ஸ் சாப்பின்' என்பவர் காங்கோ நாட்டில் இந்த மயிலைக் கண்டு பிடித்தார். இது இந்திய மயில் இனத்துடன் தொடர்பு கொண்டது என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். காங்கோ மயில்களுக்கு நீளமான தோகை கிடையாது. இவை ஆணும் பெண்ணும் ஜோடி சேர்ந்து விட்டால் வாழ்நாள் முழுதும் பிரிவது இல்லை. காங்கோ மயில் குஞ்சுகள், முட்டையிலிருந்து வெளிவந்து 5 நாட்களில் பறக்கத் தொடங்கி விடுகின்றன!



I எங்கள் வகுப்பிலுள்ள மாணவர்களை பெஞ்சுக்கு மூவர் என்று உட்கார வைத்தால் மூன்று பேருக்கு உட்கார இடமில்லை. அதே நேரம் பெஞ்சுக்கு நான்கு பேர் என்று உட்கார வைத்தால் மூன்று பெஞ்சுகள் காலியாக உள்ளன. வகுப்பில் எத்தனை மாணவர்கள், எத்தனை பெஞ்சுகள்?

- பா. கவிதா, புதுடெல்லி.

II என் தாத்தாவின் வயதை மாற்றிப் போட்டால் என் தந்தையின் வயது கிடைக்கும். தாத்தாவின் வயதிலிருந்து தந்தையின் வயதைக் கழித்தால் என் தாயின் வயது கிடைக்கும். என் தாத்தா, தந்தை, என் தம்பியின் வயதுகளைக் கூட்டினால் 100 வரும். நான்கு பேரின் வயது என்ன?

- நெ. இராமன், சென்னை

மூவரும் கொண்டு சென்ற பணம் எவ்வளவு?

III கீதா, சீதா, மாலா ஆகிய மூன்று பேரும் ஒரு பொருட்காட்சிக்குச் சென்றனர். கீதா தான் கொண்டு சென்ற தொகையில் ¼ பாகம் செலவழித்தாள். சீதா தான் கொண்டு சென்ற தொகையில் ½ பாகம் செலவழித்தாள். மாலா தான் கொண்டு சென்ற தொகையில் ¾ பாகம் செலவு செய்தாள். மூவரும் கொண்டு சென்ற மொத்தத் தொகை ரூ. 1100. செலவழித்த பின்பு மூவரிடமும் மீதமுள்ள தொகை சம அளவில் இருந்தது. மூவரும் தனித்தனியே கொண்டு சென்ற தொகை எவ்வளவு?

- ஜி. பிரணவ், காந்தி கிராமம், கரூர்.

IV ஐந்து பொருட்களின் மொத்த விலை 150 ரூபாய். இதில் முதல் பொருளின் விலையில் சரி பாதி இரண்டாவது பொருளின் விலை. இரண்டாம் பொருளின் விலையை விட மூன்றாம் பொருளின் விலை 10 ரூபாய் அதிகம். மூன்றாம் பொருளின் விலையை விட நான்காம் பொருளின் விலை 20 ரூபாய் குறைவு. நான்காம் பொருளின் விலையை விட ஐந்தாம் பொருளின் விலை 10 ரூபாய் அதிகம். ஐந்தாம் பொருளின் விலையை விட முதல் பொருளின் விலை 25 ரூபாய் அதிகம். இந்த ஐந்து பொருட்களின் தனித்தனி விலைகளைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

- எம். வினோத், விருத்தாசலம்

V ஆஸ்திரேலியாவின் தேசியப் பறவை ________

2. பெர்ஷியா என்று முன்பு அழைக்கப்பட்ட நாடு ________

3. 'பகுத்தறிவு பகலவன்' பிறந்த இடம் ________

4. பிறந்த அன்றே இறக்கும் உயிரினம் ________

5. சுவாசிக்காமல் உயிர் வாழும் ஒரே உயிரினம் ________

6. மெசபடோமியா என்று அழைக்கப்பட்ட நாட்டின் இன்றைய பெயர் ________

7. சர்வதேச குழந்தைகள் மாநாடு நடைபெற்ற நகரம் ________

8. கொல்கத்தாவில் உள்ள கிரிக்கெட் மைதானம் ________


- ஆ. கலியமூர்த்தி, நீடாமங்கலம்

விடை 64 ஆம் பக்கம்

கிளியாக மாறிய அருணகிரிநாதர்!

காவிரிப்பூம்பட்டினத்தில் திருவெண்காடர்–முத்தம்மை தம்பதியருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தவர் அருணகிரி. இவரது இளம் வயதிலேயே தந்தை காசிக்குச் சென்றவர் திரும்பவில்லை. தாயும் நோய்வாய்ப்பட்டு இறைவனடி சேர்ந்தார்.

திருவண்ணாமலையில் தமக்கை ஆதிலக்ஷ்மியிடம் வளர்ந்தார் அருணகிரி. தமக்கை எதற்காவது கண்டித்தால் பார்ப்பவர் 'பாவம், தாயில்லாப் பிள்ளை' என்று கூறுவர். இதனால் அருணகிரிக்குத் தீய பழக்கங்கள் தொற்றிக் கொண்டன. ஒரு நாள் மனம் வெறுத்து திருவண்ணாமலை பெரிய கோபுரத்தில் ஏறி உயிரை மாய்த்துக் கொள்ள எண்ணி கீழே குதித்தார்.



என்ன ஆச்சரியம்! முருகப் பெருமான் அவரைத் தாங்கிப் பிடித்தார். திருந்திய நெஞ்சம் மருந்திலும் அருமையானதாயிற்றே!

'என்னைப் பாடு' என்று நாக்கில் வேலால் 'சரவணபவ' என்றெழுதி ஜபமாலை ஒன்றைக் கொடுத்தார். எப்படி பாடுவதென்று தெரியாமல் அருணகிரி விழிக்க, 'முத்தைத் தரு பத்தித் திருநகை' என்று அடியெடுத்துக் கொடுத்தார் கந்தன்.


அவ்வளவுதான்! முத்து முத்தாய் திருப்புகழ் பாடிக் குவித்தார் அருணகிரி. அவரின் புகழ் நாடெங்கும் பரவியது. மன்னன் பிரபுட தேவராஜன் காதுக்கும் எட்டியது.

அருணகிரிநாதரை அடிக்கடி அழைத்து திருப்புகழ் பாடச் சொல்லி மெய்யுருகுவார் வேந்தர்.

இது அரசரின் மற்றொரு நண்பரான சம்பந்தாண்டானுக்குப் பொறாமையை ஏற்படுத்தியது. சம்பந்தாண்டான் தேவி பக்தன். அவன் மன்னரி

டம்,

"அரசே! அருணகிரி சில சித்து வித்தைகளைத் தெரிந்து வைத்துக் கொண்டு மக்களை ஏமாற்றி வருகிறான். நீங்களும் அது புரியாமல் முருகனை அவன் காட்டுவான் என்று நம்பிக் கொண்டிருக்கிறீர்கள்! மக்களைக் கூட்டுங்கள். நான் என் பக்தியால் தேவியை வரவழைக்கிறேன். அவன் தன் பக்தியின் சக்தியால் முருகனை அழைத்துக் காட்டட்டும்.



ஆர். பொன்னம்மாள்

தோற்றவரை நீங்கள் புறக்கணித்து ஊரைவிட்டு அனுப்பிவிடவேண்டும்" என்று நைச்சியமாகக் கூறினான்.

அரசர் தேவி – முருகன் இருவருடைய தரிசனமும் கிடைக்கும் என்பதால் இந்தத் திட்டத்தை ஒப்புக் கொண்டார். அருணகிரியிடம் இது பற்றிப் பேசினார்.

"முருகன் திருவருள்" என்றார் அருணகிரி.

இந்தப் போட்டியைக் காண ஊரே திரண்டிருந்தது. மன்னர் நடு நாயகமாக வீற்றிருந்தார்.

முதலில் சம்பந்தாண்டான் பாடினான். நெடுநேரமாகியும் தேவி வரவில்லை! அதிகாரமும், ஆணவமும் கொண்டு அழைத்தால் தேவி வருவாளா?

அடுத்து அருணகிரியார் உள்ளம் உருக, காட்சி தருமாறு முருகனைப் பாமாலையால் போற்றி பிரார்த்தித்தார். மயில் மீது ஒரு வினாடி காட்சி அளித்தான் குமரன்! 'அரோகரா, அரோகரா' என்ற குரல் எங்கும் ஒலித்தது. தோல்வியுற்ற சம்பந்தாண்டான் அவமானத்தால் தலை கவிழ்ந்தான்.

அதன்பின் காசி முதல் கன்யாகுமரி வரை, கண்டி, கதிர்காமம், யாழ்ப்பாணம், திரிகோணமலை என்று தீர்த்தயாத்திரை சென்று முருகனைப் பாடி மகிழ்ந்தார்.

திருச்செந்தூரில் மகாபாரதத்தைத் தமிழில் பாடிய வில்லிபுத்தூராழ்வாரை 'கந்தரந்தாதி' பாடி வாதில் வென்றார். 54–வது பாடலுக்கு அர்த்தம் சொல்ல முடியாமல் திணறிய வில்லிபுத்தூரார் குறடை நீட்டி "என் காதைத் துண்டியுங்கள்" என்றார்.

"இறைவன் அளித்த செவியை மனிதன் அறுப்பதா? தோற்றவர்களை உங்களைப் போல் தண்டிக்க எனக்கு விருப்பமில்லை" என்று கூறி குறடை வீசி எறிந்தார் அருணகிரி.

அருணகிரியிடமிருந்து மனிதாபிமானத்தைக் கற்றுக் கொண்ட வில்லிபுத்தூரார் அவரைப்

போற்றிப் புகழ்ந்தார். இதையெல்லாம் கேள்வியுற்ற பிரபுட தேவராஜன் அருணகிரியைச் சீரும் சிறப்பு மாக வரவேற்றார்.

மறுபடி மன்னரின் நட்பை மெதுவாகப் பெற்றுக் கொண்டிருந்த சம்பந்தாண்டான் அருண கிரியாரைத் தீர்த்துக் கட்ட முடிவு செய்தான்.

அரசரிடம், "வேந்தே! அருணகிரியார் அஷ்டமாசித்திகளும் கற்றவர். தேவலோகப் பாரிஜாதம் நோய்களைத் தீர்க்கும். இளமையையும், வலிமையையும் கொடுக்கும். அருணகிரியாரால் மட்டுமே அதைக் கொண்டு வரமுடியும். நீங்கள் கேட்டால் மறுக்க மாட்டார். தேவலோகம் சென்று வந்த பெருமையும் உங்களால் அவருக்குச் சேரட்டும்" என்று நயமாகக் கூறினான்.

அரசருக்குப் பாரிஜாதத்தை அடைய வேண்டும் என்ற ஆசை மேலோங்கியது. அருணகிரியாரிடம் தன் விருப்பத்தைச் சொன் னார்.

'முருகன் திருவருள்' என்றபடி புறப்பட்டார் அருணகிரி. சம்பந்தாண்டான் உத்தரவுப்படி அருணகிரி அறியாமல் ஒரு சீடன் அவரைப் பின் தொடர்ந்தான்.

திருவண்ணாமலை கோபுரத்திநுள் நுழைந்த அருணகிரிநாதரின் கண்களில் ஒரு இறந்த கிளியின் உடல் தென்பட்டது. மூச்சடக்கி, மந்திரம் சொல்லி கிளியின் உடலில் புகுந்து கொண்டு தேவலோகத்தை நோக்கிப் பறந்தார்.

இதை அப்படியே வந்து குருவிடம் சொன் னான் சீடன். சம்பந்தாண்டான் போலி பதற்றத் துடன், "அரசே, தன்னால் பாரிஜாத மலரைக் கொண்டு வர முடியாததால் தற்கொலை செய்து கொண்டார் அருணகிரிநாதர். உடல் பெரிய கோபுரமண்டபத்தில் கிடக்கிறது" என்று கூறினான்.

இதைக்கேட்ட மன்னர் எரியும் தீயில் விழுந் தாற் போல் துடித்தார். துக்கத்துடன் பலவாறு புலம்பி அழுதார். பின்னர் மந்திரிகளும் சம்பந் தாண்டானும் சமாதானம் சொல்ல அருணகிரி யாரின் உடலைத் தகனம் செய்தார்.

அருணகிரிநாதர் தேவலோகத்திலிருந்து பாரிஜாதம் கொண்டு வந்தார். தன் உடலை விட்டுச் சென்ற இடத்தில் காணாமல் திகைத்தார். ஞானதிருஷ்டியால் நடந்ததை அறிந்து கொண் டார். கிளியாகவே மன்னரிடம் சென்று பாரிஜாத மலரைக் கொடுத்து நடந்ததைக் கூறினார்.

மன்னன் சம்பந்தாண்டானைத் தண்டிப்பதாகக் கோபமுடன் எழுந்தான். "அரசே! சம்பந்தாண் டானைத் தண்டிப்பதால் என் உடல் திரும்பக் கிடைக்குமா? வெட்டும் பற்களுக்கிடையே நாக்கு வளைந்து நெளிந்து வாழ்வதைப் போல வஞ்சகர் களிடமிருந்து நாம்தான் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். கிளியாகத் திருவண்ணா மலை கோபுரத்தில் வாழ வேண்டுமென்பது என் விதி. துக்கத்தையும், சினத்தையும் விடுத்து நிதா னத்தைக் கை கொள்ளுங்கள்!" என்று கூறிப் பறந்து சென்றார்.

கிளி வடிவிலேயே கந்தரனுபூதியைப் பாடினார். "அருணகிரி! நீ சுகபதம் தா' என்று பாடினாய்! சுகம் என்றால் கிளி என்று ஒரு அர்த்தமும் உண்டல்லவா! அதுதான் உன்னைக் கிளி யாக்கினேன். நீ திருத்தணிகை வந்து என் திருக்கரத்தில் அமர்ந்திருப்பாயாக" என்றருளினார் முருகன். அருணகிரிக்கிளி அப்படியே செய்தது.

புதிர் உலக விடைகள்!

I. 15 பெஞ்சு, 48 மாணவர்கள்.

II) *தாத்தாவின் வயது - 63.*
தந்தையின் வயது - 36
தாயின் வயது - 27
தம்பியின் வயது - 1

III) கீதா ரூ. 200, சீதா ரூ. 300, மாலா ரூ. 600

IV முதல் பொருளின் விலை -	50	ரூபாய்
இரண்டாம் பொருளின் விலை	25	ரூபாய்
மூன்றாம் பொருளின் விலை	35	ரூபாய்
நான்காம் பொருளின் விலை	15	ரூபாய்
ஐந்தாம் பொருளின் விலை	25	ரூபாய்.
	150	ரூபாய்

V) 1. ஈமு 2. ஈரான், 3) ஈரோடு, 4) ஈசல், 5) ஈஸ்ட், 6) ஈராக், 7) ஈட்ஸ் பர்ன், 8) ஈடன் கார்டன்.

நேர்மை

கதை : ஆர். சாரதா
படம் : முத்து





ஊக்குவிப்பு

✉ கோகுலத்தில் வரும் புதிர், விடுகதைப் பக்கம், போட்டிகள் எல்லாம் எங்களைப் போன்ற மாணவர்களின் திறமையை ஊக்குவிக்கும் வகையில் உள்ளன. கோகுலம் பொழுது போக்க மட்டுமின்றி மாணவர்களின் பொது அறிவு வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கிறது. பக்கங்களை அதிகரிக்கலாம் என்பது என்னுடைய விருப்பம்

- ஜெ. ஜெகதீஸ், பாரதிய வித்யாலயா ஆங்கிலப் பள்ளி, வேதாரண்யம்.

பாராட்டு

✉ 'தங்கமா, உப்பா?' என்ற படக்கதையின் மூலம் எந்தப் பொருளையும் இழிவாக நினைக்கக் கூடாது என்பது புரிந்தது. பிறந்த பத்து நாட்களே ஆன குழந்தைக்கு இதய அறுவை சிகிச்சை செய்து சாதனை படைத்த ராமச்சந்திரா மருத்துவமனை மருத்துவர்களுக்குப் பாராட்டுகள்!

- எஸ். அமீர்ஜான், பன்னிரண்டாம் வகுப்பு, அரசினர் மேல் நிலைப் பள்ளி, நல்லூர்.

அனுப்பலாமா?

• ✉ ஜூலை இதழில் வந்த கதைகள் அனைத்தும் அருமை. 'சின்னமனூர் சின்னப்பட்டாளம்' படிக்க எளிமை. படிக்கும்போது 'திக்திக்' என்று இதயம் படபடக்கிறது. எங்கள் வீட்டில் நான் மட்டும்தான் கோகுலத்துக்குச் சந்தா கட்டியிருக்கிறேன். என் தம்பியும் படைப்புகளை அனுப்பலாமா? பிரசுரிப்பீர்களா?

- வே. சுபஸ்ரீ, பத்தாம் வகுப்பு, அ.மே.நி.பள்ளி, நல்லூர்.

அன்புள்ள சுபஸ்ரீ

சந்தா கட்டியவர்கள் மட்டும்தான் படைப்புகள் அனுப்ப வேண்டும் என்பதில்லை. உங்கள் தம்பியின் படைப்புகளைத் தாராளமாக அனுப்பி வையுங்கள். சுவையாக இருந்தால் நிச்சயம் பிரசுரம் ஆகும்.

- ஆர்

மகிழ்ச்சி

✉ 18.6.02 அன்று என் பெயருக்குக் கோகுலம் வந்தது. எனக்கு வியப்பாக இருந்தது. வேகமாகப் படித்துப் பார்த்தேன். 'நகைச்சுவை மேடை'யில் என் ஜோக்கிற்குப் பரிசு கிடைத்திருந்தது. என் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. உறவினர்களும் நண்பர்களும் பாராட்டினர். உனக்கு ரொம்ப நன்றி கோகுலம்.

- ஜி. கார்த்திகேயன், திருவல்லிக்கேணி, சென்னை.

பயன்

✉ +2 நிலையில் ஃபோட்டோ கலை என்ற பாடத் திட்டம் இருப்பது கோகுலம் மூலம் மட்டுமே தெரிந்தது. என் உறவினரிடம் இந்தச் செய்தியைத் தெரிவித்தேன். அவர் மகனை இந்த கோர்ஸில் சேர்க்க இருக்கிறார். இது போன்ற பயனுள்ள செய்திகளைத் தாங்கி வரும் கோகுலத்தின் அருமை பெருமைகளைப் பார்ப்பவரிடமெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

- என். பத்மஜா, ஒன்பதாம் வகுப்பு, அ.மே.நி.பள்ளி, திருவரங்கம்.

பக்கங்களை அதிகரிக்கலாமே?

கோகுலம் சுழல்கோப்பை

கோகுலம் இதழ்களில் ஓராண்டில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அப் பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. போட்டியில் கலந்து கொள்ளும் பள்ளிகள் தங்கள் படைப்புகளை அனுப்பி வைப்பதில் கவனம் செலுத்துங்கள். இன்னும் நான்கு மாதங்களே உள்ளன.

கால்பந்து ஹீரோ

ஐந்தாவது முறையாக உலகக் கோப்பையை வென்று சாதனை படைத்திருக்கிறது பிரேஸில். இதன்மூலம் ஒன்று இரண்டல்ல முப்பத்தெட்டு கோடி ரூபாயை முழுவதுமாக சுருட்டியிருக்கிறது இந்த அணி.

இந்த அட்டகாச வெற்றிக்குப் பின்னால் பிரேஸில் அணியின் மூன்று 'ஆர்'களை (ரொனால்டோ, ரிவால்டோ, ரொனால்டினோ) குறிப்பிட்டாலும் முதல் மகுடம் ரொனால்டோவுக்குத்தான்!



அவரது முன் பக்கப் பற்கள் உதட்டுக்கு மேல் துறுத்திக் கொண்டிருந்தாலும் கடவுளுக்கு அடுத்த படியாக அவரைப் போற்றுகின்றனர் பிரேஸில் கால்பந்து ரசிகர்கள்.

சிறு வயதிலேயே கால்பந்து கனவுகளால் அலைந்து கொண்டிருந்த ரொனால்டோ, சர்வதேச போட்டியில் பங்கேற்றது 1994-ம் ஆண்டு. தனது பதினேழாவது வயதில் இப்படியொரு அதிர்ஷ்டத்தை அவர் எதிர்பார்க்கவில்லை. அது அர்ஜென்டினாவுக்கு எதிரான ஆட்டம். போட்டி முடியும் கடைசி பத்து நிமிடத்துக்கு முன் பெபட்டோ என்ற ஆட்டக்காரருக்குப் பதிலாகக் களமிறக்கப்பட்டார் ரொனால்டோ. அப்போது யாருக்கும் தெரியாது அவர் உலகக் கால்பந்து ரசிகர்களின் கனவு நாயகனாகப் போகிறாரென்று. அந்த ஆட்டத்தில் பெரிதாக எதையும் சாதிக்கவில்லையென்றாலும் பிள்ளையார் சுழி போட்ட ஆட்டத்திலேயே, தான் சிறந்த ஆட்டக்காரர் என்பதை நிரூபித்தார் ரொனால்டோ. அடுத்தடுத்த போட்டிகளில் ரொனால்டோ 'கோல் மழை' பொழிய, உலகக் கால்பந்து கூட்டமைப்பின் சிறந்த ஆட்டக்காரராக இரண்டு முறை (96- 97) தேர்ந்தெடுக்கப்பட்டார் இவர்.


யானைக்கும் அடி சறுக்கும் என்பது போல் ரொனால்டோவுக்கு 1998 ஆம் ஆண்டு உலகக் கோப்பை கால்பந்து போட்டி சோதனை காலம். ஃபிரான்ஸுக்கு எதிரான இறுதிப் போட்டி.. அதற்கு முன் நான்கு கோல்களை ரொனால்டோ அடித்திருந்தாலும் இந்தப் போட்டியில் பரிதாபமாகத் தோற்றது பிரேஸில். தோற்றதற்கான காரணத்தை ஆராய்ந்த பிரேஸில் அணி 'ரொனால்டோவால்தான் தோற்றோம்' என்று கை நீட்ட, ஆடிப் போய்விட்டார் இந்த நாயகன்.

"ஒட்டுமொத்த குற்றச்சாட்டுக்குப் பிறகு வேறென்ன செய்ய முடியும்? அந்தக் குற்றச்சாட்டைத் தவிடு பொடியாக்கும் விதமாகத்தான் இந்த உலகக் கோப்பையில் ஒரு வெறியோடு தன்னை நிரூபித்திருக்கிறார் ரொனால்டோ" என்கிறார் ஒரு முன்னாள் கோச்.

"சிறந்த வீரராக ரொனால்டோவைத் தேர்ந்தெடுத்திருக்கக் கூடாது" என்று முன்னாள் கால்பந்து ஹீரோ மாரடோனா சொன்னாலும், இரண்டு முறை மூட்டு அறுவை சிகிச்சைச் செய்து கொண்ட ரொனால்டோ காயத்தையும் பொருட்படுத்தாமல் களமிறங்கினார் என்பதை எப்படி பாராட்டாமல் இருக்க முடியும்?

"ரொனால்டோவிடம் அதிகமாக எதிர்பார்த்தார்கள். அந்த எதிர்பார்ப்பு ரசிகர்களிடம் வளர்ந்து கொண்டே போனது. ஆனால் மூட்டுக் காயத்தால் அந்த எதிர்பார்ப்பை அவரால் முன்பு பூர்த்தி செய்ய முடியவில்லை. இப்போது அது நடந்திருக்கிறது. எப்போதுமே அவர் சிறந்த ஆட்டக்காரர்" என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் மானேஜர் பாபி ராப்சன் சொல்வதை ஏற்காமல் இருக்க முடியாது. ஒவ்வொரு உலகக் கோப்பை கால்பந்து போட்டியிலும் அதிகமாகக் கோல் அடித்தவருக்குத் தங்கத்திலான ஷூ வழங்கப்படுகிறது. இந்த முறை தங்க ஷூ ரொனால்டோவுக்குக் கிடைத்திருக்கிறது. ரொனால்டோ போஸ்டர் 40 ஆம் பக்கத்தில்.


— அப்பு



ஜூலை இதழில் 'சேவல் - கோழி' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஐந்து ஓவியங்கள் உங்கள் கண் முன்னே...

முதல் பரிசு
எஸ். ஸ்ரீவித்யா,
ஏழாம் வகுப்பு,
டவுன் மேல்நிலைப்பள்ளி,
கும்பகோணம்.

இரண்டாம் பரிசு
சி.டி. இலக்கியா, பத்தாம் வகுப்பு,
தூய ஜோசப் மெட்ரிகுலேஷன் பள்ளி,
கோவை.



கொக்கரக்கோ...

ஓவியப் போட்டி



மூன்றாம் பரிசு
சு.ஸ்ரீனிவாஸ், எட்டாம் வகுப்பு,
வித்யாநிகேதன் மேல்நிலைப்பள்ளி, புலியகுளம், கோவை.



ஆறுதல் பரிசு
ஜெயசக்திவேல்,
பன்னிரண்டாம் வகுப்பு,
அரசினர்
மேல்நிலைப் பள்ளி,
திருத்துறைப்பூண்டி,
திருவாரூர் மாவட்டம்.



ஆறுதல் பரிசு
எஸ்.எஸ். மாதவன்,
திருநின்றவூர்,
சென்னை.

3964-ஆம் ஆண்டு இந்தியா வெல்லும்!

வலையில் சிக்கியவை

சில விஞ்ஞான விசித்திரங்களைப் பார்க்கலாமா?

ஒரு தீப்பெட்டி அளவுள்ள தங்கத்தை மிக மெல்லிய தகடாக்கினால், அதை வைத்து ஒரு டென்னிஸ் கோர்ட்டையே மறைத்து விடலாம்.

1982ல், அமெரிக்காவில் முதிய பல் மருத்துவரான டாக்டர் பார்னெ கிளார்க் என்பவருக்கு, செயற்கை இருதயம் பொருத்தினார்கள். அவர், அதன்பின் 112 நாட்கள் உயிர் வாழ்ந்தார்.

இயற்கை எரிவாயுவுக்கு எந்த வாசனையும் கிடையாது. அதனை, வீட்டு உபயோகத்துக்காக அனுப்புகிறபோது, தவறுதலாக லீக்கானால் கண்டுபிடிக்க சௌகரியமாக வாசனை சேர்க்கப்படுகிறது.

உலகில் மிக அதிகமாகக் கிடைக்கும் உலோகம் அலுமினியம்தான்.

இங்குள்ள கறுப்பு மற்றும் வெள்ளை நிறப்பகுதிகளை உற்றுப் பாருங்கள். என்ன தெரிகிறது? ஒரு சிலர் ஒன்றும் தெரிய வில்லையே என்று சொல்லக் கூடும். கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டு, கறுப்பு நிறப்பகுதிக்கு இடைப்பட்ட வெள்ளைப் பகுதிகளை உற்றுப் பாருங்கள். LIFT என்ற ஆங்கில வார்த்தை கண்ணில் படுகிறதா? சிலர் எடுத்த எடுப்பிலேயே, LIFT என்று படித்து விடுவார்கள்.



இனி வழக்கம்போல் சில ஜோக்ஸ் ரசிக்கலாமே!

அட்சரேகை, தீர்க்கரேகை பற்றி பூகோள வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார் ஆசிரியர். கடைசியில் மாணவர்களைப் பார்த்து, "இருபத்து மூணு டிகிரி வடக்கு, நாற்பத்து நாலு டிகிரி மேற்கு சந்திக்கும் இடத்தில் நாம் மதிய உணவு சாப்பிட நான் அழைத்தால், நீங்கள் எல்லோரும்..." ஆசிரியர் கேள்வியை முடிக்கும் முன்பாகவே ஒரு குறும்புக்கார



மாணவன் பட்டென்று சொன்னான் : "இடத்தைக் கண்டுபிடித்து, நாங்கள் வந்து சேருவதற்கு முன்பாகவே நீங்கள் சாப்பிட்டு முடித்திருப்பீர்கள்!"

"உங்கள் பையனுக்கு எல்லா டெஸ்ட்களும் எடுத்தாகிவிட்டது. ஒரு புதிய வியாதி என்று மட்டும் தெரிகிறது. ஆனால் அதற்கு என்ன மருந்து கொடுப்பது என்று தெரியவில்லை" என்றார் டாக்டர்.

"இப்போது என்ன செய்வது டாக்டர்?"

"காலையில் எழுந்தவுடன்,

ஐஸ் வாட்டரில் குளிப்பாட்டி, நிறைய ஐஸ்கிரீம் கொடுங்கள்.''

''என்ன சொல்கிறீர்கள்? அப்படி செய்தால் ஜுரம் வருமே! ஜலதோஷம் பிடிக்குமே?''

''நோ பிராப்ளம்! ஜுரத்துக்கும், ஜல தோஷத்துக்கும் என்ன மருந்து கொடுப்பது என்று எனக்குத் தெரியுமே!''



'நோ பார்க்கிங்' என்று போர்டு வைத்த இடத்தில் ஒருவர் தன் காரை நிறுத்தி வைத்துவிட, டிராஃபிக் போலீஸ் அதிகாரி பிடித்து, அபராதம் விதித்து விட்டார்.

''நான் இங்கே வந்தபோது, ஒரு போலீஸ்காரர் இருந்தார். அவரிடம் இங்கே காரை நிறுத்தலாமா? என்று கேட்டபோது, நிறுத்தலாம் என்று சொன்னார். அதனால் தான் நான் இங்கே காரை நிறுத்தினேன்'' என்றார் கார்க்காரர்.

போலீஸ் அதிகாரி அதை நம்பாமல் ''அப்படியா சொன்னார்! மறுபடி அவரைப் பார்த்தால் உங்களுக்கு அடையாளம் தெரியுமா?'' என்று கேட்டார்.

''ஓ! நன்றாக அடையாளம் தெரியும்'' இது கார்க்காரர்.

''அப்படியானால், இப்போது நூறு ரூபாய் அபராதம் கட்டுங்கள். மறுபடி அந்த போலீஸ் காரரைப் பார்த்தால் 'உங்களால் எனக்கு நூறு ரூபாய் வீண் செலவு' என்று மறக்காமல் சொல்லுங்கள்'' என்றாரே பார்க்கலாம்!

ஒருவர் ஊரின் மையப் பகுதியில் ஒரு பெரிய பாறையின்மீது, '1856ம் ஆண்டு ஏப்ரல் மாதம் எட்டாம் தேதி மாலை ஆறு மணிக்கு, இந்த இடத் தில்... எதுவும் நடக்கவில்லை!' என்று எழுதி வைத்தார்.

உலகக் கோப்பை திருவிழா ஜாம் ஜாம் என்று நடந்து முடிந்துவிட்டது. இறுதிப் போட்டியில் ஜெர்மனியுடன் மோதி, பிரேஸில் கோப்பையை வெல்வதற்கு முன்பு, இன்டர்நெட்டில் வலம் வந்த ஒரு சுவாரசியமான விஷயம் இது. கோப்பையை வெல்லப் போவது பிரேஸில்தான் என்று யூகிக்கப்பட்டதன் லாஜிக் இதோ.

கடைசியாக பிரேஸில் ஜெயித்தது 1994ல். இதற்கு முன்பு பிரேஸில் ஜெயித்தது 1970ல். 1970 + 1994 = 3964.

ஜெர்மனி கடைசியாக ஜெயித்தது 1990ல். அதற்கு முன்பு ஜெயித்தது 1974ல்.

1990 + 1974 = 3964.

அர்ஜென்டினா கடைசியாக ஜெயித்தது 1986ல்.

அதற்கு முன்பு ஜெயித்தது 1978ல்

1986 + 1978 = 3964.

இதே லாஜிக் படி பார்த்தால், 2002ல் வருடத்தில் சாம்பியனாகும் வாய்ப்புள்ள அணி.

3964 - 2002 = 1962

அதாவது 1962ல் ஜெயித்த அணிதான்.

பிரேஸில்தான் 1962ல் சாம்பியன். எனவே 2002 வருட சாம்பியன் பிரேஸில் தான். நிஜத்திலும் அதுவேதான் நடந்துள்ளது! இன்னும் ஒரு கற்பனை.

இதே லாஜிக்படி பார்த்தால், 3964ம் ஆண்டு, அதாவது ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து இரண்டு வருடங்கள் கழித்து, இந்தியாதான் கால்பந்து உலகக் கோப்பையை ஜெயிக்கும்!

இது எப்படி இருக்கு?

– கௌதம் ராம்




ஜாடை ஒன்று; அர்த்தம் மூன்று!

எக்ஞன், ஏமாளன் இருவரும் சகோதரர்கள். எக்ஞன் மகா சாமர்த்தியசாலி. ஏமாளன் சுலபத்தில் ஏமாந்து விடுவான். அதோடு அப்பாவியும்கூட.

அரசனின் மெய்க்காப்பாளனாக இருந்த தந்தை திடீரென இறந்து போனார். துக்கம் விசாரிக்க வந்த மன்னன் இருவரில் ஒருவருக்கு அரண்மனையில் வேலை தருவதாகக் கூறினான்.

ஏமாளனின் தாய், ''அரசே! எக்ஞன் சமர்த்தன். எங்கேயாவது, எப்படியாவது பிழைத்துக் கொள்வான். இளையவனையே ஆதரிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டாள். அரசனும் சம்மதித்து ஏமாளனை அரண்மனைக்கு அழைத்துச் சென்றான்.

அரண்மனையின் அந்தப்புரம் நீங்கலாக அவனுக்கு எங்கும் செல்ல அரசன் உரிமை அளித்திருந்தான். வேளா வேளைக்குச் சாப்பாடு கிடைத்தது. ஒரு நாள் எக்ஞன் தம்பியைக் காண அரண்மனைக்கு வந்தான்.



ஏமாளனை தாஜா செய்து சமையல் பணியாளர்கள் மாவாட்டவும், தண்ணீர் இறைக்கவும், காய்கறி வெட்டவுமாக வேலை வாங்கினர். இதை அரசன் பார்த்து ''இந்த வேலையையெல்லாம் ஏன் இவனைச்


செய்யச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''சும்மா சாப்பிட கூச்சமாயிருக்கிறது. நான் இதையெல்லாம் செய்கிறேனே என்று ரொம்பக் கெஞ்சினான்'' என்று அவர்கள் சமாளித்தனர். இது மெய்தானா என்றறிய ஏமாளனைத் தேடினான் வேந்தன்.

அதற்குள் வழக்கு வந்துவிட்டதால் அரசவைக்குச் சென்றுவிட்டான். நடுவில் வழக்குக்குச் சம்பந்தமில்லாத எந்தப் பேச்சுக்கும் தண்டனை கிடைக்கும். அரசவையில் ஏமாளனைக் கண்டதும் அரசன் ஜாடையில் ''ஏன் அரைத்து, இடித்து, நீர் இறைத்து, தேங்காய் துருவி, ஒட்டடை அடித்துக் கஷ்டப்படுகிறாய்?'' என்று ஜாடையில் விசாரித்தான். அதற்கு ஏமாளன் 'தன் தமையன் வெயிலில் அலைந்து ஒரு வேலையிலும் நிலைத்து நிற்காமல், ஆகாயத்திலிருந்து உத்யோகம் வருமென்று நினைத்து தாயாரைக் குடைந்து பணம் வாங்கி உல்லாசமாக ஏன் காலம் கழிக்கிறான்?'' என்று கேட்பதாக அர்த்தம் செய்து கொண்டான்.

தமையனிடம் 'ராஜாவின் கேள்விக்குப் பதில் சொல்' என்று ஜாடை காட்டிவிட்டு 'அது அவன் தலைவிதி' என்று ஜாடையில் பதில் சொன்னான்.

'தமையனையும் தாங்கள்தான் ஆதரிக்க வேண்டும். எங்கள் தலைவிதி தகப்பனை இழந்து விட்டோம்!'



மாலதி

கைக்கடிகாரங்கள் யாருக்கு?

ஜூன் இதழில் அறிவித்த போட்டியில் நிறையப் பேர் கலந்துகொண்டு, சரியான விடைகளையும் அளித்திருந்தனர். எனவே பரிசுக்குரிய இருவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பரிசு பெற்றவர்கள்:

1. கா. சிவரஞ்சனி, 6ம் வகுப்பு, தி.உ.க.வை. நாடார் மேல் நிலைப் பள்ளி, திருச்சுழி, விருதுநகர் மாவட்டம்.
2. சே.ம. கணியன், மதுரை.

சரியான விடை: 1. செவாலியே – சிவாஜி கணேசன் 2. பாரதரத்னா – ராஜீவ்காந்தி, 3. அர்ஜுனா - பி.டி. உஷா 4. நோபல் - அன்னை தெரசா, 5. மகசேசே - எம்.எஸ். சுப்புலட்சுமி 6. தாதா சஹேப் பால்கே - அசோக் குமார்.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

என்று ஏமாளன் சொல்வதாக அரசர் பொருள் கொண்டு 'சரி' என்று தலை அசைத்தார்.

சபை கலைந்ததும் அரசர் வேறு அலுவல்களைக் கவனிக்கச் சென்றுவிட்டார். எக்ஞன் தம்பியைக் கூட்டிக் கொண்டு வீட்டுக்குப் போனான். வீட்டில் "அரசர் என்ன கேட்டார், நீ என்ன சொன்னாய்?" என்று தம்பியை விசாரித்தான். தாயாருக்கு உடல் நலமில்லாததால் பார்க்க வந்த ஏமாளன் தான் புரிந்து கொண்டதை அண்ணனுக்குச் சொன்னான்.

ஆனால் அரசனும், ஏமாளனும் ஜாடையில் பேசிக்கொண்டதைக் கண்ட அரசு அதிகாரிகள் இது தங்களைப் பற்றியதாக இருக்குமோ என அஞ்சினர்.

ஏமாளன் தமையனைச் சுட்டிக் காட்டிப் பேசியதும் தமையன் கூடவே சென்றதும் அவர்களுக்குக் கவலை அளித்தது. எல்லோரும் கூடிப் பேசி எக்ஞனின் வீட்டை அடைந்தனர். ஏமாளன் தோட்டத்தில் பட்டம் விட்டுக்கொண்டிருந்தான்.

எக்ஞன் அவர்களை வரவேற்று வந்த காரணத்தை விசாரித்தான்.


எக்ஞன் "அரசாங்க காரியம்! வெளியே சொல்லக்கூடாது. ஆனாலும் இரக்கப்பட்டுச் சொல்கிறேன். 'சுற்றிப் பார்த்தாயே! யார் யார் எவ்வளவு லஞ்சம் வாங்கி எவ்வளவு சொத்து சேர்த்திருக்கிறார்கள் என்று கண்டுபிடித்தாயா?' என்பது முதல் கை அசைவுக்கான பொருள். 'லஞ்சம் வாங்குபவர்களைக் கழுமரத்தில் ஏற்ற வேண்டும்' என்பது இரண்டாவது அசைவு. 'சிலருக்குத் தூக்கு தண்டனையும் கொடுக்கலாம்' என்றும் சைகை செய்தார். 'அவர்களைத் துருவித் துருவி விசாரிக்க வேண்டும்' என்பது அடுத்த ஜாடை. 'எல்லாத் துறையிலும் ஊழல் மிகுந்து விட்டது. ஒட்டடை அடிப்பதுபோல் ஊழல் பேர்வழிகளைப் பணி நீக்கம் செய்ய வேண்டும்' என்பது கடைசி சைகை.

"அதற்கு என் தம்பி, என் தமையன் தான் இதையெல்லாம் கண்டுபிடித்தான். அவரவர் தலைவிதிப்படி தண்டனை பெறுவர் என்று என்னைக் காட்டி ராஜாவிடம் சைகை செய்தான். அரசர் என்னை உளவுத் துறை அதிகாரியாக நியமிப்பதாக தலை அசைத்தார்" எக்ஞன் முடிக்கவும் அத்தனை பேரும் அவன் காலில் தடாலென விழுந்தனர்.

"எங்களை மன்னர் தண்டிக்காமல் காப்பாற்ற வேண்டும். நாங்கள் இனி லஞ்சம் வாங்கமாட்டோம். ஊழல் செய்ய மாட்டோம். இதுவரை தவறான முறையில் சேர்த்த பொருளை உங்களிடம் ஒப்படைத்து விடுகிறோம்" என்று மன்றாடினர்.

எக்ஞன் சற்றே பிகு செய்து பிறகு சம்மதித்தான். நாற்பது லட்சம் பவுன்கள் வந்து குவிந்தன. அவ்வளவையும் கொண்டு போய் மன்னனிடம் ஒப்படைத்து நடந்ததைக் கூறினான். அரசர் அவன் புத்திக்கூர்மையை மெச்சி அவன் பொய்யாகச் சொன்ன உளவுத்துறை அதிகாரிப் பதவியை நிஜமாகவே கொடுத்தார். நேர்மையாக நடந்து எங்கும் தவறு நேராதபடி கண்காணித்து நல்ல பெயர் வாங்கினான்.

ஏமாளன் தான் சொன்னதாலேயே அரசன் அண்ணனுக்கு வேலை தந்ததாக அனைவரிடமும் பெருமை அடித்துக் கொண்டிருந்தான்.



ருக்மிணி கல்யாணம்!

கோபம் வந்தால் சில பேருக்கு என்ன செய்கிறோம் என்பதே தெரியாமல், தப்புக் காரியம் பண்ணி விடுவார்கள்! அந்தச் சமயத்தில், உண்மையான நண்பனாக இருந்தால் தயங்காமல் அந்தத் தவறைச் சுட்டிக்காட்டி திருத்துவது நம் கடமை. இதை பாகவதத்தில் ருக்மிணி கல்யாணம் கதை நமக்கு உணர்த்துகிறது.

விதர்ப்ப தேச அரசனான வீஷ்மகனுக்கு, ருக்மி முதலான ஐந்து புதல்வர்களும் ருக்மிணி என்ற பெண்ணும் இருந்தனர். ருக்மிணி, இளம் வயதிலிருந்தே கண்ணனின் வீர தீரப் பிரதாபங்களைப் பற்றி கேள்விப்பட்டு அவனையே கல்யாணம் செய்து கொள்ள விரும்பினாள். இதை அறிந்த அவள் பெற்றோரும் அதற்குச் சித்தமாயிருந்தனர்.

ஆனால் ருக்மிணியின் சகோதரன் ருக்மி, அதைத் தீவிரமாக எதிர்த்தான். அவன், சிசுபாலன், ஜராசந்தன் போன்ற பொல்லாத அரசர்களுடன் நட்பு கொண்டு, கண்ணனை எதிரியாகக் கருதி வந்தான். ருக்மிணியோ தன் சகோதரனால் தன் திருமணம் தடைபடும் என உணர்ந்து, கண்ணனுக்கு ஒரு கடிதம் எழுதி, ஓர் அந்தணன் மூலம் கொடுத்து அனுப்பினாள். அதைப் படித்த கண்ணன் மனம் மகிழ்ந்து, ருக்மிணியை மீட்டு வரத் தீர்மானித்தான்.

இதற்கிடையில் ருக்மிணியின் அழகை நேரில் காணும் நோக்கில் விதர்ப்ப தேசத்துக்கு சிசுபாலன், ஜராசந்தன் முதலான சில அரசர்கள் பரிவாரங்களுடன் வந்தனர். அவர்கள் கண் எதிரேயே ஓர் அதிசயம் நடந்தது.

ருக்மிணி துர்க்கை கோயிலுக்குச் சென்று, 'கண்ணனை மணம் புரிய வேண்டும்' என்ற தன் விருப்பத்தைப் பூர்த்தி செய்யுமாறு அம்மனை வேண்டிக் கொண்டு வெளியே வந்தாள். அப்போது திடுமென்று கண்ணன் தேரோட்டிக் கொண்டு வந்து ருக்மிணியின் கரம் பற்றி தேரில் ஏற்றிக் கொண்டு விரைந்தான்.

தங்கள் கண் எதிரேயே ருக்மிணி கவரப்பட்டதைப் பார்த்த சிசுபாலன் முதலான அரசர்கள் கோபம் கொண்டு, கண்ணனைப் பின் தூரத்திச் சென்றனர். இதற்குள் பலராமன் கண்ணனுக்குத் துணையாக வந்து சேர்ந்தான். பெரும் யுத்தம் நடந்தது. சிசுபாலன், ஜராசந்தன் முதலானோர் தாக்குப் பிடிக்க முடியாமல் பயந்து ஓடி விட்டனர். ஆனால் ருக்மி மட்டும் எதிர்த்து நின்று, கடும்போர் புரிந்தான். அதன் முடிவில் கண்ணன் அவனைக் கொல்ல முற்பட்ட போது, ருக்மிணி தன் சகோதரனுக்காக மன்றாடினாள். கண்ணன் அவனைக் கொல்லாமல் விட்டபோதிலும் தேர்க்காலில் கட்டி அவமானப்படுத்தினான்.

அச்சமயம் பலராமன், ''கண்ணா! எவ்வாறாயினும் ருக்மி நம் உறவினன் ஆகிவிட்டான். அவனை மன்னித்து விட்டு விடு. கோபத்தைத் தணித்துக் கொள்'' என்று சமாதானப்படுத்தி நல்ல வார்த்தைகள் சொன்னான். கண்ணனும் பலராமனின் யோசனையை ஏற்றுக் கொண்டு ருக்மியை விடுதலை செய்து அனுப்பினான்.


பின்னர் கண்ணனுக்கும் ருக்மிணிக்கும் தடபுடலாகக் கல்யாணம் நடந்தது.

கண்ணன் இவ்வளவு பெருந்தன்மையாக நடந்து கொண்ட போதிலும் ருக்மி மனம் மாறவில்லை; கண்ணனைப் பழிவாங்குவதாகக் கருவிக் கொண்டே போய்ச் சேர்ந்தான் என்பது வேறு கதை! மகாவிஷ்ணுவின் அவதாரமான கிருஷ்ண பரமாத்மாகூட, பலராமனின் அறிவுரையை ஏற்றுக்கொண்டு தம்மைத் திருத்திக் கொள்ளத் தயாராக இருந்தார் என்பதுதான் இந்தக் கதை!

- ஆசிரியர்

கதை கதையாம் காரணமாம்...

வியக்க வைக்கும் விளையாட்டு உலகம்



போரினால் பல சாம்ராஜ்யங்கள் சரிந்ததை நாம் வரலாற்றில் படித்திருக்கிறோம். ஆனால் சதுரங்கம் (Chess) ஆட்டம் பல நாடுகளின் தலைவிதியை நிர்ணயம் செய்திருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கேரளாவில் நடந்த சம்பவம் இது. இரு குறுநில மன்னர்கள், தங்களது செல்வாக்கையும் வீரத்தையும் நிரூபிக்க, போர்க்களத்தை நாடாமல் சதுரங்கப் போட்டிக்குத் தயாராகி விட்டார்கள். யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களுக்கு எதிரணியின் நாடு சொந்தமாகிவிடும். போர் புரிவதால் ஏகப்பட்ட பொருட்சேதம், உயிர்சேதம் ஏற்படுமல்லவா! அதைத் தவிர்க்கத்தான் இந்த ஏற்பாடு. இந்தப் போட்டியில் தோற்கவிருந்த ஒரு ராஜா, அவரது மனைவி கொடுத்த டிப்ஸின் அடிப்படையில் காய்களை நகர்த்தி வெற்றி பெற்றுவிட்டார். போட்டியை மேல் மாடத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த அரசி குழந்தையைத் தாலாட்டி தூங்க வைக்கும் பாணியில் பாட்டுப் பாடி தனது கணவருக்கு வழி காட்டினாராம். கணவர் வென்றார்! நாடு காப்பாற்றப்பட்டது.



• விஜயலட்சுமி

சதுரங்க ஆட்டம் ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவில் தோன்றியது என்கிறார்கள். இதன் பாட்டனார் மகாபாரதத்தில் ஆடப்பட்ட பகடை ஆட்டம் என்று சொல்வதும் உண்டு. குறிப்பாக அசோகர் காலத்தில் சதுரங்கம் எங்கும் கோலோச்சியது. பாரதத்தின் வடமேற்குப் பகுதியிலிருந்த பல சிற்றரசர்கள் சதுரங்கப் பைத்தியங்களாக இருந்தார்களாம். புத்தத் துறவிகள் ஆன்மிகப் பணிகளை மறந்துவிட்டு விகாரங்களில் சதா சதுரங்கம் ஆடிக் கொண்டிருந்ததால் சிறிது காலம் சதுரங்கம் தடை செய்யப்பட்டிருந்ததாம்.

வடநாட்டைச் சேர்ந்த ஸர் உமர் ஹயாத்கான் என்ற சிற்றரசர் மிர் சுல்தான் கான் என்ற செஸ் வீரரை உற்சாகமூட்டி லண்டனுக்கெல்லாம் அழைத்துச் சென்று போட்டிகளில் பங்கேற்க வைத்தார். சுல்தான் கான் 1933லேயே உலகத்தின் சிறந்த வீரராகக் கருதப்பட்டார். அதேபோல ஹைதராபாத் நிஜாம் மன்னர், தன்னிடம் வேலை பார்த்த முகமது கசன் என்பவரின் திறமையை அறிந்து அவரை ஊக்குவித்து சிறந்த சாம்பியனாக்கினார். இப்படி பல அரசர்கள், செஸ் ஆட்டத்



• காஸ்பரோவ்



• ஆனந்த்



இங்கிலாந்தில் ராணி என்றழைக்கிறார்கள். அங்கு ராணிதானே அதிகார மையம்.

பெர்ஷிய மொழியில் சதுரங்கத்துக்கு ஷா.மாத் என்றும் இந்தியில் ஷத்ரன்ஜ் என்றும் சொல்வார்கள். துவக்க காலத்தில் சதுரங்கத்தை நான்கு பேர் ஒரே சமயத்தில் ஆடி வந்தார்கள். பின்னர் அது இருவருக்கிடையே நடக்கும் போட்டியாக உருவானது. நாட்டுக்கு நாடு ராஜாவுக்கு உரிய இடம் செஸ் கட்டங்களில் மாறுபடுகிறது. ராஜாவின் உயரம் மூன்றே முக்கால் அங்குலம் இருக்க வேண்டும். போட்டிகளில் அங்கீகரிக்கப்பட்ட செஸ்போர்டின் நீள அகலம் 19 அங்குலம். "செஸ் ஆட்டத்தைக் கற்றுக் கொள்ளத் துவங்க சரியான வயது ஏழு" என்கிறார் மானுவேல் ஆரன். இவர் ஒன்பது முறை

சாம்ராஜ்யங்களை வென்ற சதுரங்கம்!

துக்குத் தொடர்ந்து ஆதரவு கொடுத்து வந்திருக்கிறார்கள்.

சதுர் என்றால் நான்கு; அங்கம் என்றால் ஒரு நாட்டுப் படையில் இடம் பெற்றிருக்கும் நான்கு அணிகளைக் குறிப்பது. காலாட்படை, குதிரைப்படை, யானைப் படை, தேர்ப்படை ஆகியவைதான் இவை. போர்க்களத்தின் அணிவகுப்பைப் பிரதிபலிக்கும் இவைதான் செஸ் போர்டிலும் பிரதிநிதித்துவம் பெறுகின்றன. தேர்ப்படையைப் பிரதிபலிக்கும் காய், பின்னர் பிஷப் என்று அழைக்கப்பட்டது. இந்த மாறுதல் இங்கிலாந்தில்தான் செய்யப்பட்டது. ஒரு காலத்தில் சமூகத்தில் பிஷப் மிகவும் சக்தி வாய்ந்த மனிதராக இருந்தபடியால், அவரது பிரதிநிதித்துவம் செஸ்போர்டில் கொண்டு வரப்பட்டது. அதேபோல நாம் மந்திரி என்று சொல்லும் காயை



• மானுவேல் ஆரன்

தேசிய சாம்பியனாக வென்று வாகை சூடியவர். சர்வதேச போட்டிகள் பலவற்றில் வென்று இண்டர்நேஷனல் மாஸ்டர் என்ற பட்டம் பெற்றவர். சென்னையில் சிறுவர், சிறுமியருக்கு செஸ் கற்றுத் தர அகதமி ஒன்றை நடத்துகிறார். ஆனால் இவரிடம் கற்றுக் கொள்ள வருபவர்கள் முதலில் ஒவ்வொரு காய்களின் நகரும் பாணியை (movements) தெரிந்து கொண்டுதான் வர வேண்டுமாம். அப்படியென்றால் இவர் சொல்லித் தருவது?

"ராஜாவை எப்படி நகர முடியாமல்

மடக்கி முடக்குவது என்பதைத்தான் நாங்கள் சொல்லித் தருவோம். உங்களிடம் உள்ள இரண்டு யானைகளைக் கொண்டு, எதிர் அணி ராஜாவை மடக்குவது; ஒரு யானை, ஒரு ராஜாவைக் கொண்டு எதிர் ராஜாவை மடக்குவது; இரண்டு பிஷப்பை வைத்துக்கொண்டு ஆடி எதிர் ராஜாவை மடக்குவது; ஒரு அமைச்சர் மட்டும் வைத்துள்ள நீங்கள் ஒரு நகர்த்தலிலேயே (Move) , எதிர் ராஜாவை மடக்கும் சாகசம் என்று பல் வேறு யுக்திகளைச் சொல்லிக் கொடுப்போம்'' என்கிறார் ஆரன். தொடர்ந்து ஆட, ஆட, பளீர் ஐடியாக்கள் தோன்றும். சொல்லித் தருவதைப் பெண்கள் சட்டென்று கிரகித்துக் கொள்கிறார்கள். ஆனால் இளைஞர்கள்தான் புது, புது யுக்திகளைச் செயல்படுத்துகிறார்கள்'' என்கிறார் இவர்.

''ஒரு செஸ் வீரர் ஆடும்போது முக்கியமாக, நடுவில் இருக்கும் நான்கு கட்டங்களைத் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும். பிஷப்பையும், குதிரையையும் எவ்வளவு வேகமாக முன்னுக்குக் கொண்டு எதிர் அணி ஏரியாவில் ஊடுருவிப் போகிறீர்களோ அந்த அளவுக்கு வெற்றி வாய்ப்பு அதிகரிக்கும். எதிரணியின் காய்களை முடக்குவதே நோக்கமாக இருக்க வேண்டும். வேகமாக ஆடலாம்; ஆனால் விவேகமும் வேண்டும்'' என்று சொல்லும் ஆரன், அவரது தாத்தாவிடம் செஸ் கற்றுக் கொண்டாராம். செஸ் போட்டியில் ஒவ்வொரு வீரருக்கும் தலா இரண்டு மணி நேரம் ஆட வாய்ப்பு கொடுக்கப்படுமாம். அதற்கென்று தனியான கடிகாரம் உண்டு.

இந்தியாவைப் பொறுத்த மட்டில் செஸ் ஆட்டத்தில் சாதனை புரிந்தார் ஆனந்த். பதினாறு வயதிலேயே ஆசிய சாம்பியனான அவர் இப்போது கிராண்ட் மாஸ்டராகி, உலகிலேயே சிறந்த பத்து ஆட்டக்காரர்களுள் ஒருவராகத் திகழ்கிறார். இவரைத் தவிர, பருவா, சசி கிரண் ஆகியோர் கிராண்ட் மாஸ்டர்களே. பெண்களில் விஜயலட்சுமி கிராண்ட் மாஸ்டராகி சாதனை புரிந்திருக்கிறார். செஸ் ஆட்டத்தில், ரஷ்யர்கள் கில்லாடிகள். குறிப்பாக ஸ்பாஸ்கி, காஸ்பரோவ் போன்ற வீரர்கள் ரஷ்யர்களே. 1972ல், பாபி பிஷருக்கும் ஸ்பாஸ்கிக்கும் நடந்த மோதல் செஸ் வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. அதில் பிஷர் வென்றார். அதன்பிறகு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் செஸ் ஆட்டத்துக்கு மீண்டும் ஒரு மவுசு ஏற்பட்டது. கடைகளில் செஸ்போர்டுகூட கிடைக்காமல் போனது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

அதிகமாகச் செலவு வைக்காத விளையாட்டு செஸ். ''உங்களுக்கு ஆட்டத்தின் மீது ஒரு பற்று இருந்தால் வேகமாக பிக் அப் செய்து கொள்ளலாம். இப்போது கம்ப்யூட்டர் ப்ரோக்ராம் செய்யப்பட்ட போட்டிகள் நிறைய இடம் பெற்றிருக்கின்றன. மென்பொருள் (Software) வாங்கி வைத்துக் கொண்டால் உங்கள் வீட்டு கம்ப்யூட்டரிலேயே தனியாக ஆடிக் கொள்ளலாம். அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்தால் ஆட்டமும், யுக்திகளும் கைவசமாகும். ஆர்வமுள்ளவர்கள் எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் என்னைத் தொடர்பு கொள்ளலாம்; சொல்லித் தர நான் ரெடி'' என்கிறார் ஆரன். செஸ் ஆட்டத்திற்கென்று ஒரு பத்திரிகை நடத்துகிறார் இவரது மகன் அரவிந்த் ஆரன்.

— ப்ரியன்

படங்கள்: ராஜன்

ஓவியப் போட்டி

நமக்கெல்லாம் மிகவும் பிடித்த, நம்முடைய மூதாதையரான 'குரங்கார்' தான் இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு. குரங்குகள் கூட்டமாக இருக்கலாம்; மரத்தில் ஏறலாம்; பழம் சாப்பிடலாம்... இப்படி எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஓவியம் வண்ணத்தில் இருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முகவரியை மறக்காமல் குறிப்பிடுங்கள்.

கடைசி தேதி 5.08.2002



விருது

தென்னாப்பிரிக்காவின் முன்னாள் அதிபரும் நிறவெறிக்கு எதிராகத் தொடர்ந்து போராடியவருமான நெல்சன் மண்டேலாவுக்கு அமெரிக்காவின் மிக உயரிய சிவிலியன் விருது வழங்கப்படுகிறது.

உயிரைக் காப்பாற்றிய ஸீல்

இங்கிலாந்தில் உள்ள தீஸ் நதிக் கரையோரம் அல்சேஷன் நாய் ஒன்று காயம்பட்ட நிலையில் நின்று கொண்டிருந்தது. திடீரென ஆற்றில் பெருக்கெடுத்து ஓடிய வெள்ளத்தில் நாய் சிக்கிக் கொண்டது. கரையேற முடியாமல் நாய் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது ஒரு ஸீல் தண்ணீருக்கு மேல் வந்தது. நாயின் அருகில் சென்று தனது தலையால் நாயைத் தள்ளித் தள்ளி கரை சேர்த்து விட்டுச் சென்றது. இந்த அதிசயமான நிகழ்ச்சியைப் பலரும் பார்த்து வியந்திருக்கின்றனர்.

கோகுலம் நியூஸ்

படிக்கும் லாமா

திபெத்திய பஞ்சன் லாமாவாக சீனா, மாணவர் ஒருவரை நியமித்துள்ளது. அவர் கடவுள் வழிபாட்டில் மட்டுமல்ல; கணிப்பொறி பயன்பாட்டிலும் சிறந்து விளங்குகிறார். 13 வயதாகும் 11வது பஞ்சன் லாமா அதிகாலை எழுந்து ஆன்மிக, மெய்ஞ்ஞான சாஸ்திரங்களைக் கற்கிறார். அத்துடன் நவீன கல்வியிலும் தமது திறமையை வளர்த்துக் கொள்ள விரும்புகிறார். கம்ப்யூட்டர் கல்வி பயிலும் இவர் விளையாட்டிலும் அதிக ஆர்வம் கொண்டுள்ளார்.

சாதனை ஏலம்!

ரோமானியர்களின் கடவுளான வீனஸின் பழங்கால உருவச் சிலை 56 கோடி ரூபாய்க்கு ஏலம் போனது. லண்டனில் நடந்த ஏலத்தில் சலவைக் கல்லால் ஆன இச்சிலையை 56 கோடிக்கு ஒருவர் வாங்கினார். இது ஒரு உலக சாதனையாகும். கி.மு. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜிப்சம் கல்லினால் செய்யப்பட்ட ஒரு சிலை 1994ஆம் ஆண்டு 50 கோடிக்கு ஏலம் போனது. அந்தச் சாதனை தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது.

ஞாபகம் இருக்கிறதா?

இந்தோனேஷியாவில் 1999 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்றது. இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் டெய்லர் நெல்சன் சாஃப்ரெஸ் என்ற அமைப்பு ஓர் ஆய்வை நடத்தியது. ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட 3580 பேரில் 4 சதவீதம் பேர்தான் தாம் தேர்ந்தெடுத்து அனுப்பிய எம்.பி.யின் பெயரைக் கூறினர். மற்றவர்களுக்குப் பெயர் மறந்தேவிட்டது. ஏதாவது ஒரு எம்.பி.யின் பெயரையாவது கூற முடியுமா என்ற கேள்விக்கு 86 சதவீதம் பேருக்கு ஒருவர் பெயர் கூடத் தெரியவில்லை!

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-


ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடை : 1.மேஜை டிசைன் 2. நடப்பவரின் ஷூ 3. சட்டை பட்டன் 4. கடிகாரம் 5. ஐஸ்கிரீம் கப்

வீட்டுக்குள் இருக்கும் பொருட்களைக் கண்டுபிடியுங்கள்!



விடை : பீரோ, மின் விசிறி, கடிகாரம், கண்ணாடி, விளக்கு, டீ.வி., கட்டில், மேஜை



''எப்பவுமே 'போனதை' நினைச்சுக் கவலைப்படாதேடா. அதெல்லாம் திரும்பி வராது.''

''பத்திரிகைக்கு நான் அனுப்புறதெல்லாம் திரும்பி வருதே..?''

- மதி கணேஷ், உசிலம்பட்டி





Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2002'
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 ' Registered as a Newspaper in Srilanka